Vol.2, Issue 11 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

ஏப்ரல் 2020

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

# COVID-19ற்கு ரோட்டரியின் நிவாரணப்பணி



RC காட்டுமன்னார் கோவில், RID 2981, உறுப்பினர்கள் அருகிலுள்ள கிராம மக்களுக்கு மளிகை சாமான் மற்றும் காய்கறிகள் வழங்கினர்.

# உள்ளே


**12** **100 சிறந்த ஆண்டுகள்: RC கல்கத்தா**
100 ஆண்டுகளை நிறைவுசெய்கிறது RC கல்கத்தா: பழைய நினைவுகளில் ஒரு பயணம்.

**26** **RC கல்கத்தாவின் திட்டங்கள், முக்கியத்துவங்கள்**
RC கல்கத்தா பதிவுசெய்யப்பட்டு 100வது ஆண்டைக் கொண்டாடுகிற இந்நேரத்தில், அதன் கவனம் ஆரோக்கியம், தூய்மை மற்றும் எழுத்தறிவில் இருப்பது தெளிவாகப் புரிகிறது.

**32** **அயாத்தி அறக்கட்டளை வழியாகச் சிறப்புக் குழந்தைகளுக்கு நம்பிக்கை தரும் ரோட்டரி**
அயாத்தி வளாகத்தில், RC கொழும்பு வெஸ்ட் செய்த ஒரு TRF பன்னாட்டு நல்கையால் நிதியளிக்கப்பட்ட ஒலியியல் மையமொன்றைத் திறந்துவைத்தார் RI தலைவர் மார்க் மலோனி.

**38** **நூற்றாண்டுச் சந்திப்பில் மினி-கொல்கத்தாவின் மாயாஜாலம்**
நூற்றாண்டுச் சந்திப்பின் HoF ஒரு மிகப் பெரிய ஈர்ப்பாக அமைந்தது; மூன்று நாட்களிலும் பலரைக் கவர்ந்திழுத்தது.

**42** **அதிசயங்களை நிகழ்த்த ரோட்டரியன்களுக்கு உதவும் TRF**
உள்வரும் TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் மற்றும் அறங்காவலர் குலாம் வாஹன்தியுடன் இந்தியாவில் பன்னாட்டு நல்கைகள்பற்றி ஓர் உரையாடல்.

**48** **இளைஞர்களை விவசாயத் தொழில்முனைவோராக்கலாம்**
கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பில் இந்தியக் குடியரசுத் துணைத்தலைவருடைய பேச்சின் ஒரு சுருக்கம்.

**62** **75வது பிறந்த நாளைச் சிறந்த சேவைகளுடன் கொண்டாடியது RC பாவ்நகர்**
பிளாட்டினம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் சங்கத்தின் முக்கியத் திட்டங்கள்: ஓர் அறிமுகம்.

**66** **பெரிய திட்டங்களுடன் RC மெட்ராஸ் சவுத் 60 ஆண்டுகளை கொண்டாடுகிறது**
சங்கத்தின் மைல்கல் ஆண்டில், அதன் முக்கியமான திட்டங்களை நினைவுகூர்தல்.




















அட்டைப்படத்தில்: RC கல்கத்தா RID 3291ன் ஒரு திட்டம்.

# மடல்கள்

*மார்ச் இதழ் நூற்றாண்டு உச்சிமாநாட்டை பிரதிபலிக்கிறது*

*மார்ச் பதிப்பு ரோட்டரி தலைவர்கள் துணைவர்களின் அழகான படங்களுடன் வண்ணமயமான புகைப்பட ஆல்பத்தை ஒத்திருக்கிறது. நூற்றாண்டு ஆண்டு குறித்த ஆசிரியரின் குறிப்புடன் கொல்கத்தாவில் கொண்டாட்டங்களிலேயே இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. வைனி கிர்பாலின் லக்ஷ்மனுடனான ஒரு மாலை, புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட்டை நினைவுகூர ஒரு வாய்ப்பை அளிக்கிறது. ரோட்டேரியர்கள் தங்கள் பின்களை அணியும்படி கூறும் RIDN A S வெங்கடேஷின் அறிவுரை நல்ல யோசனையாகும்.*

*பிலிப் முலாபோன் M D*
*RC திருவனந்தபுரம்*
*சப்அர்பன் — RID 3211*

*ரோட்டரி இந்தியா தனது 100வது ஆண்டு பற்றிய ரஷீதா பகத்தின் தலையங்கம் சுவையாகயிருந்தது. ரோட்டரி நிகழ்வுகளை இந்தியாவில் ரோட்டரியர்கள் செய்வது போல் வேறு எந்த பகுதியிலும் கொண்டாடுவதில்லை.*




*RID பரத் பாண்ட்யா, கமல் சங்வியின் செய்திகள் தகவல்களை தாங்கியிருந்தன. ரோட்டரி இந்தியா தன் நூற்றாண்டு விழாவை $300 மில்லியன் மதிப்புள்ள சேவை திட்டங்களுடன் கொண்டாடுவதைக் கூறும் கட்டுரை சிறப்பாகயிருந்தது. வறுமையில் வாடும் 100 பெண்களுக்கு ஆட்டோக்களை நன்கொடையாக வழங்கிய RID 3232க்கு வாழ்த்துக்கள் போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய எடை குறைந்த காலிபர்ஸ் குறித்த அறிக்கை அருமை.*

*டேனியல் சிட்டிலப்பிள்ளி*
*RC கலூர் — RID 3201*

*PRIP ராஜேந்திர சாபூவின் கருத்துக்களை அவர் கட்டுரையில் படித்த பிறகு, ரோட்டரி குறித்த எனது கருத்து யு-டர்ன் எடுத்துள்ளது. நூற்றாண்டு உச்சிமாநாடு தொடர்பான அனைத்து கட்டுரைகளும் புகைப்படங்களும் சுவவையாக இருந்தன.*

*தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட RC மைசூர் மிட் டவுனின் A N அயன்னாவின் முயற்சிகளுக்கு வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதமும் சிறந்த கட்டுரைகள் மற்றும் படங்களுடன் வெளிவர காரணமான ஆசிரியர் ரஷீதா பகத்துக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.*

*M A அக்பர், RC மயிலாடுதுறை*
*கிங்ஸ் — RID 2981*

*ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் குறித்த தலையங்கம் சிறப்பாக இருந்தது. ரோட்டரியின் எதிர்காலத்தை இளைஞர்கள் காப்பதோடு*

## பிராவோ ரோட்டரி

பிப்ரவரி இதழில் பிரசுரமான மணிப்பாலில் ரோட்டரி தோல் வங்கியைப் பெறுகிறது என்ற செய்தி முக்கியமானது. மணிப்பாலின் கஸ்தூர்பா மருத்துவமனையில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின் HoD Dr ஸ்ரீகுமார் மூலம் மூன்றாம் நிலை தீக்காயங்கள் நோயாளிகளுக்கு நன்கொடை அளிக்கப்பட்ட தோல்களிலிருந்து சிகிச்சையளிக்க முடியும் என்ற செய்தி ஆறுதலாக இருந்தது.

தோலை மனிதர்கள் இறந்த ஆறு மணி நேரத்திற்குள் மீட்டெடுத்து, மற்றொருவரின் எரிந்த பகுதியை மூடி குணப்படுத்த பயன்படுத்துவதோடு தோலை பதப்படுத்தி ஐந்து ஆண்டுகள் சேமித்து வைக்கலாம். TRF திட்டமான இதற்காகும் செலவு கிட்டத்தட்ட ரூ.80.45 லட்சம்.

N ஜெகதீசன்
RC எலூரு — RID 3020

பிப்ரவரி இதழில் RID Dr பரத் பாண்ட்யா சமாதானத்தை மாநாடுகள் அல்லது கருத்தரங்குகள் மூலம் அடைய முடியாது, மாறாக தனிப்பட்ட உறவுகள் மூலமே பெற முடியும் என்று கூறுகிறார். RID கமல் சங்வியும் உலக அமைதிக்கான அவசியத்தை ஒப்புக்கொள்கிறார்.

Dr சரிதா ராவ் அடிப்படை வாழ்க்கை ஆதரவு படிப்புகள் பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார் மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கான எளிய நடவடிக்கைகள், கார்டியக் அரெஸ்ட், உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்வதற்கு முன் சரியான நேரத்தில் உதவி பெறுவது மிகவும் முக்கியமானது. இந்த பாடநெறி கற்பிக்கப்பட்டால், அது விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றும்.

சென்னையில் உள்ள ஏரிகளை மீட்டெடுப்பதில் RC மெட்ராஸ் பாராட்டத் தக்க முயற்சியை மேற் கொள்கிறது. இதனால் நீர் மாசுபடுதல்

அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று RI தலைவர் மார்க் மலோனியின் செய்தியில் நம்பிக்கை தெரிந்தது.

RI இயக்குநர்கள் ரோட்டரி வாட்டர் மிஷன் 2025 இல் கவனம் செலுத்தியுள்ளதோடு RID கமல் சங்வி பாதை கடினமானாலும் ஏறத்தான் வேண்டும் என்று பொருத்தமாகக் கூறியுள்ளார். TRFகளின் நன்கொடையாளர்களில் இருவர் - ராஜஸ்ரீ பிர்லா மற்றும் D ரவிசங்கர் - கொல்கத்தாவில் நடந்த நூற்றாண்டு உச்சி மாநாட்டில் கௌரவிக்கப்பட்டதை பற்றி ஆசிரியர் ஜெய்ஸ்ரீயின் கட்டுரை அருமை.

RC ராஜ்கோட் ரூ.50 லட்சம் செலவில் அமெரிக்காவின் RC கேரி கில்டேர், RID 7710யின் ஆதரவுடன் தோல் வங்கியை அமைத்துள்ளார். சிறந்த ரோட்டரி திட்டங்கள் குறித்த கட்டுரைகள் வரவேற்கத்தக்கவை.

S முனியாண்டி
RC திண்டுக்கல் ஃபோர்ட் — RID 3000

ரோட்டேரியர்கள் எங்கு சென்றாலும் ரோட்டரி பின்னை அணிவதற்கான காரணங்களை RIDN A S வெங்கடேஷ் பட்டியலிட்டுள்ளது சிறப்பானது. இதை பின்பற்றுவது அனைத்து ரோட்டேரியர்களையும் பிராண்ட் தூதராக மாற்றுகிறது.

Dr B நாகலிங்கம் பிள்ளை
RC நாகர்கோயில் — RID 3212

மார்ச் இதழில் இரண்டு கட்டுரைகள் அருமை. பிசினஸ் கேஷுவல் என்ற கட்டுரையில், RIPE ஹோல்கர் நாக் உயர்மட்ட RI பதவிக்கான நேர்காணலின் போது அவர் வகித்த பதவியை பட்டியலிடுமாறு கேட்க போது, "மாவட்ட ஆளுநராக வருவதற்கு முன்பு நான் எந்த பதவியையும் வகிக்கவில்லை, மாவட்ட தலைமையில் எனக்கு நியமனம் இல்லை'' என்று கூறுகிறார். ஆனால் இளைஞர் பரிமாற்ற திட்டங்களில் அவர் செய்த பணிக்காக ரோட்டரியர்கள் அவரை அறிந்திருந்தனர். திறமை இருந்தால், ஒருவர் மிக உயர்ந்த நிலைக்கு வர முடியும்.

இரண்டாவதாக, RIDN A S வெங்கடேஷ் இந்தியாவில் உள்ள அனைத்து ரோட்டேரியர்களும் வெளியே செல்கையில் பின்களை அணிவதன் மூலம் அவர்கள் நம் பிராண்ட் தூதராகிவிடுவார்கள் என்று கூறியுள்ளது ரோட்டேரியன்கள் பின்பற்ற வேண்டிய விஷயம் .

பிரதீப் காந்தி, RC இச்சல்கரஞ்சி சென்ட்ரல் — RID 3170

கொல்கத்தாவில் நடந்த நூற்றாண்டு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள முடியாத நம்மில் பலருக்கு, மார்ச் மாத இதழில் கட்டுரைகள் புகைப்படங்கள் மூலம் விரிவான தகவல்கள் கிடைத்தன. இந்த தனித்துவமான, வாழ்நாளில் ஒரு முறை நிகழ்ந்த ஒரு அருமையான செய்திக்காக ஆசிரியருக்கு நன்றிகள் . படிக்கும் போது, அந்த நிகழ்வில் பங்கேற்பது போல் உணர்ந்தேன். பாலிவுட் இசைக்கு நடனமாடும் RI பிரசிடெண்ட் மலோனியைப் பார்ப்பது மகிழ்ச்சியாக இருந்தது.

V G தியோதர்
RC நாசிக் — RID 3030

குறைவதோடு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

நவீன் R கார்க்
RC சுனம் —RID 3090

கோவிட்-19 தொற்று நோயின் காரணமாக அமெரிக்காவின் ஹொனலுலுவில் 2020 ஜூன் 6–10 தேதிகளில் திட்டமிடப்பட்ட ரோட்டரி சர்வதேச மாநாட்டை ரத்து செய்ய RI தலைவர் மார்க் மலோனியின் முடிவை பாராட்டுக்குரியது.

இந்த முடிவு அனைவரின் ஆரோக்கியத்தையும் பாதுகாத்ததோடு ரோட்டரி ஒரு மனிதாபிமான அமைப்பு என்ற பொது இமேஜை மேம்படுத்தியுள்ளது.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — RID 3262

**We welcome your feedback. Write to the Editor:**
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com**
**Click on Rotary News Plus in our website**
***www.rotarynewsonline.org* to read about more Rotary projects.**

HONOLULU HAWAII 2020

## RI மாநாடு ரத்து செய்யப்பட்டது

COVID–19 தொற்றுநோயின் அச்சுறுத்தலால், பங்கேற்பாளர்கள், ரோட்டரி ஊழியர்கள் மற்றும் ஹொனலுலு சமூகத்தின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் பாதுகாப்பதற்காக அமெரிக்காவின் ஹவாய், ஹொனலுலுவில் ஜூன் 6–10, 2020 அன்று திட்டமிடப்பட்ட வருடாந்திர மாநாட்டை RI ரத்து செய்துள்ளது. மேலும் விவரங்களுக்கு, riconvention.orgஐ பார்க்கவும்.



# தாய் சேய் நலன் காக்கும் ரோட்டரி

*அன்புள்ள சக ரோட்டரியர்கள் மற்றும் ரோட்டரியின் குடும்ப உறுப்பினர்களே,*

ரோட்டரியின் நீட்டிக்கப்பட்ட குடும்பம் மட்டுமல்லாமல், நாங்கள் சேவை செய்யும் சமூகங்களில் நாங்கள் உதவி செய்யும் குடும்பங்களையும் பற்றி சிந்திக்க நிறைய நேரம் செலவிடுகிறேன். உலகின் பல பகுதிகளில், தாய்மார்களும் குழந்தைகளும் பிழைக்க பல சவால்களை எதிர்கொள்கின்றனர். உலக சுகாதார அமைப்புப்படி, குறைந்த வருமானம் கொண்ட நாட்டில் ஒரு பெண் கர்ப்பம் அல்லது பிரசவத்தின்போது இறக்கும் ஆபத்து வளமான நாட்டை விட 120 மடங்கு அதிகம். உலகளவில் குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்து வந்தாலும் ஆண்டுதோறும் 4 மில்லியன் குழந்தைகள் பிறந்த 1 வருடத்தில் இறக்கின்றன.

ஏப்ரல் மாதத்தில், ரோட்டரி தனது கவனத்தை தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கு திருப்புகிறது. நாம் என்ன செய்யலாம் என்று யோசிக்கும்போது உத்வேகத்திற்கு நைஜீரியாவின் ரோட்டராக்ட் கிளப் ஆஃப் கலபார் சவுத் போன்ற கிளப்புகளைப் பார்க்கலாம். அது ரோட்டராக்ட் கிளப் ஆஃப் கானன் சிட்டி உடன் இணைந்து குழந்தைகளின் இறப்பைத் தடுப்பதற்கும், மகப்பேற்றிற்கு பின் தாய்மார்களுக்குதங்களையும் குழந்தைகளும் காக்கும் முறைகளைப் பற்றி கற்பிக்கும் விஷயத்தில் கவனம் செலுத்தியது. பங்களாதேஷில், டாக்கா நார்த்தின் ரோட்டரி கிளப், கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச அறுவை சிகிச்சைகள் மற்றும் மருந்துகளை வழங்குகிறது. தாய்மார்களையும் குழந்தைகளையும் காப்பாற்ற உதவும் இது போன்ற திட்டங்களைக் கண்டுபிடிக்க ideas.rotary.orgக்குச் செல்லுங்கள்.

கடந்த தசாப்தத்தில் மோதல்கள், வறுமை மற்றும் பேரழிவுகள் காரணமாக கோடிகணக்கான குடும்பங்கள் மற்றும் முழு சமூகங்களும் தங்கள் வீடுகளில் இருந்து எவ்வாறு அகற்றப்பட்டார்கள் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். உலகளாவிய அகதிகள் நெருக்கடியின் போது ரோட்டரி செயலாற்றியது.

கடந்த நவம்பரில் ஐக்கிய நாடுகள் சபையில் ரோட்டரி தினத்தின்போது, ஒரு ரோட்டரி அமைதி ஃபெல்லோ மற்றும் அகதி சமூகங்களுக்கு உதவ நடவடிக்கை எடுத்து வரும் ஐந்து ரோட்டரியர்களை நாங்கள் கௌரவித்தோம். அவர்களில் கலிபோர்னியாவின் ரோட்டரி கிளப் ஆஃப் மான்டேரி கேனரி ரோவின் இல்ஜ் கரன்காக்-ஸ்ப்ளேனும் அடங்குவார். துருக்கியில் பல கூடார முகாம்களைப் பார்வையிட்ட பிறகு, முகாம்களில் உள்ள குடும்பங்களுக்கான 1,000 ஜோடி குழந்தைகளின் காலணிகள் மற்றும் சாக்ஸை சேகரித்த ஒரு ரோட்டரி திட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார், பின்னர், அகதி குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான உலகளாவிய மானிய திட்டத்தை வழிநடத்தினார். மார்ச் மாதத்தில், கேவும் நானும் டொர்பாலில் ஒரு கூடார முகாமுக்குச் சென்று, துருக்கி மற்றும் கலிபோர்னியாவைச் சேர்ந்த ரோட்டேரியர்கள் சிரியா நாட்டு அகதிகளுக்காற்றும் நற்பணியை நேரில் பார்த்தோம்.

உலகெங்கிலும் உள்ள தாய்மார்களின் குழந்தைகள் மற்றும் அகதி சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அச்சுறுத்துகின்றன. ஆனால் நம்முடைய மிகப் பெரிய பலமான ரோட்டரி உலகை எவ்வாறு இணைக்கிறது என்பதை நாம் நினைவில் கொண்டால் தீர்வுகளைத் தேட ஆரம்பிக்கலாம். நம் சிந்தனை, வளங்கள், அர்ப்பணிப்பு மற்றும் நெட்வொர்க்குகள் மூலம், ரோட்டரியால் சவால்களை எதிர்கொள்ள இயலும்.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# பெண்கள் காணாமல்போனல்...

நான் மெக்சிகோ நகரத்துக்குச் சென்றிருந்தேன்; மெக்சிகப் பெண்கள் அமைப்புகளுடைய கூட்டமைப்பொன்றின் புதுமையான அழைப்பைக் கண்டு வியந்தேன், பாராட்டினேன்.

அப்படி என்ன அழைப்பு என்கிறீர்களா? இந்த ஆண்டுக்கான உலக மகளிர் நாளை(மார்ச் 8)க் கொண்டாடும்வகையில், பெண்கள் பொது இடங்களிலிருந்து காணாமல்போய்விடவேண்டும்: அலுவலகங்கள், பொதுப் போக்குவரத்து, மளிகைக் கடைகள், உணவகங்கள், ஷாப்பிங் மால்கள் எங்கும் பெண்கள் இருக்கக்கூடாது. பெண்களுக்கெதிரான வன்முறைக் கலாசாரம் வளர்ந்து வருவதை எதிர்க்கும்வகையில் அவர்கள் இவ்வாறு செய்யத் தீர்மானித்தார்கள்.

பெண்களுக்கெதிரான வன்முறை பெருகிவருவதைக் கண்டும் மெக்சிக அரசு அதைத் தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை என்று மெக்சிகப் பெண்கள் கருதினார்கள்; தங்களுடைய எரிச்சலையும் சினத்தையும் காட்டும்வகையில் இந்தப் புதுமையான எதிர்ப்பு முறையைப் பின்பற்றத் தீர்மானித்தார்கள். 'MeToo' போராட்டத்தைத் தொடர்ந்த மைல்கல் எதிர்ப்பாக இது கருதப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளில், மெக்சிகோவில் பெண்களுக்கு எதிரான கொடுமையான வன்முறை மிகப்பெரிய அளவில் பெருகியிருக்கிறது, இதில் கொலைகள், பாலியல் வன்முறைகளும் உண்டு.

மெக்சிகோவில் 21 மில்லியன் பதிவுசெய்யப்பட்ட பெண் ஊழியர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புதுமையான எதிர்ப்புமுறையைப்பற்றியும், மெக்சிகோவிலுள்ள பெண்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் விஷயங்களைப்பற்றியும் படித்தபோது, மெக்சிகோ, இந்தியா இடையிலான ஒரு நடுங்கவைக்கும் ஒற்றுமை எனக்குத் தோன்றியது. மெக்சிகோவில் கொல்லப்படும் பெண்களில் நான்கில் ஒருவர், தன்னுடைய சொந்த வீட்டில் இறக்கிறார்.

சோகமான விஷயம், இந்தியாவிலும் சிறுமிகள்/ பெண்கள் தங்களுடைய சொந்த வீட்டிலேயே கொடுமையான வன்முறைக்கு ஆளாவதை நாம் காண்கிறோம்தானே? பெண் சிசுக்கொலை இங்கு நிகழ்வதை நம்முடைய வீழ்ந்துவரும் பாலின விகிதம் நிரூபிக்கிறது, வரதட்சணை தொடர்பான வன்முறை, மனைவியை அடித்தல் போன்றவையும் இங்கு நிகழ்கின்றன. இந்திய வீடு பெண்களுக்குப் பாதுகாப்பான இடம் இல்லை என்று பல பெண் செயல்பாட்டாளர்கள்/ஆய்வாளர்கள் பல கருத்தரங்குகளில் திரும்பத்திரும்பச் சொல்வதை நாம் கேட்கிறோம்தானே?

நிர்பயா பாலியல் வன்முறை வழக்கு, இந்தியப் பெண்களின் ஒட்டுமொத்த மனநிலையை மாற்றியது, ஆண்களும் இதனால் மாறினார்கள், இந்தக் கொதிப்பு, சினம் மிகுந்த எதிர்ப்புகளாக வெடித்தது, இதனால், குற்றவியல் மற்றும் நீதி அமைப்புகள் இரண்டும் உடனே செயலுக்கு வந்தன, பாலியல் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டார்கள், அவர்கள்மீது வழக்கு நடத்தப்பட்டது, நான் இந்த ஆசிரியர் பக்கத்தை எழுதும் நாளன்று காலையில் அவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள்.

மெக்சிகப் பெண்கள் காணாமல்போகத் தீர்மானித்த நாளன்று, பெருநிறுவன அலுவலகங்களும் உணவகங்களும் மால்களும் தங்களுடைய வழக்கமான சிறப்பை இழந்தன, இதன்மூலம் பெண்கள் ஒரு வலுவான செய்தியை அனுப்பினார்கள்: பெண்களும், அவர்களுடைய கண்ணியமும், அவர்களுடைய பாதுகாப்பும், அவர்களுடைய வாழ்க்கைகளும் முக்கியமானவை.

COVID–19 ஒட்டுமொத்த உலகையும் தலைகீழாக மாற்றிவிட்ட இந்தக் கடினமான நேரங்களில், பெண்களால் அனைத்திலும் கொண்டுவர இயலுகிற உறுதி, அர்ப்பணிப்புணர்வு, வரம்புக்குட்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் இரக்கம் ஆகியவை முன்பு எப்போதையும்விடக் கூடுதலாகத் தேவை.

இந்த நெருக்கடியும் ஒருநாள் முடியும்; எதிரில் இருக்கும் கடினமான பாதையைக் கடந்து வரும் நாம் எல்லாரும், ஆண்களும், பெண்களும், முன்பைவிட மேம்பட்ட மனிதர்களாவோம் ஏனெனில், நம்முடைய முக்கியத்துவங்கள் எவையாக இருக்கவேண்டும் என்பதை இந்த வைரஸ் நமக்கு இன்னொருமுறை நினைவுபடுத்துகிறது நல்ல உடல்நலம், தூய காற்று, மேம்பட்ட தூய்மை, சுகாதாரம், பொறுப்புள்ள பழக்கவழக்கம், அனைத்துக்கும் மேலாக, நம்முடைய சக மனிதர்களைப்பற்றிய அக்கறையான சிந்தனை.



ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.


# RI இயக்குனர்



## ஒருவருக்கொருவர்

நலப் பராமரிப்பு மற்றும் நாம் அறிந்த "சமூகப் பழக்கம்" ஆகியவற்றுக்கு மாறுபட்ட ஓர் அணுகுமுறை மிகவும் முக்கியமானது என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது COVID–19 பெருந்தொற்று.

மிக முன்னேறிய நாடுகளில் கூட, நலப் பராமரிப்பு என்பது தனிநபர் நலப் பராமரிப்பில் கவனம் செலுத்துகிறது. இப்போது நாம் பொது நலப் பராமரிப்பைப்பற்றிச் சிந்திக்கவேண்டும், குறிப்பாக, நோய்கள் வெடிக்கின்ற ஒரு சூழலில்.

தொற்றுநோய்களைப் பொறுத்தவரை, பெரும் எண்ணிக்கையிலான நோயாளிகள் ஒரே நேரத்தில் மருத்துவமனைக்கு வருவதுதான் பிரச்னை. நாம் "உடல்சார்ந்த விலகியிருத்தலை" இப்போது மட்டும் பின்பற்றினால் போதாது, இனி நெடுங்காலத்துக்குப் பின்பற்றவேண்டும். நாம் பயணம் செய்யும் முறையும் நிரந்தரமாக மாறிவிடும். ஆனால், நம் பிராந்தியங்களில் உள்ள மாவட்டங்கள், சங்கங்கள் நன்கு செயல்படுகின்றன, மாற்றத்துக்கேற்பத் தங்களை மாற்றிக்கொண்டுள்ளன. பல மாவட்டங்கள் பயிற்சி நிகழ்வுகளை இணையத்தில் நடத்துகின்றன; இளம் தொழில் வல்லுநர்கள், பெண்களை ரோட்டரிக்கு ஈர்ப்பதற்கு இது ஒரு நல்ல வழியாக அமையலாம்.

ஏப்ரல் மாதம், தாய், சேய் நல மாதமாகும். உலக அளவில், நோயால் மிகப்பெரிய சுமையைச் சந்திப்பவர்கள் பெண்களும் குழந்தைகளும்தான். ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொல்லும் மிகப்பெரிய கொல்லிகள், வயிற்றுப்போக்கு, நிமோனியா. பல இடங்களில் பெண்களுக்கு, குறிப்பாக, அவர்கள் கர்ப்பமாக உள்ளபோது நலப் பராமரிப்பு கிடைப்பதில்லை.

குழந்தைப்பருவ நோய்களுக்கு எதிரான பாதுகாப்பை வழங்கும் முக்கியத் தடுப்பூசிகளை நாம் ரோட்டரியின்வழியாக வழங்குகிறோம்; தீவிர ஊட்டச் சத்துக் குறைபாட்டுடன் போரிடுகிறோம். உலக அளவில், ஒவ்வோராண்டும், 300,000 தாய்மார்கள் கர்ப்பம் மற்றும் குழந்தைப்பிறப்புடன் தொடர்புடைய சிக்கல்களால் இறக்கிறார்கள்; இந்தத் தாய்மார் மரணங்களில் 30,000 இந்தியாவில் நிகழ்கின்றன. இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், குழந்தைப்பேற்றுக்குப் பிந்தைய ரத்தக்கசிவு, உயர் ரத்த அழுத்தம், பிற மருத்துவக் காரணங்களைக் குறிப்பிடுகிறார்கள்; அத்துடன், சட்டவிரோதமான கருக்கலைப்புகள் மற்றும் திட்டமிடப்படாத கர்ப்பங்கள் (குறிப்பாக, வளர் இளம் பருவத்தினர் நடுவில்) ஒரு முக்கியக் காரணமாகும்.

பிறக்கின்ற ஒவ்வொரு 1,000 குழந்தைகளில் 22 பேர் ஒரு மாதம்வரை உயிர்வாழ்வதில்லை, 31 பேர் ஒரு வருடம்வரை உயிர்வாழ்வதில்லை. இவை அனைத்தையும் பல முனை அணுகுமுறையொன்றின்மூலம் தடுக்கலாம்; கல்வி, தாய்க்கும் குழந்தைக்கும் ஊட்டச்சத்து, கட்டுப்படியாகக்கூடிய நலப் பராமரிப்பை, தூய நீரை, முறையான தூய்மையை, சுகாதாரத்தை, சரியான நேரத்தில் சிகிச்சையை வழங்குதல் ஆகியவை இதில் இடம்பெறலாம். ஒவ்வொரு தாயும் முக்கியம்; ஒவ்வொரு குழந்தையும் முக்கியம் என்ற செய்தியின்மூலம், ரோட்டரியின்வழியாக உலகை உண்மையாக இணைக்கும் வாய்ப்பு நமக்கு உள்ளது.



Dr பரத் பாண்ட்யா
RI இயக்குநர் 2019-21

# களின் செய்திகள்

## மகத்தான ரோட்டேரியன்கள்



மன அழுத்தம் மிகுந்த நிச்சயமற்ற காலமான இந்தத் தருணத்தில் நாம் செய்யும் பணி மிகவும் முக்கியமானதாகும். கோவிட்-19 இன் நெருக்கடி காலத்தில், ரோட்டரியர்களாகிய நாம் பெரும் பங்கு வகிக்கிறோம்.

இந்த வைரஸை கட்டுபடுத்த ஒரே வழி சமூக தூரத்தை உறுதிசெய்வதுதான். வரவிருக்கும் நாட்களில், மனரீதியாகவும், உடல் ரீதியாகவும், நிதி ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்திற்கு நாம் சேவை செய்ய வேண்டியிருக்கும்.

### தாய் சேய் ஆரோக்கியம்

ஒவ்வொரு ஆண்டும் ஐந்து வயதிற்குட்பட்ட 5.9 மில்லியன் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு, போதிய உடல்நலம் மற்றும் மோசமான சுகாதாரம் காரணமாக இறக்கின்றனர். தாய் சேய்களுக்கு சிறந்த மருத்து வசதி வழங்குவதன் மூலம் பெண்களையும் குழந்தைகளையும் காக்கலாம்.

### குழந்தை பராமரிப்பு

ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவானி மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டர் மற்றும் ஐ.சி.யுவைத் திறக்க சமீபத்தில் நான் ராய்ப்பூரில் இருந்தேன். பிறவி இதய நோய்கள் உள்ள குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சைகள் செய்யும் திட்டத்தை செயல்படுத்துவதில் தீவரம் காட்டிய PDG ஹர்ஜித் சிங் ஹூரா மற்றும் DG ரஞ்சித் சைனி ஆகியோரை பாராட்டுகிறேன்

இந்த அறுவை சிகிச்சைகளை இலவசமாக செய்யும். ஸ்ரீ சத்ய சாய் மருத்துவமனைக்கு உதவுவதற்காக, மாவட்டத்தின் ரோட்டரியர்களிடம் ஒரு குழந்தைக்கு ரூ.25,000 ரொக்க பங்களிப்புடன் நிதியுதவி செய்யும் என் வேண்டுகோளை ஏற்று 300க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகளுக்கு ரோட்டேரியர்கள் உடனடியாக நிதியளித்தனர். 10 நிமிடங்களில் ரூ.75 லட்சம் திரட்டப்பட்டது.

இது போன்ற திட்டங்களே ரோட்டரியர்களை குறித்த எனது நம்பிக்கையை வலுப்படுத்துகின்றன.



**கமல் சங்கவி**
RI இயக்குநர் 2019-21


**Board of Permanent Trustees & Executive Committee**

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.



# RI இயக்குநர்களிடமிருந்து COVID–19 தொடர்பான செய்தி



Dr பரத்பாண்ட்யா



கமல் சங்வி

அன்புள்ள ரோட்டரி தலைவர்களுக்கு,

COVID–19 தொற்று உலகெங்கும் பரவி வருகிற இந்தச் சூழலில், ரோட்டரியன்கள், ரோட்டரி குடும்பங்களுடைய நலன், பாதுகாப்பு மிக முக்கியமானது. ஆகவே, கலந்துரையாடல்கள், பயிற்சி நிகழ்வுகள், நகரங்களுக்கிடையிலான சந்திப்புகள், கருத்தரங்குகள், ரோட்டரி கூட்டங்களைத் தள்ளிவைப்பது, வேறுவிதமாக நடத்துவது அல்லது ரத்துசெய்வது சிறந்தது என்று பரிந்துரைக்கப்படுகிறது. இயன்றபோதெல்லாம், அவற்றை இணையம்வழியாக நடத்தலாம்.

RI வாரியம் இதை முழுவதுமாக ஆதரிக்கிறது; உள்ளூர் நல அலுவலர்கள் மற்றும் அரசாங்கத்தின் அறிவுரை, வழிகாட்டுதல்களை மனத்தில் கொண்டு இதை முழுமையாகவும் முறையாகவும் கருத்தில் கொள்ளவேண்டும் என்று மாவட்டத் தலைவர்களையும் உள்வரும் மாவட்டத் தலைவர்களையும் ஊக்குவிக்கிறது.

இந்த ஆண்டுக்கான OCVக்கள் (அலுவல்ரீதியிலான சங்க வருகைகள்) அந்தந்த மாவட்ட ஆளுநர்களுடைய விருப்பப்படி தொடரலாம்.

உறுதிப்படுத்தப்படாத செய்திகளைப் பகிர்ந்துகொள்ளாதீர்கள், அல்லது, முன்வைக்காதீர்கள். தயவுசெய்து, அரசு/உள்ளூர் நல அலுவலர்களுடைய குறிப்புகள்/பரிந்துரைகளைப் பின்பற்றுங்கள்.

பாதுகாப்பாகவும் உடல்நலத்துடனும் இருங்கள்.

Dr பரத்பாண்ட்யா
RI இயக்குநர், 2019–21

கமல் சங்வி
RI இயக்குநர், 2019–21

# District Wise TRF Contributions as on February 2020

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 28,997 | 6,126 | 0 | 8,480 | 43,603 | 147 | 3.2 |
| 2982 | 23,858 | 16,434 | 161,362 | 720 | 202,375 | 110 | 3.6 |
| 3000 | 70,877 | 2,403 | 178,243 | 296 | 251,820 | 99 | 1.9 |
| 3011 | 80,877 | 1,189 | 113,262 | 0 | 195,328 | 59 | 1.7 |
| 3012 | 168,404 | 15,645 | 213,261 | 58,986 | 456,296 | 147 | 4.0 |
| 3020 | 32,871 | 54,247 | 0 | 12,029 | 99,147 | 114 | 3.0 |
| 3030 | 2,189 | 7 | 1,423 | 2,000 | 5,619 | 7 | 0.1 |
| 3040 | 8,370 | 245 | 8,949 | 0 | 17,564 | 13 | 0.6 |
| 3053 | 60,860 | 232 | 96,782 | 0 | 157,873 | 112 | 3.9 |
| 3054 | 11,420 | 408 | 36,994 | 0 | 48,822 | 32 | 0.6 |
| 3060 | 55,959 | 57,014 | 145,629 | 21,876 | 280,478 | 655 | 16.2 |
| 3070 | 33,797 | 705 | 14,930 | 0 | 49,432 | 170 | 5.5 |
| 3080 | 51,332 | 7,435 | 14,505 | 1,013 | 74,286 | 143 | 4.2 |
| 3090 | 13,777 | 1 | 0 | 1,000 | 14,779 | 34 | 1.7 |
| 3100 | 25,908 | 0 | 0 | 0 | 25,908 | 76 | 4.0 |
| 3110 | 26,740 | 1,810 | 1,045 | 0 | 29,594 | 31 | 0.8 |
| 3120 | 61,815 | 141 | 133,545 | 0 | 195,501 | 144 | 4.3 |
| 3131 | 169,435 | 4,179 | 291,407 | 43,250 | 508,271 | 649 | 12.4 |
| 3132 | 7,405 | 359 | 11,890 | 30,000 | 49,655 | 46 | 1.2 |
| 3141 | 547,821 | 14,059 | 944,853 | 137,392 | 1,644,125 | 728 | 13.3 |
| 3142 | 123,879 | 1,944 | 80,282 | 17,763 | 223,868 | 367 | 11.3 |
| 3150 | 71,970 | 6,511 | 35,504 | 195,368 | 309,353 | 578 | 16.2 |
| 3160 | 2,366 | 3,129 | 0 | 0 | 5,495 | 14 | 0.5 |
| 3170 | 62,952 | 6,247 | 24,986 | 0 | 94,185 | 244 | 4.4 |
| 3181 | 215,243 | 13,800 | 0 | 0 | 229,043 | 430 | 12.0 |
| 3182 | 76,437 | 7,606 | 24,493 | 0 | 108,536 | 300 | 9.6 |
| 3190 | 132,363 | 25,582 | 132,658 | 0 | 290,603 | 547 | 11.5 |
| 3201 | 45,980 | 28,812 | 211,435 | 31,242 | 317,469 | 177 | 3.3 |
| 3202 | 109,561 | 56,884 | 171,458 | 1,000 | 338,903 | 209 | 4.2 |
| 3211 | 20,829 | 57 | 53,322 | 436 | 74,644 | 27 | 0.6 |
| 3212 | 41,780 | 19,740 | 10,081 | 0 | 71,601 | 70 | 1.7 |
| 3231 | 3,076 | 1,720 | 3,083 | 0 | 7,879 | 40 | 1.1 |
| 3232 | 65,411 | 62,397 | 158,047 | 7,500 | 293,355 | 199 | 3.8 |
| 3240 | 167,298 | 35,801 | 33,004 | 0 | 236,103 | 284 | 9.4 |
| 3250 | 27,099 | 0 | (85) | 10,000 | 37,014 | 47 | 1.2 |
| 3261 | 5,261 | 0 | 28,670 | 0 | 33,931 | 5 | 0.2 |
| 3262 | 38,304 | 3,848 | 5,507 | 0 | 47,659 | 74 | 2.2 |
| 3291 | 68,572 | 3,238 | 44,159 | 0 | 115,969 | 72 | 2.0 |
| **India Total** | **2,761,092** | **459,956** | **3,384,683** | **580,350** | **7,186,081** | **7,200** | **4.9** |
| 3220 **Sri Lanka** | 58,363 | 8,057 | 49,909 | 1,000 | 117,329 | 117 | 6.0 |
| 3271 **Pakistan** | 3,401 | 8,167 | 20 | 0 | 11,588 | 10 | 0.7 |
| 3272 **Pakistan** | 10,858 | 992 | 300 | 0 | 12,150 | 42 | 2.5 |
| 3281 **Bangladesh** | 99,667 | 4,300 | 126,600 | 6,000 | 236,566 | 248 | 4.4 |
| 3282 **Bangladesh** | 31,532 | 14,977 | (5,198) | 2,000 | 43,312 | 70 | 1.5 |
| 3292 **Nepal** | 159,723 | 13,540 | 440,892 | 0 | 614,155 | 298 | 6.4 |
| **South Asia Total** | **3,124,636** | **509,989** | **3,997,206** | **589,350** | **8,221,181** | **7,985** | **4.8** |
| **World Total** | **77,458,812** | **20,591,478** | **16,737,344** | **27,962,529** | **142,750,164** | | |

Source: RI South Asia Office

# 100 சிறந்த ஆண்டுகள்: RC கல்கத்தா

ரஷீதா பகத்

நீண்ட பண்பாட்டுத் தொடர்ச்சி, புகழ்மிக்க தலைவர் வரிசை, பழைமை ஆகியவற்றில் RC கல்கத்தா, RID 3291ஐ நெருங்குவது உலகில் வேறெந்த ரோட்டரி சங்கத்துக்கும் எளிதில்லை!

உங்களுக்குத் தெரியுமா? இந்த ஆண்டு 100 வயதை நிறைவுசெய்யும் இந்தச் சங்கம், ஹூக்ளி ஆற்றின் மீது ஹௌராப் பாலம் கட்டப்படுவதற்குப் பங்காற்றியது. அத்துடன், இந்தப் பாலத்தைப் பராமரிப்பதற்காக அமைக்கப்பட்ட அரசுக் குழுவிலும் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவர் அதன்பிறகு நெடுங்காலத்துக்கு இடம்பெற்றிருந்தார்.

இந்தச் சங்கத்தில் பேசிய பெருமைக்குரிய தலைவர்களின் பட்டியலைக் கேட்டால் வியந்து போவீர்கள்; மகாத்மா காந்தியே இங்கு பேசியிருக்கிறார்.

இத்துடன், முன்னாள் தலைவர் ரித்விக் குப்தா இன்னொரு சுவையான தகவலை ரோட்டரிச் செய்திகளுக்குச் சொன்னார்: அன்னை தெரசா இறந்தபிறகு, "மிஷனரீஸ் ஆஃப் சாரிட்டி" அமைப்புக்கு இரண்டு 500,000 காசோலைகளின்வாயிலாக ஒரு மில்லியன் டாலர்கள் நன்கொடை வழங்கப்பட்டது. இதை வழங்கிய அமெரிக்கப் பெண்மணி ஒரு ரோட்டரியனுடைய மனைவி என்று நினைக்கிறேன் என்றார் ரித்விக் குப்தா, இவர் அடுத்தடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான காசோலைகளை வழங்கினார், RC கல்கத்தா அவற்றை இந்தத் தொண்டு நிறுவனத்துக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன்பிறகு, இந்தத் தொண்டு நிறுவனத்திற்குத் தலைமை தாங்கும் சகோதரி நிர்மலா, தாங்கள் பிறரிடமிருந்து போதுமான அளவு நன்கொடைகளைப் பெறுவதாகச் சொன்னார், ஆகவே, இந்தப் பெண்மணியைத் தயவுசெய்து பிற தொண்டு நிறுவனங்களுக்கும் நன்கொடை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்தியா முழுவதுமுள்ள ரோட்டரி அமைப்புகள் நம் நாட்டில் ரோட்டரியின் 100வது ஆண்டைக் கொண்டாடத் தொடங்கிய நேரத்தில், புத்தாண்டின்போது இசை, நடனம், உணவு, கொண்டாட்டம் நிறைந்த விழாவொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது இந்தச் சங்கம்.

இதன் புகழ்பெற்ற முன்னாள் தலைவர்களான குப்தா, PDG பிரபாத் ரொஹாத்கி, Dr V K சர்மா, நீலிமா ஜோஷி ஆகியோரையும், இப்போதைய சங்கத் தலைவரான பூர்ணேந்து ராய் சௌத்ரியையும் நான் சந்தித்துப் பேசினேன்.



இந்தியாவைச் சேர்ந்த முதல் RI தலைவரான நிதீஷ் லஹார்ரியை அனுப்பிய பெருமையும் இந்தச் சங்கத்துக்கு உண்டு. 1926ல் அவர் இச்சங்கத்தின் உறுப்பினரானார், ஒரே ஆண்டுக்குள், அதன் செயலாளராகும் முதல் இந்தியரானார்.

இச்சங்கத்தின் வரலாற்றுப் புத்தகம் அவரை அமைதியான, சற்று கூச்சப்படும் இயல்பைக் கொண்ட இளைஞர் என்று விவரிக்கிறது. தொடக்கத்திலிருந்தே இவர் ரோட்டரியில் ஆழமாகப் பணியாற்றத் தொடங்கினார்; இவர் ரோட்டரியனபிறகு முதல் இரண்டு ஆண்டுகளில் செயலாளர் பொறுப்பு வகித்தார், ரோட்டரித் தேர்தல் குழுவொன்றை உருவாக்கினார், குழு நூலகமொன்றுக்கான மையப்புள்ளியை அமைத்தார், சங்கத்தின் இதழான தி சகா-வுக்கு ஆசிரியரானார்.

விமான நிலையத்திலிருந்து, சங்கத் திட்டமொன்றின் தொடக்க விழாவுக்குச் சங்க உறுப்பினர் அமித் கோஷ் அவர்களுடைய காரில் சென்று கொண்டிருந்தேன். உள்ளூர் மருத்துவமனையொன்றுக்கு ரூ.25 லட்சம் மதிப்புள்ள ஒரு கேமெராவை நன்கொடையாக வழங்கும் திட்டம் இது. இந்தக் கேமெராவின்மூலம், உரிய காலத்துக்கு முன்பே பிறந்துவிட்ட குழந்தைகளிடையே கண்பார்வையிழப்பைத் தடுக்கலாம்.

ரோட்டரிச் சேவை தன்னுடைய ரத்தத்தில் கலந்தது எப்படி என்று அவர் விளக்கினார்: நான்கு ஆண்டுகளுக்குமுன்னால், அவர் ஒரு டாடா நிறுவனத்தின் நிதிப்பிரிவுத் தலைவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார், அப்போது, நான் என்னுடைய டாடா ஸ்டீல் IDயைக் காட்டினாலே போதும், இரும்பு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் அறைக்குள் இயல்பாக நடந்துசெல்லலாம், இந்த மானியத்தைப்பற்றிப் பேசுகிறேன், அல்லது, அந்த மானியத்தைப்பற்றிப் பேசுகிறேன் என்று விவாதத்தில் ஈடுபடலாம்.

ஆனால், சுந்தர்பன்ஸ் பகுதியில் உள்ள ஒரு கிராமத்துக்குச் சென்று, அங்குள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு அகரமுதலிகளை விநியோகித்த போது, மக்கள் இப்படியும் வாழ்கிறார்கள் என்பதை நான் தெரிந்துகொண்டேன். என் கண்கள் திறந்தன, நகரங்களும் ஆடம்பர வாழ்க்கையும்தான் இந்தியா என்ற நினைப்பு மாறியது.

டாடா குழுமத்தின் பல நிறுவனங்களில் CFO பொறுப்பை வகித்த அந்த மனிதரை, இந்த ஒற்றை அனுபவம் மாற்றிவிட்டது. உண்மையான இந்தியாவை நான் அறிந்தேன் ஓர் அகரமுதலி, அல்லது, ஒரு சூரிய ஒளி விளக்கு, அல்லது ஒரு கொசுவலை பல மக்களுக்கு எந்த அளவு மதிப்புமிக்கது என்று தெரிந்து கொண்டேன். ரோட்டரியன்களாகிய நாம் தருகிறவற்றை கிராமவாசி கள் எப்படி ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, நம் உதவியை அவர்கள் மதிக்கிறார்கள் என்பது தெரிந்தது ஒரே ஒரு



*RC கல்கத்தா தலைவர் தலைவர் பூர்னேந்து சௌத்ரி மற்றும் நூற்றாண்டு கமிட்டி தலைவர் சௌமன் ரே புருலியாவில் சந்தாலி பழங்குடியினர் குழந்தைகளுடன். இச்சங்கம் இங்கு 400 குழந்தைகளுக்கு தங்கும் வசதி செய்ய உள்ளது.*

ரஷீதா பகத்



RID *பரத் பாண்ட்யா மற்றும் மாதவி சங்கத்தின் நூறாவது ஆண்டு விழாவில்.*

## RLIயின் தொடக்கம்

*RC கல்கத்தாவின் மிக மூத்த உறுப்பினர்களில் ஒருவர், 86வயது PDG பிரபாத் கே ரஹோத்கி. RC கல்கத்தா பதிவுசெய்யப்பட்டு 100 ஆண்டுகளாவதை முன்னிட்டு உருவாக்கப்படும் நூற்றாண்டு மணியை ஆதரித்துள்ள இவர், இச்சங்கத்தின் வளமையான கடந்தகாலத்தைப்பற்றிய பல நினைவுகளை என்னிடம் விவரித்தார்.*

*1998–99ல் அவர் DG ஆனார். உண்மையில், நான் நெடுங் காலத்துக்கு எந்த ரோட்டரி அலுவலர் பொறுப்பையும் ஏற்க மறுத்துவந்தேன். ஆனால், ஒரு ரோட்டரியன் என்ற முறையில், பல ரோட்டரியன்களுக்கு அடிப்படையான சில விஷயங்கள் கூடத் தெரிந்திருக்க வில்லை என்பதை நான் கண்டுகொண்டேன்: ரோட்டரியிலிருந்து அவர்கள் என்ன பெறலாம், ரோட்டரிக்கு அவர்கள் என்ன வழங்கலாம்.*

*பலர் ரோட்டரியில் இணைகிறார்கள், சிறிது காலம் தங்குகிறார்கள், தங்களுக்கு நிறைவுதரும் எதையும் காணாமல் அங்கிருந்து வெளியேறி விடுகிறார்கள் என்பதை ரஹோத்கி கண்டார். இதை எண்ணி RI கவலைகொண்டது. ஆகவே, ரோட்டரி என்றால் என்ன, ரோட்டரியன்கள் இணங்கவேண்டிய விதிமுறைகள், கட்டுப்பாடுகள் என்ன, பதிலுக்கு அவர்கள் பெறக்கூடிய பலன்கள் என்னென்ன என்பவற்றை நம் ரோட்டரியன்களுக்குக் கற்றுத்தரக் கூடிய ஓர் ஆர்வமூட்டும் பயிற்சித் திட்டத்தை நாம் எல்லாரும் சேர்ந்து உருவாக்குவோம் என்றேன் நான்.*

*இது தான் RLI அல்லது ரோட்டரித் தலைமைப்பண்புகள் கல்வியமைப்பின் தொடக்கம். இங்கு ஒவ்வோராண்டும் 3–4 வெவ்வேறு பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. ஒவ்வோராண்டும் இப்பயிற்சிகளின்வழியாகச் சுமார் 150–200 ரோட்டரியன்கள் பயிற்சி பெறுகிறார்கள். 10 ஆண்டுகளில், RLI சுமார் 2,000 ரோட்டரியன்களுக்குப் பயிற்சியளித்திருக்கும் என்று நான் சொல்வேன், இவர்கள் இப்போது ரோட்டரியைப்பற்றி ஓரளவு அறிந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது என்னை அழைத்து, நல்லவேளை, நான் இந்தப் பயிற்சியில் சேர்ந்தேன் என்கிறார்கள்.''*

*இப்போது, இங்கு மூன்று பயிற்சி கள் வழங்கப்படுகின்றன, மற்றும் RLII ஒரு கல்வித் துணையமைப்பாக ஏற்றுக்கொண்டிருக்கிறது RI. இது ரோட்டரியின் பகுதி இல்லை, RIயின் துணையமைப்பு, ரோட்டரியைப்பற்றிய சரியான தகவல்களை வழங்கும் அமைப்பு.*■

போர்வைகூட அவர்களுக்குப் பெரிய விஷயம் என்கிறார் கோஷ்.

சுந்தர்பன்ஸில், நாம் பல திட்டங்களைச் செயல்படுத்துகிறோம். கொல்கத்தாவிலிருந்து அங்கு செல்ல 5–6மணிநேரமாகிறது: இரண்டுமணிநேரம் கார்ப்பயணம், அதன்பிறகு மூன்றுமணிநேரம் அல்லது அதற்குமேல் ஆற்றுப்பயணம்.

தன்னுடைய சங்கத்தின் சேவைத் திட்டங்களில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடும் இவர், RC கல்கத்தா பல மருத்துவக் கருவிகளை வழங்கியுள்ள ஒரு PHC (பொது நல மையம்)பற்றிப் பேசுகிறார். அங்கு எங்களுடைய போலியோ சொட்டுமருந்துகளைச் சேமித்துவைக்கும் குளிர்பதனப் பெட்டிக்குச் சூரிய ஒளி மின்சாரத்தை யும் நாங்கள் வழங்கியுள்ளோம். இப்படி ஒருவருக்கு அல்லது ஓர் அமைப்புக்கு நீங்கள் சூரிய ஒளி மின்சாரத்தைத் தந்தால், இன்னொரு வருக்கும் தரலாமே என்கிற கேள்வி எழுகிறது.

ஆனால், கொல்கத்தாவுக்கு இவ்வளவு அருகிலிருக்கும் இந்த இடத்தில் மின்சாரம் இல்லையா என்று நான் அவரைக் கேட்கிறேன். ஆமாம், அங்கு உண்மையில் மின்சார இணைப்பு உள்ளது, ஆனால், அந்த மின்சாரத்தில் 100-வாட் பல்ப்கூட வெறும் மெழுகுவர்த்தியைப்போல்தான் எரிகிறது என்கிறார் அவர்.

அந்தக் கிராமத்தில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் மின்சாரமில்லாமல் இருந்தன; அவற்றுக்கும், காவலர் மையமொன்றுக்கும் ரோட்டரியன்கள் மின்னொளி வழங்கியுள்ளார்கள்.

சென்ற ஆண்டு நாங்கள் காவல்நிலையத்துக்குச் சென்றபோது, உடனடியாகத் தேநீர்க் கோப்பைகள் வழங்கப்பட்டன. நாம் வழங்கிய சூரிய ஒளி மின்சாரத்தால், ஆற்றிலிருந்தே காவல் நிலையத்தைக் காணலாம்; அங்கு எரியும் பெரிய கண்ணாடி லாந்தர் விளக்கால், அந்தச் சிறு கிராமத்தில் குற்றச்செயல் விகிதம் குறைந்துள்ளதாகக் காவலர்கள் எங்களுக்குச் சொன்னார்கள். இதுதான் மின்மயமாக்கலின் தாக்கம் என்கிறார் கோஷ்.

சுந்தர்பன்ஸில் இன்னொரு கிராமத்தில், ஒரு ஜெர்மன் சங்கம் மற்றும் ஒரு பன்னாட்டு நல்கையுடன் இணைந்து, பிரசவத்துக்காக வரும் கர்ப்பிணிப்பெண்களுக்குத் துணையாக வருகிற குடும்ப உறுப்பினர்களுக்கான ஓர் இரவுத் தங்குமிடத்தை அமைத்துள்ளது RC கல்கத்தா. இந்தக் கிராமங்களில் நிறைமாத கர்ப்பிணிகள் முதலில் ஒரு மாட்டுவண்டியில் வருகிறார்கள், பின்னர் ஓர் ஆற்றின்வழியாக PHCக்கு வருகிறார்கள். அங்கு ஒரு பிரசவ அறையும், தாய், புதிதாகப் பிறந்த குழந்தைக்கான ஓர் அறையும் உள்ளது, இவை RCC தகடுகளால் ஆனவை.

ஆனால், கர்ப்பிணிப்பெண்ணுடன் வருகிற மற்றவர்கள், அவருடைய கணவர், உடன் வரும் மற்ற குழந்தைகளுக்குத் தூங்குவதற்கு இடம் ஏதும் இல்லாமல் இருந்தது. அந்தப் பிரச்னையை இந்த இரவுத் தங்குமிடம் தீர்த்துவைத்துள்ளது.

இரவுத் தங்குமிடத்துடன், LED விளக்குகள், அறுவைச்சிகிச்சைக் கருவிகளை ஆட்டோக்ளேவ் செய்கிற வசதிகளையும் இச்சங்கம் வழங்கியுள்ளது. இவை அனைத்தும் சூரிய ஒளி மின்சாரத்தால் இயங்குபவை.

இச்சங்கத்தின் பட்டியலில் அடுத்துள்ள விஷயம், உரிய காலத்துக்கு முன்பே பிறக்கும் குழந்தைகளுக்கான இன்குபேட்டர்கள் நம் சங்கத்தின் திட்டங்களை நான் மிகவும் விரும்புகிறேன் என்று மகிழ்கிறார் கோஷ்.

100-வயதான இந்தச் சங்கத்தில் அழிக்கமுடியாத முத்திரையைப் பதித்திருக்கிற, சங்கத்தின் புகழ்பெற்ற முன்னாள் தலைவர்களை நான் பேட்டியெடுத்தபோது, எல்லா உறுப்பினர்களும் இப்படி எண்ணுவதாகதான் தோன்றியது!



*சங்கத்தலைவர் சௌத்ரி டார்ஜீலிங்கில் கோர்கா புத்தப்பிட்ஷக்களுக்கு உணவு, உடை அளிக்கிறார்.*

33 நீண்ட ஆண்டுகளுக்கு RC கல்கத்தா உறுப்பினர், 2014–15ல் அதன் தலைவரான ரித்விக் குப்தாவிடம், குறிப்பிடத்தக்க பல திட்டங்களைக் கொண்டிருக்கும் ஒரு சங்கத்தின் தலைவராகச் செயல்படுவது சிரமமாக இருந்ததா என்று கேட்டேன். அவர் சிரிப்புடன் பதில்சொன்னார், எந்தச் சிரமமும் இல்லை இந்தப் பணி என்னுடைய எல்லா நேரத்தையும் எடுத்துக்கொண்டது. ஆனால், நம் குழுவுக்காக ஓராண்டுக்கு நம்மை வழங்கிவிடுவது சிரமமில்லையே!

PDG பிரபாத் கே ரொஹாத்கி அவரைவிட மூத்தவர், 1958லேயே இவர் இந்தச் சங்கத்தில் சேர்ந்து விட்டார், அப்போது இவருடைய வயது 26தான். இச்சங்கத்தின் வாழும் வரலாறாகக் கருதப்படுகிறவர் இவர்.

ரொஹாத்கி ரோட்டரியில் சேரக் காரணம், எங்கள் குடும்பத்தில் ரோட்டரி மிகுந்த மதிப்புடன் பார்க்கப்பட்டது. இவருடைய தந்தையும் சங்கத் தலைவராக இருந்தவர்.

தொடக்கத்தில், மூத்தவர்கள், உறவினர்கள் நிறைந்த ஒரு சங்கத்தில் பங்குபெறுவது இந்த இளைஞருக்கு வசதியாக இல்லை; ஆனால், விரைவில் இவர் ரோட்டரியை முழுமையாக ஏற்றுக்கொண்டுவிட்டார், எந்த அளவுக்கு என்றால், இவருடைய மனைவி சஷி பிரபா தன்னை இவருடைய இரண்டாம் மனைவியாக அறிமுகப்படுத்திக்கொண்டு மகிழ்வார், ஏனெனில், இவருடைய முதல் மனைவி ரோட்டரி.

தற்போது, தன்னுடைய சங்கமாகிய RC கல்கத்தா விக்டோரியாவின் இந்தப் பழம்பெறும் உறுப்பினர் மனத்தில் நித்தீஷ் லஹார்ரியைப்பற்றிப் பலப்பல நினைவுகள் உள்ளன. நான் ரோட்டரியில் சேர்ந்து சிறிது காலத்துக்குப் பிறகு, லஹார்ரியிடமிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது. அவர் என்னுடன் பேச விரும்புவதாகச் சொன்னார்.''

ஆகவே, மெட்ரோ சினிமாவின் முதல் தளத்திலிருந்த லஹார்ரியின் அலுவலகத்துக்குச் சென்றார் ரொஹாத்கி. இப்போது அந்த இடம் ஒரு துணிக்கடையாகிவிட்டது.

லஹார்ரி ஒரு மிகச் சுவையான மனிதர். வங்காளத் திரைப்படத்

# 100 ஆண்டுகளில் ரோட்டரியில் நிறைய மாறிவிட்டது

கல்கத்தா ரோட்டரி சங்கம் தன்னுடைய 100வது பிறந்தநாளைக் கொண்டாடுகிற நேரத்தில், அச்சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் சிலரிடம் நான் பேசினேன்; அன்றைய ரோட்டரியன் வாழ்க்கை எப்படி இருந்தது, இன்றைக்கு என்ன மாறியிருக்கிறது என்று கேட்டேன்.

தோழமை அதேபோல் இல்லை என்கிறார் முன்னாள் தலைவர் ரித்விக் குப்தா.

61 ஆண்டுகளாக இச்சங்கத்தின் உறுப்பினராக உள்ளவரும், வாழும் வரலாறு எனத் தன்னுடைய சங்கத்தில் அறியப்படுகிறவருமான PDG பிரபாத் ரஹோத்கி சற்று யோசிக்கிறார், பின்னர், பெருமூச்சு விட்டுவிட்டுச் சொல்கிறார்: நிறைய மாறி விட்டது; ஆனால், அதில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய விஷயம், இன்றைக்கு நம்முடைய ஒட்டுமொத்தச் சமூகத்தில் நெருங்கிய உறவுகள் கூட அந்த அளவுக்கு நெருக்கமாக இல்லை, காரணம், கூட்டுக் குடும்ப அமைப்பு உடைந்துவிட்டது. இது ரோட்டரியிலும் பிரதிபலிக்கிறது.''

பழைய நினைவுகளில் மூழ்கிய அவர் தொடர்ந்து கூறுகிறார், அப்போதெல்லாம், ரோட்டரி ஒரு சிறு கிராமத்தைப்போலிருந்தது; எல்லாரும் மற்ற எல்லாரையும் அறிந்திருந்தார்கள். உங்களுடைய மகிழ்ச்சிகள், வருத்தங்கள் பகிர்ந்துகொள்ளப்படும் என்பது கிட்டத் தட்ட இயல்பாக இருந்தது. எடுத்துக் காட்டாக உங்கள் குழந்தை எப்படி இருக்கிறார்? அவர் நன்கு தேர்வு எழுதினாரா? நாங்கள் குழந்தைகளின் பெயர்களையும் நினைவில் வைத்திருந் தோம், மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் ஒருவருக்கொருவர் பக்கத் துணையாக இருந்தோம். இன்றைக்கு அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை முற்றிலுமாக இல்லை என்று சொல்ல மாட்டேன், ஆனால்...''

எடுத்துக்காட்டாக, RC கல்கத்தாவில் முன்பு உறுப்பினர் களாக இருந்த அவருடைய பழைய நண்பர்கள் சிலர் இப்போது மும்பையில் வாழ்கிறார்கள், அவர்களுடன் தான் இன்னும் நட்பாக இருப்பதாகச் சொல்கிறார் அவர். நாங்கள் இன்னும் தொடர்பில் இருக்கிறோம். ஆனால், 10 ஆண்டுகளுக்குமுன்னால் வந்தவர்கள், பின்னர் இங்கிருந்து கிளம்பிச் சென்றவர்கள், அல்லது, வேறொரு நகரத்துக்கு மாறியவர்களைப்பற்றிச் சிந்தித்தால், அவர்களுக்கு என்னை நினைவிருப்பதில்லை.

40-50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த ரோட்டரியுடன் ஒப்பிடும் போது, இன்றைய ரோட்டரியின் நேர்வித அம்சங்களை வரையறுக்குமாறு கேட்கப்பட்டபோது, சிறிதும் தயங்காமல் பேசுகிறார் அவர். சேவைத் திட்டங்கள் மிகச்சிறப்பாகியுள்ளன என்பதில் ஐயமே இல்லை; இன்றைக்கு நாம் அவற்றை இன்னும் பெரிய அளவில் செய்கிறோம். முன்பு நாம் 500 மரங்களை நட்டுவிட்டு, உலகுக்கு நன்மை செய்ததாக நினைத்தோம். ஆனால் இன்று, 5,000 இல்லை, 20,000 மரங்களை நடுகிறோம்.''

மனநிலையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்துக்கும், சேவைத் திட்டங்களின் அளவு பெருகியுள்ளதற்கும் காரணமாக அவர் குறிப்பிடுவது, ரோட்டரி அறக் கட்டளை. பெரிதாகச் சிந்திக்கும் நம்முடைய திட்டங்களின் மிகப்பெரிய பங்களிப்பாளர்களில் ஒருவராக TRF இருந்துவந்துள்ளது. நான் DGயான போது, என்னுடைய மாவட்டத்தில் வெறும் 4 அல்லது 5 சங்கங்களுக்கு தான் பொருந்தும் நல்கைகளைச் செய்கிற திறமை இருந்தது. இதை எண்ணி நான் கவலைப்பட்டேன்.''

முந்தைய ஆண்டு, அந்த மாவட்டம் நேபாளத்தில் 20 சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியதையும் அது ஒரு பெரிய விஷயம் என்று நினைக்கப்பட்டதையும் நினைவுகூர்கிறார் அவர். என்னுடைய ஆண்டில், நாம் இன்னும் பெரிய திட்டமொன்றைச் செய்யவேண்டும், 500 ரிக்ஷாக்களை வழங்கவேண்டும் என்று நான் சொன்னேன்.'' ஆனால், அதற்கான பணம் எங்கிருந்து வரும் என்கிற கேள்வி எழுந்தது. உடனே, பதிலும் கிடைத்தது: ஒரு பொருந்தும் நல்கை! உலகின் இந்தப் பக்கத்தில் முதன்முறையாக நாங்கள் செய்த பொருந்தும் நல்கை அதுதான். என்னுடைய ஆண்டில் அது நிகழ்ந்தது.''

துறையின் தந்தையாக அவர் மதிக்கப்பட்டதும் ஹாலிவுட் படங்களுடைய விநியோகஸ்தராக இயங்கியதும் எத்தனைப் பேருக்குத் தெரியும்? அவர் பல இயக்குநர்களுக்கு உதவினார். உலக விவகாரங்களைப்பற்றிய மிகப் பரந்த அறிவு அவருக்கிருந்தது. ரோட்டரியில் அவர் ஓர் உண்மையான முன்னோடி.

1989–90ல் ரோஹாத்கி சங்கத் தலைவரானார். 30 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதைய தலைவர் பூர்ணேந்து ராய் சௌத்ரியைப் போன்ற ஓர் இளைஞர் சந்திக்கும் இன்றைய சவால்கள் எவ்விதமானவை?

மிகப்பெரிய சவால், ரோட்டரியன்களைப் பங்கேற்கச் செய்வது தான். அவரிடம் உறுப்பினர்கள் உள்ளார்கள். ஆனால், அவர்களில் எல்லாருக்கும் தேவையான வகைப் பேரார்வம் இல்லை என்கிறார் ரொஹாத்கி. அந்தப் பேரார்வம் எந்தவொரு NGOவிலும் முதல் ஓரிரு ஆண்டுகள் உறுப்பினராக இருக்கும்போது வராது. மூன்று ஆண்டுகள் ஒரு நல்ல உறுப்பினராக இருந்து, அதன் பணிகளில் பங்கேற்றால் போதும், நீங்கள் எப்போதும் ரோட்டரியைவிட்டு விலகமாட்டீர்கள்.


ரஷீதா பகத்

எங்கள் சங்கத்தின் உறுப்பினராக இருப்பவதற்கு நீங்கள் ஏதாவது செய்திருக்கவேண்டும்; உங்கள் தொழிலை மேம்படுத்துவதற்காக இங்கு சேரக்கூடாது என்று தொடர்ந்து சொல்கிறார் அவர், எனக்கு ஒரு காப்பீட்டுச் சேவை தேவைப்பட்டால், சங்க உறுப்பினராக உள்ள ஒரு சிறந்த காப்பீட்டு வல்லுநரை அழைத்துக் காப்பீடு பெறுவேன். ஆனால், அவர் தன்னுடைய தொழிலுக்காக என்னைத் துரத்தக்கூடாது.

பெண் உறுப்பினர்களை வரவேற்பதில் RC கல்கத்தா எப்படிச் செயல்படுகிறது என்று கேட்டபோது, மிகவும் ஆர்வமாகச் செயல்படுகிறது என்றார் அவர். நாங்கள் பல பெண் உறுப்பினர்களை இங்கு சேர்த்துள்ளோம்; அவர்கள் இச்சங்கத்தில் இடம்பெறுவதை எண்ணி மகிழ்கிறார்கள். இங்கு பெண் உறுப்பினர்களின் சதவிகிதம் சுமார் 10–12. இச்சங்கத்துக்கு இரண்டு பெண் தலைவர்கள் இருந்துள்ளார்கள்: நந்திதா சென் மற்றும் நீலிமா ஜோஷி. இந்த ஆண்டு எங்கள் சங்கச் செயலாளர் அனுசுவா தாஸ்.

நினைவுகளில் மூழ்கும் ரோஹாத்கி, இச்சங்கத்தில் தலாய்லாமா பேசியதைப் பற்றிச் சொல்லும் போது, குறிப்பிட்ட நேரத்தைவிட ஒரு மணி நேரத்துக்குக்கு



*சங்கத்தலைவர் சௌத்ரி நூறாண்டு பழமை வாய்ந்த RC ஷாங்காய் தலைவருடன் ரோட்டரி கொடியை பரிமாறிக் கொள்கிறார்.*



*மாதவி பாண்ட்யா RC கல்கத்தாவின் முன்னாள் தலைவர் நீலிமா ஜோஷி.*

மேல் அவர் கூடுதலாகப் பேசினார், அப்போது, யாரும் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. அவரிடம் அப்படியோர் ஈர்ப்பு இருந்தது என்கிறார் ரோஹாத்கி. ஃபீல்ட் மார்ஷல் மனேக்ஷா அவர்களுடைய பேச்சும் அப்படிதான்; அனைவரையும் கவர்ந்திழுத்தது; ரோட்டரியைப்பற்றி மிக உயர்வாகப் பேசினார் அவர்.''

ரவீந்திரநாத் தாகூர் எப்போதாவது இச்சங்கத்தில் பேசியிருக்கிறாரா?

எனக்குத் தெரிந்து இல்லை என்கிறார் ரோஹாத்கி. இது மிகவும் உயர்ந்தோருக்குரிய சங்கமாக இருந்தது. இதை நான் எதிர்மறைப்பொருளில் சொல்லவில்லை, ஆனால், சிறந்த மருத்துவர்கள், பட்டயக் கணக்காளர்கள், வழக்கறிஞர்கள் போன்றோர் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்தார்கள். அப்போதே நாங்கள் கிராம மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட்டோம்; இந்தச் சிறந்த மனிதர்கள் களத்தில் இறங்கிச் சேவை புரிவதைக் காண்பது மிக ஆர்வமூட்டுவதாக இருந்தது.''

1950களில், RC கல்கத்தா நிறைவேற்றிய ஆரம்பகாலத் திட்டங்களில் ஒன்று, கர்சா பஸ்தி முன்னேற்றம். அது அப்போது ஒரு சேரிப் பகுதியாக இருந்தது; லஹரிரியின் வீடும் அங்குதான் இருந்தது. அன்றைய வங்காளத்தில் பல நக்சலைட்கள் இருந்தார்கள்; நாங்கள் ஒரு ஹோமியோபதி மருந்தகத்தைத் தொடங்கத் திட்டமிட்டிருந்த பஸ்தி பகுதியிலும் அவர்கள் வலுவாக இருந்தார்கள், ஆகவே, திடீரென்று அவர்கள் கத்திகள், வாள்கள், தடிகளுடன் எங்களை

நோக்கி ஓடிவந்தார்கள். அப்போது அவர்களைத் தடுத்துத் துரத்தியவர், அன்றைய எங்கள் ரோடராக்ட் சங்கத்தின் தலைவர், இன்றைக்கு அவர் ஒரு ரோட்டரியன், அவரும் மற்ற ரோடராக்டர்களும் சேர்ந்து அவர்களை விரட்டினார்கள்!

அவை மிகவும் மகிழ்ச்சியான நாட்கள், மிகச்சிறந்த தொழில் வல்லுநர்களெல்லாம் களத்தில் இறங்கிச் சேவை புரிந்தார்கள். இன்றைக்கும் இங்கு பல துறைகளைச் சேர்ந்த சிறந்த வல்லுனர்கள் உள்ளார்கள். ஆனால், அவர்களெல்லாம் மருத்துவத் திட்டங்கள் போன்றவற்றுக்காக ஒரு கிராமத்துக்குச் செல்ல விரும்புவதில்லை. அவர்கள் தங்களுடைய உதவியாளர்களை அனுப்புவார்கள் ஆனால், அந்தப் பொற்காலத்தில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாங்கள் அங்கு இருப்போம். இந்த விஷயம் இப்போது மாறிவிட்டது, இன்றைக்கு, மக்கள் சமூகத்தில் தங்கள் நிலையை மேம்படுத்திக்கொள்வதற்காக இங்கு வருகிறார்கள்.

RIயிலிருந்து இச்சங்கத்துக்கு சிறப்பு விருதைப் பெற்றுத்தந்த அன்றைய பேகம்பூர் மற்றும் கர்சா பஸ்தி மேம்பாட்டுத் திட்டங்களை நினைவுகூர்ந்த அவர், அது ஒரு முழுமையான திட்டம் என்கிறார். அப்பகுதியில் பல நெசவாளிகள் இருந்ததால், நாங்கள் புதிய தறிகளை நிறுவினோம், பட்டுப்புழு வளர்த்தலையும் அறிமுகப்படுத்தினோம். இந்தத் திட்டத்துக்குச் செல்வது ஒரு பெரிய பிக்னிக்போல் இருக்கும், நாங்கள் மகிழ்ச்சியாக இருந்தோம், எங்கள் கார்களில் எங்கள் ஆன்களும் குழந்தைகளும் வந்தார்கள். இப்போதெல்லாம், ரோட்டரியில் அனைவரையும் உள்ளடக்குதல், நம் குடும்பங்களை அதில் பங்குபெறச்செய்தலைப்பற்றி நாம் பேசுகிறோம், ஆனால், தொடக்க ஆண்டுகளில் அவை இயல்பாக நடந்தன.

அத்துடன், 1958ல் இவர் ரோட்டரியில் சேர்வதற்குமுன்பாகவே, அமைப்பிலும் இப்பகுதியிலும் ரோட்டரிக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பு இருந்தது. ஹௌராப் பாலத்தின் கட்டுமானத்தில் நம் சங்கம் ஈடுபட்டது அதனால்தான்.

இதுபற்றி மேலும் விளக்குகிறார் அவர், அப்போது இங்கு ஒரு போன்டூன் பாலம் இருந்தது, கப்பல்கள் செல்வதற்காக அது திறக்கும். அந்த இடத்தில் ஒரு பாலத்தைக் கட்டவேண்டும் என்று RC கல்கத்தா அரசுடன் பேசியது. அந்நாட்களில் புதிய ஹௌராப் பாலம் என்று அழைக்கப்பட்ட இந்தப் பாலத்தைக் கவனித்துக்கொள்வதற்கான குழுவில் ரோட்டரிப் பிரதிநிதி ஒருவரும் இடம்பெற்றிருந்தார். அதன்பிறகு பல ஆண்டுகளுக்கு நாம் அந்த உறுப்பினர் பொறுப்பில் இருந்தோம், பின்னர் ஏனோ அது தொடரவில்லை!

ரோஹாத்கி தொடர்ந்து பேசுகையில், தொடக்க ஆண்டு களில் ஒரு காவல் துறை ஆணையர், ஓர் ICS அலுவலர் அல்லது பிற அரசு அலுவலர்கள், அரசியல்வாதிகளெல்லாம் இச்சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றார். அத்துடன், காங்கிரஸின் நிறுவனர் உறுப்பினர் களில் ஒருவரான சுரேந்திரநாத் பானர்ஜி எங்கள் சங்கத்தின் மதிப்பு உறுப்பினராக இருந்தார், சங்கக் கூட்டங்களில் கலந்துகொண்டார் என்று குப்தா குறிப்பிட்டார்.

சங்கத்தின் முன்னாள் தலைவரான Dr S K சர்மா 30 ஆண்டுகளுக்கு முன் RC கல்கத்தாவில் இணைந்தார், தன்னுடைய மூத்தவர்கள் சேவைத் திட்டங்களுக்காகக் களத்தில் இறங்கி வேலைசெய்வதை எண்ணி மகிழ்ந்ததை நினைவுகூர்கிறார். முப்பதாண்டுகளாக இச்சங்கத்தில் செயல்பட்டுவரும் இவருக்கு மிகவும் பிடித்த விஷயம் என்ன என்று கேட்டபோது, மக்களுக்கு உதவுவது, குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது, இதய நோய் கொண்ட நோயாளிகளுக்கு உதவுவது, இன்னும் பல என்கிறார்.



ரஷீதா பகத்

RIPN *சேகர் மேத்தா மற்றும்* PDG *சோமேன்த்ர நந்தி.*

இன்னொரு சுவையான




*பிஷ்னுப்பூரில் ஒரு பள்ளியில் புதிய வகுப்பறைகள் கட்டியதைக் கொண்டாடும் சங்கத்தினர்.*

விஷயம், சாந்திநிகேதனிலுள்ள மித்யாநகரில் முதல் WASH திட்டம் நடைபெற்றபோது, அதற்கு நிதியளித்தவர் சர்மாதான். அங்குள்ள பெண்களெல்லாம் திறந்தவெளியைக் கழிப்பிடமாகப் பயன்படுத்தவேண்டியிருப்பதை அறிந்து நாங்கள் வருந்தியபோது, அவர் இந்த உதவியைச் செய்தார் என்கிறார் ரித்விக் குப்தா. நாங்கள் அவர்களுக்குச் சூரிய ஒளி விளக்குகளையும் வழங்கினோம்.''

அந்தப் பகுதியிலிருந்த மக்களில் இருவர்தான் தங்கள் வீடுகளில் கழிப்பறை கட்டுவதற்கான இடத்தை வழங்க ஒப்புக்கொண்டார்கள். இரண்டு மாதங்களுக்குப்பிறகு, மற்றவர்களும் கழிப்பறைகள் வேண்டும் என்றார்கள், குறிப்பாகப் பெண்கள். Dr சர்மாவின் மனைவி விஜயலட்சுமி மிகவும் அன்போடு நடந்துகொண்டார், இந்தத் திட்டத்தை மிகவும் நேசித்தார், இந்த இணையர்கள் இருவரும் இதை விரிவாக்க உதவினார்கள்.

சங்கத்தின் முதல் சில பத்தாண்டுகளில், அரசுடன் எங்களுக்கு மிக நல்ல உறவு இருந்தது. உண்மையில், நாங்கள் அரசுக்கு உதவிக்கொண்டிருந்தோம்; ரோட்டரியன்களுடைய பங்களிப்பு இல்லாவிட்டால், இளம்பிள்ளைவாதத்தை இந்தியாவிலிருந்து நீக்கியிருக்க இயலாது.

ஆர்வமூட்டும் விஷயம், 1999–2000 ஆண்டுவாக்கில், அப்போதைய மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசுவைப் பேச அழைத்தது இச்சங்கம்.

தாங்கள் புதுப்பித்துள்ள, சூரிய ஒளி விளக்குகள், கை பம்ப்கள், வீடுகளுக்கான கழிப்பறைகளை வழங்கியுள்ள, பள்ளிகளைப் புதுப்பித்துள்ள, பள்ளிகளுக்கு மேசை, நாற்காலிகள், இருக்கைகள், புத்தகங்கள் போன்றவற்றை வழங்கியுள்ள கிராமங்களைப்பற்றிப் பேரார்வத்துடன் பேசுகிறார் சர்மா. நாங்கள் ஒவ்வொருமுறை ஏதாவது ஒரு கிராமத்தில் இதைச் செய்யும்போதும், அடுத்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அங்கு வருவார்கள், தங்களுக்கு உதவும்படி எங்களைக் கேட்பார்கள். இதனால், நாங்கள் படிப்படியாக 100 ஆண்டுகளில் 100 கிராமங்களில் பணியாற்றியுள்ளோம்.

ரோஹாத்கி தொடர்ந்து பேசுகிறார், ஒரு கிராமத்தை நீங்கள் முன்னேற்றிய பிறகு, அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்கிற சூழலை உண்டாக்கியபிறகு, அங்கிருந்து விலகி இன்னொரு கிராமத்துக்குச் செல்லுங்கள் என்கிறார் RCC கொள்கையைக் கொண்டுவந்த ஃபிலிப்பைன்ஸைச் சேர்ந்த PRIP MAT காபரஸ். நாங்கள் அதைத்தான் செய்தோம்.

அந்தத் தொடக்க ஆண்டுகளில், சங்கம் ஓர் ஒட்டுமொத்தக் கிராம முன்னேற்றத் திட்டத்தை உருவாக்கியிருந்தது என்கிறார் குப்தா. நாங்கள் அவர்களுக்கு ஒன்றிரண்டு விஷயங்களைமட்டும் வழங்கவில்லை. நலப்பராமரிப்பு, நீர், தூய்மை, தொழில்சார்ந்த திறன்கள், வருவாய் மூலங்கள் உள்ளிட்ட ஒரு முழுமையான தீர்வை வழங்கினோம். நாங்கள் 10 RCCக்களை அமைத்துள்ளோம், அவற்றில் ஒன்றை RI தலைவர் காபரஸ் திறந்துவைத்தார். அவை மிகச் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. கிராம முன்னேற்றத்துடன், நாங்கள் பல நல முகாம்களை நடத்துகிறோம், மருத்துவமனைகளை ஆதரிக்கிறோம், நிறையக் கருவிகளை வழங்குகிறோம், இன்னும் பல பணிகள். நம் சங்கத்தின் வளமான வரலாற்றை எண்ணி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்.''

பட்டயக் கணக்காளரான நீலிமா ஜோஷி, இச்சங்கத்தின் இரண்டாவது பெண் தலைவர் (2016–17). அவர் 2001ல் இச்சங்கத்தில் இணைந்தார். அப்போது எங்கள் சங்கத்தில் மிகச்சில பெண்கள்தான் இருந்தார்கள். பல விஷயங்களைச் செய்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது, பல ஏற்பாடுகள் பல பொறுப்புகள் எனக்குத் தரப்பட்ட அனைத்துப் பொறுப்புகளையும் எண்ணி நான் நன்றி தெரிவிக்கிறேன். சங்கத்தில் சேர்ந்து மூன்றாண்டுகளுக்குப் பிறகு, எனக்குச் சங்கப் பொருளாளர் பொறுப்பு கிடைத்தது!''

சங்கத் தலைவராவது எவ்வளவு கடினமாக இருந்தது?

உண்மையில், மக்கள் சில ஆண்டுகளாகவே என்னைத் தலைவராகச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்கிறார் நீலிமா,

ஆனால், என் பிள்ளைகள் அப்போது தான் கல்லூரியில் நுழைந்திருந்ததால், நான் உடனடியாக அதைச் செய்யவில்லை.

ஒரு ரோட்டரியனாக இருப்பதில் அவருக்கு மிகவும் பிடித்த விஷயம் என்ன என்று கேட்டால், எல்லாம்தான் என்று சிரிப்புடன் குறிப்பிடுகிறார் அவர், பணிபுரியும் வாய்ப்பு, எங்களுடைய செவ்வாய்க்கிழமைக் கூட்டங்கள், எங்கள் திட்டங்கள் குறிப்பாக, குழந்தைகளுக்கான இதய அறுவைச்சிகிச்சைகள். அந்தப் பெற்றோரை நாங்கள் சந்திக்கும்போது, எங்களுடைய பணிக்காக அவர்கள் மிகவும் நன்றிதெரிவிக்கிறார்கள், எங்களை மிகுந்த அன்போடும் மதிப்போடும் நடத்துகிறார்கள்.''



தன்னுடைய தலைமை யாண்டில் RC கல்கத்தா அந்த மாவட்டத்திலேயே சிறந்த சங்கமாகத் தேர்வுசெய்யப்பட்டு ஒரு பெரிய கோப்பையை வென்றது என்று பெருமையுடன் சுட்டிக் காட்டுகிறார் அவர். நாங்கள் குறைந்தது 20 விருதுகளைப் பெற்றிருப்போம்! பள்ளிக் கல்வி, எழுத்தறிவில் நாங்கள் நிறையப் பணியாற்றினோம், மின்கற்றல் பொதிகளை வழங்கினோம். அவற்றைப் பயன்படுத்தியவர் களிடமிருந்து இப்போதும் எங்களுக்கு மின்னஞ்சல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

வயதுவந்தோர் எழுத்தறிவுத் திட்டத்துக்காகத் தாங்கள் கிராமங்களுக்குச் சென்ற நேரங்களை நினைவுகூர்கிறார் நீலிமா, உங்கள் வீட்டில் கழிப்பறைகள் உள்ளனவா என்று மக்களைக் கேட்டால், பெரும்பாலானோர் எங்கோ திரும்பிக்கொண்டார்கள். இந்தத் திட்டத்துக்குப் பெண்களின் வரவேற்பு மிகச்சிறப்பாக இருந்தது. அடிக்கும் கணவர்கள், தடுக்கும் மாமியார்களை மீறி அவர்கள் வயது வந்தோர் எழுத்தறிவு வகுப்புகளுக்கு வந்தார்கள். ஏன் என்று கேட்டால், இந்த வகுப்பின்மூலம் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உதவ விரும்பினார்கள், தாங்கள் கற்றுக்கொண்டால் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுத்தரலாம் என்று நம்பினார்கள்.''

சங்கச் செயலாளர் அனுசுவா தாஸ் ஒரு பொறியியல் நிறுவனத்தை நடத்துகிறார். 2003ல் இச்சங்கத்தில் சேர்ந்த இவர், இந்த முக்கியமான நூற்றாண்டு நேரத்தில் இந்தப் பதவியை வகிக்கும் சவாலை நான் விரும்புகிறேன் என்கிறார். இந்தச் சங்கத்தை இங்கு கொண்டுவருவதற்காகப் பலர் கடினமாக உழைத்துள்ளார்கள்; இப்போது, அதை முன்னேற்றிக் கொண்டுசெல்வது எங்கள் பொறுப்பு.''

கடந்த 100 ஆண்டுகளாக, RC கல்கத்தாவைச் சேர்ந்த பல தலைமுறை ரோட்டரியன்கள் லட்சக்கணக்கான வாழ்க்கைகளைத் தொட்டுள்ளார்கள், நிரந்தரமாக மாற்றியுள்ளார்கள். நிகழ்காலமும் மிகச்சிறப்பாகத் தொடர்கிறது என்பது தான் இதில் இன்னும் விசேஷம். அவ்விதத்தில் தன்னுடைய மனத்தில் ஓர் அழியாத முத்திரையைப் பதித்துள்ள ஓர் RCCயின் மிகச்சிறந்த பணியைப்பற்றி எனக்குச் சொன்னார் அமித் கோஷ்.

இந்த RCC செய்துவரும் திறன் மேம்பாட்டுப்பணியின் ஒரு பகுதி, ஓர் அழகுக்கலைப் பயிற்சி. அங்கு பயிற்சிபெற்ற ஓர் இளம் முஸ்லீம் பெண்ணை, சாந்திநிகேதனில் ஒரு கிராமத்தில் போர்வைகளை விநியோகித்துக் கொண்டிருந்தபோது மீண்டும் சந்தித்தார் அவர்.

அந்தப் பெண் அழகுக்கலைப் பயிற்சியைப் பெற்றுவிட்டார். ஆனால், அழகு நிலையத்தில் பணியாற்ற அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அப்படியானால், நீங்கள் எப்படிச் சம்பாதிக்கிறீர்கள்? என்று அவரிடம் கேட்டார் அமித் கோஷ். அதற்கு அந்தப் பெண் சொன்ன பதில், நான் என்னுடைய சொந்தத் தொழிலைத் தொடங்கிவிட்டேன். ஈத் நேரத்தில் நான் வீடுகளுக்குச் சென்று அழகுச் சேவை வழங்குகிறேன். காலை 7 மணிக்குக் கிளம்பினால் இரவு 9 மணிவரை எனக்கு வேலை இருக்கிறது.

அந்தக் காலகட்டத்தில், அவர் சுமார் 20,000 ரூபாய் சம்பாதித்தார். வெவ்வேறு வாடிக் கையாளர்களுடைய இடங்களுக்கு அவர் சென்றுவருவது எப்படி என்று அமித் கேட்டபோது, ஓர் இருசக்கர வண்டியுடன் நின்றிருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டினார் அந்தப் பெண், அவர் என் கணவர்; அவர்தான் என்னை எல்லா இடங்களுக்கும் அழைத்துச்செல்கிறார்.''

இதில் மிகச்சிறந்த விஷயம் அந்த இருசக்கர வண்டி என்னுடைய பணத்தில் வாங்கப்பட்டது என்றார் அந்தப் பெண்!

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# நிதீஷ் C லஹார்ரிக்கு ஒரு பாராட்டுரை

க்ளிஃபோர்ட் A ரண்டால்

*இரக்கமுள்ள விளக்கே,*
*சுற்றிவரும் இருளுக்கு நடுவில்*
*எங்களை வழிநடத்து;*
*நீ என்னைத் தொடர்ந்து*
*வழிநடத்து!*
*இரவு இருண்டிருக்கிறது, நான்*
*வீட்டிலிருந்து தொலைவில்*
*உள்ளேன், நீ என்னைத்*
*தொடர்ந்து வழிநடத்து!*

1963 ஜூன் மாதத்தில், மிசௌரி புனித லூயிஸில் நடைபெற்ற பன்னாட்டு மாநாட்டில் தன்னுடைய நிறைவுரையை இந்தக் கவிதை வரிகளுடன் நிறைவுசெய்தார் நிதீஷ் C லஹார்ரி. நிதீஷுக்கு நெருக்கமானவர்களுக்கு இந்தச் சொற்கள் பழக்கமானவைதாம். அவர் அவற்றை அடிக்கடி பயன்படுத்தினார்.

இந்த வரிகளைப் பேசும்போது அவர் வீடு என்று சிந்திப்பது, அப்போதைய அவருடைய இல்லத்தை இல்லை. நிதீஷ் ஒரு தீவிரமான ஆன்மிகவாதி. மனிதச் செயல்பாடுகளின் வேராக, குறிப்பாக, ஒரு மனிதர் தன்னை ரோட்டரியுடன் இணைத்துக் கொள்ளக் காரணமாக அமையக் கூடிய செயல்பாடுகளின் வேராக இருப்பது ஆன்மிக ஊக்கம்தான் என்று அவர் நினைத்தார்; அந்த ஆன்மிக ஊக்கத்தை அடையாளம் காண்பதே அவருடைய இயல் பாகவும் தன்மையாகவும் இருந்தது.

RIன் தலைவராகப் பொறுப் பேற்ற முதல் ஆசியரான இந்த மனிதருடைய இந்தக் குணம், உலக ரோட்டரியன்களை நோக்கி உங்களுக்குள் இருக்கும் பொறியை ஊதிப் பெரிதாக்குங்கள் என்று கேட்கத் தூண்டியது. அவருடைய சொற்களிலேயே சொல்வதென்றால், இவ்வாறு செய்வதன்மூலம், அனைத்து மனிதகுலமும் ஒன்றுதான், நாம் ஒவ்வொருவரும் புனிதமான இறைவரிடமிருந்து தோன்றிய பொறிகள் என்கிற உண்மையை ஏற்றுக்கொள்வதில்தான் ஒரு மிகச் சிறந்த இலக்கை நோக்கிய பாதை இருக்கிறது என்பதை நாம் உணர்வோம்.



PRIP நிதீஷ் C லஹார்ரி.

52வது RI தலைவர் கொல்கத்தாவில் பிறந்தவர், கல்கத்தா பல்கலைக்கழக த்தில் ஆங்கிலம் பயின்ற அவர், பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியலில் ஒரு முதுகலைப்பட்டமும், ஒரு சட்டப் பட்டமும் பெற்றார். நான்காண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றிய பின், விரைவாக வளர்ந்துவரும் அசைபடங்கள் தொழிலில் நுழைந்தார்.

1926ல் RC கல்கத்தாவின் ஓர் உறுப்பினரானார். பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் RC கல்கத்தாவின் தலைவரானார், மேலும் 18 ஆண்டு களுக்குப் பிறகு, ஜப்பானிலுள்ள டோக்கியோவில் RI தலைவரானார். 38 ஆண்டுகள் ரோட்டரிக்காகச் சேவைபுரிந்த அவர், இந்தக் காலகட்டம் முழுவதும் அமைதியாகவும் அடக்கத்துடனும் நுண்ணுணர்வுடனும் பணிவாகவும் நடந்துகொண்டார். அதேசமயம், அவர் எப்போதும் "அனைத்திலும் முன்னணியில் இருந்து செயலாற்றினார்''.

இந்தியாவில் நடைபெற்ற மிகப்பெரிய அரசியலல்லாத, மதமல்லாத கூட்டம் என்று தகவலறிந்த இந்திய மனிதர்களால் விவரிக்கப்பட்ட அந்தக் கருத்தரங்கின் தலைவராகப் பணியாற்றினார் நிதீஷ். அந்தக் கருத்தரங்கு தொடங்குவதற்கு முன்னால், மறைந்த பிரதமர் ஜவர்கர்லால் நேருவைச் சந்திக்கச் சென்றார் நிதீஷ், நானும் அவருடன் சென்றேன், அவரை நாங்கள் அழைத்தோம்.

அது ஒரு மரியாதை சார்ந்த அழைப்பு. ரோட்டரி விழாவில் நேரு கலந்துகொள்வார் என்று நாங்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால், 2,000 ரோட்டரியன்கள், அவர்களுடைய குடும்பத்தினர் கலந்து கொண்ட அந்தக் கொண்டாட்டத்தின் உச்சத்தில், பிரதமர் நேரு தன்னந்தனியாக வந்தார், பாது காவலர்கள் யாரும் அருகில் இல்லை, ரோட்டரியன்களை வாழ்த்தினார், உரையாடலில் கலந்துகொண்டார்.

அது ஒரு நாடகத்தனமான நிகழ்வு, இதை நாம் பலவிதமாகக் காணலாம். என்னுடைய பார்வை இதுதான்: நிதீஷ் தன்னுடைய சக இந்தியரான திரு நேருவுக்குள் இருந்த பொறியைத் தூண்டிவிட்டிருக்கிறார்; பிரதமரும் அதே அளவு நுண்ணுணர்வுடன் நிதீஷின் சேவை, அர்ப்பணிப்புணர்வு, ஊக்கத்துக்குத் தனிப்பட்ட அங்கீகாரத்தை அளிக்கிறார்.

அடிப்படையில் மனிதகுலம் அனைத்தும் ஒன்றுதான் என்கிற அவருடைய ஆழமான சொந்த நம்பிக்கைக்கு ஓர் ஊக்கமளிக்கும் அடையாளம் அவர்.

அவர் எப்படி இருந்தார், நமக்கு என்ன வழங்கினார் என்பதற்காக நாம் அவருக்கு நன்றி தெரிவிப்போம். இரக்கமுள்ள விளக்கு நம்முடைய நிதீஷை வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டது என்று பக்தியுடன் கொண்டாடுவோம்.

*கட்டுரை ஆசிரியர்*
*RIன் முன்னாள் தலைவர் (1958–59).*

# குழந்தைகளுக்கான விருந்து: எப்படித் தொடங்கியது?

ரஷீதா பகத்





உலக அளவில் மிகப் புகழ்பெற்ற ரோட்டரித் திட்டங்களில் ஒன்று, அநேகமாக மிக நீண்ட காலமாக நடைபெற்றுவருகிற ஒன்று, 95 ஆண்டுகளாகக் கல்கத்தா ரோட்டரி சங்கம் நடத்திவருகிற குழந்தைகளுக்கான விருந்து.

சங்க வரலாற்றின் மேம்படுத்தப் பட்ட பதிப்பொன்றைக் கொண்டு வருவதில் ஆழமாக ஈடுபட்டுவரும் ரித்விக் குப்தா, சங்கத்தின் இந்த முதன்மைத் திட்டத்தைப்பற்றிப் பேரார்வத்துடன் பேசுகிறார். 1987ல் இச்சங்கத்தில் சேர்ந்த இவரை ரோட்டரிக்கு அழைத்து வந்ததே இந்தத் திட்டம் தான்.

குளிர் நிறைந்த புத்தாண்டு நேரத்தில், தன்னுடைய சங்கத்தின் 100வது ஆண்டுக் கொண்டாட்டங்களைக் கவனித்தபடி, சூடான தேநீரை உறிஞ்சிக் கொண்டு இது பற்றிப் பேசினார் குப்தா, என் தந்தை ஒரு ரோட்டரியன், RC கல்கத்தாவின் உறுப்பினர். அவருடைய அலுவலகத்திலிருந்துதான் குழந்தைகளுக்கான விருந்துத் திட்டத்தின் பல பணிகள் நடை பெற்றன. அங்கு அவரோடு இருந்த நபருக்கு என் வயதுதான் இருக்கும்; நான் அவரிடம் 'நீங்கள் செய்கிற இந்த மிகச்சிறந்த பணியில் நானும் பங்கேற்கலாமா?' என்று கேட்டேன். கண்டிப்பாகப் பங்கேற்கலாம் என்றார் அவர். ஆகவே, நான் என் தந்தையிடம் சென்று, 'நான் உங்கள் சங்கத்தில் சேர விரும்புகிறேன்' என்றேன். அவர் ஒரு ரோட்டரியனிடம் பேசினார், அன்று தொடங்கி அந்த ரோட்டரியன் என்னை வழிநடத்தத் தொடங்கினார்!

முதல் நாளிலிருந்து சேவைபுரியும் வாய்ப்பு நம்மை ஊக்குவிக்கிறது என்கிற அவர், மிக இயல்பாக இன்னொரு விஷயத்தையும் சொல்கிறார், RC கல்கத்தா 1920ல் உருவாக்கப்பட்டது; சிறுவர்களுக்கான விருந்து 1925ல் தொடங்கியது, கடந்த டிசம்பரில் நாம் இந்தத் திட்டத்தின் 95வது நிகழ்வை நடத்தியுள்ளோம்; இத்தனை ஆண்டுகளில், இரண்டாம் உலகப்



*RC கல்கத்தா உறுப்பினர்கள் குழந்தைகளுக்கு சூடான உணவு பரிமாறுகின்றனர்.*

போரின் போது மட்டும் தான் ஒரே ஒரு நிகழ்ச்சி விடுபட்டது.

இவை அனைத்தும், 1925ம் ஆண்டின் கிறிஸ்துமஸ் நாளொன்றில் தொடங்கின என்கிறார் ரித்விக் குப்தா. இந்தச் சங்கத்தைச் சேர்ந்த சில ரோட்டரியன்கள், தெருவில் பிச்சையெடுத்துக்கொண்டிருந்த சில ஏழைக் குழந்தைகளைக் கண்டார்கள். அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று யோசித்தார்கள். அடுத்த சில நாட்களுக்குள், அவர்கள் எப்படியோ சில குழந்தைகளைத் திரட்டினார்கள், அவர்களுக்கு ஒரு நாள்முழுக்கச் சூரிய ஒளியை (சிறந்த அனுபவத்தை) வழங்கினார்கள், அதன்பிறகு, அது ஆண்டுதோறும் தொடர்கிறது. எங்கள் குழுவின் முதன்மைத் திட்டமான சிறுவர்களுக்கான விருந்து தொடங்கியது இப்படிதான்.''

ஒவ்வோராண்டும் கிறிஸ்துமஸ் நேரத்தில் RC கல்கத்தா உறுப்பினர்கள் ஆதரவற்றோர் இல்லங்கள், முறைசாராப் பள்ளிகள், சேரிப் பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகளை நாடிச்செல் கிறார்கள். அவர்களைச் சுமார் 25 பேருந்துகளில் ஏற்றிக் கொல்கத்தாவின் புகழ்பெற்ற நிக்கோ பூங்காவுக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கு அவர்களுக்கு நாள்முழுக்க மகிழ்ச்சி, உணவு, சிரிப்பை வழங்குகிறார்கள்.

இந்த விருந்தை அனுபவிக்கும் குழந்தைகள் எத்தனைப் பேர்?

சுமார் 1,200லிருந்து 2,000பேர் நாங்கள் 5,000 குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து அழைத்துச்செல்ல விரும்புகிறோம், ஆனால், அது எதார்த்தத்தில் சாத்தியமில்லை.

இந்த விருந்து, பேருந்திலேயே தொடங்கிவிடுகிறது. குழந்தைகளுக்கு ஒரு வாழைப்பழம், முட்டை, ரொட்டி மற்றும் பழரசம் வழங்கப்படுகிறது. நாங்கள் அவர்களுக்குப் பேட்மின்டன் ராக்கட், பை, டி-சட்டைபோன்ற பரிசுகளை வழங்குகிறோம், விளை யாட்டுப் பூங்காவில் விளையாட்டு களுக்கான பயணச் சீட்டுகளை வழங்குகிறோம். அவர்கள் காலை முழுக்க நன்கு விளையாடி மகிழ்கிறார்கள். மதிய உணவு நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குத் திரும்பிவருகிறார்கள் என்கிறார் குப்தா.

*உலக அளவில் மிகப் புகழ்பெற்ற ரோட்டரித் திட்டங்களில் ஒன்று, 95 ஆண்டுகளாகக் கல்கத்தா ரோட்டரி சங்கம் நடத்திவருகிற குழந்தைகளுக்கான விருந்து.*

ரித்விக் குப்தா
RC கல்கத்தா




இந்த நாளில், நிக்கோ பூங்காவின் சமையலறை இந்தச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுவிடுகிறது. சங்கம் பணிக்கமர்த்திய சமையல் காரர்கள் அங்கு மதிய உணவு சமைக்கிறார்கள். பொதுவாக மதிய உணவில் சாதம், பூரி, காய்கறி மற்றும் ஒரு பருப்பு ஆகியவை இடம்பெறுகின்றன என்கிறார் சங்க உறுப்பினரான அமித் கோஷ். இந்த ஆண்டு 1,500 குழந்தைகள் இந்த விருந்தில் பங்கேற்றார்கள்; இவர்களில் 300 பேர் ரோட்டரி சதனில் இருக்கும் நம்முடைய நிதீஷ் சந்திரா லஹார்ரி பண்பாட்டுப் பயிற்சி மையத்தைச் சேர்ந்த வர்கள், 350 பேர் நம்முடைய RCC பள்ளியைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் கொல்கத்தாவின் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பள்ளிகள், ஆதரவற்றோர் இல்லங்களைச் சேர்ந்தவர்கள். சைவ உணவுடன் இங்கு கோழிக் கறி உணவும் வழங்கப்படுகிறது. இந்தச் செலவை ஒரு ரோட்டரியன் ஏற்றுக்கொள்கிறார்.

சுமார் 70 ரோட்டரியன்களும், ரோடராக்டர்களும் இந்தத் திட்டத்தில் பங்கேற்கிறார்கள், குழந்தைகளுக்கு உணவு பரிமாறுகிறார்கள், ஒவ்வொரு குழந்தையின் மதிய உணவைச் சாப்பிட்டபிறகுதான் இவர்கள் சாப்பிடுகிறார்கள்.

மதிய உணவுக்குப்பிறகு, ஒரு மாயாஜால நிகழ்ச்சி, ஓர் இசை நிகழ்ச்சி உண்டு என்கிறார் குப்தா, நிகழ்ச்சியின் நிறைவில், குழந்தைகளுக்கு ஐஸ் க்ரீம், பரிசுகளைத் தந்து நாங்கள் வழியனுப்பிவைக்கிறோம்.

ஒவ்வோராண்டும் இந்த நிகழ்ச்சியில் எந்தெந்த மாணவர்கள் கலந்துகொள்வார்கள் என்பதைப் பள்ளிகள்தாம் தீர்மானிக்கின்றன. காரணம், எல்லாக் குழந்தைகளும் இந்த மகிழ்ச்சியான நிகழ்வை எதிர்பார்க்கிறார்கள் என்று தொடர்ந்து சொல்கிறார் அவர். நாங்கள் பேருந்தை அனுப்பும்போது, அந்த ஆண்டு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இயலாதவர்கள் மற்றவர்களைக் கையசைத்து வழியனுப்பிவைக்கிறார்கள், போய் நன்றாக மகிழ்ச்சியை அனுபவியுங்கள் என்று சொல்கிறார்கள்!■



நி ஹாவ், ரோட்டரியன்களே!

மனித முயற்சிகளிலேயே மிகுந்த நிறைவைத் தருவது திரும்ப வழங்குவது என்றால், ரோட்டரி அறக்கட்டளைக்கு பணம் வழங்குவது, உட்பட பல வாய்ப்புகளை வழங்குகிறது.

வருடாந்திர நிதிக்கு நீங்கள் வருடத்திற்கு $1000 அல்லது அதற்கு மேற்பட்டு கொடுக்கும் போது, நீங்கள் ரோட்டரி அறக்கட்டளையின் நீடித்த உறுப்பினராகலாம். வருடாந்திர நிதி, போலியோபிளஸ் நிதி அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய மானியங்களுக்கு $1,000 அல்லது அதற்கு மேற்பட்டு நன்கொடை அளிப்பவர்களில் பால் ஹாரிஸ் ஃபெல்லோவாவதோடு பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினருமாகலாம்.

அறக்கட்டளைக்கு $10,000 அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுகளை வழங்கும் ரோட்டரியர்கள் பீக்வெஸ்ட் சொசைட்டியில் சேர்வதோடு பெரிய நன்கொடையாளர்களாகிறார்கள். ரோட்டரியின் நூற்றாண்டு விழாவில் தைவானில் 106 முக்கிய நன்கொடையாளர்களை நாங்கள் சேர்த்தது நினைத்து எனக்கு பெருமையே. அடுத்த ஆண்டு 103 கூடுதல் முக்கிய நன்கொடையாளர்களுடன் சேர்ந்து, அவர்கள் வருடாந்திர நிதிக்கு 2 மில்லியனுக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கினர்!

ரோட்டரியில் 250,000 டாலர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி வழங்கியது. கூடுதல் நன்கொடை வழங்கிய 11 நபர்களுக்கு பாராட்டுகள். இந்த தாராளமானவர்கள் ஜப்பான், நைஜீரியா, தைவான் மற்றும் அமெரிக்காவில் இருந்து பயணம் செய்துள்ளனர்.

இப்போது, உங்களாலும் உங்கள் கிளப்பாலும் என்ன செய்ய இயலும் என்பதை கண்டறியுங்கள். இன்று நாம் கொடுக்கும் பரிசுகள் ரோட்டரிக்கும் சமூகத்திற்கும் காலத்திற்கும் சேவையாற்றும்.



**கேரி C K ஹுவாங்**

TRF அறங்காவலர் தலைவர்

# தூய்மையையும் சுகாதாரத்தையும் பழக்கமாக்கிக் கொள்வோம்



நாம் கடினமான நேரங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். Covid–19 பரவலை எதிர்கொள்ள உலகம் தயாராகிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தாமஸ் பாய்னெ-யின் புகழ்பெற்ற சொற்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றன இந்தக் காலங்கள் மனிதர்களுடைய ஆன்மாக்களைப் பரிசோதிக்கின்றன. மிக மலிவாகக் கிடைப்பதை நாம் மிகச் சாதாரணமாக மதிக்கிறோம்: ஒவ்வொன்றுக்கும் அதன் மதிப்பைத் தருவது, அதன் அரிய தன்மை தான்.

தனிமைப்படுத்தலும் தனித்திருத்தலும் கடுமையான எதார்த்தங்களாகி விட்ட இன்றைய நாளில், முன்பு எப்போதையும் விடக் கூடுதலாக நாம் சுகாதாரம், தூய்மையைக் கவனிக்கிறோம், பொது விழிப்புணர்வுக்கான தேவையை உணர்கிறோம்.

ஆனால், பாதுகாப்பான குடிநீர் வழங்குதல், சுகாதாரம், தூய்மையை முன்னிறுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டிய தேவையைச் சென்ற நூற்றாண்டிலேயே WHO தெரிவித்திருக்கிறது. 2017ல், உலக மக்கள் தொகையில் குறைந்தது 2.3 பில்லியன் பேருக்குச் சுகாதார வசதிகள் இல்லை என்றும், 884 மில்லியன் பேருக்குப் பாதுகாப்பான மற்றும் தூய்மையான குடிநீர் இல்லை என்றும் WHO மதிப்பிட்டது.

ரோட்டரி அறக்கட்டளை தன்னுடைய WASH முயற்சியின் வழியாக இந்தச் சவாலைக் கையாள்வதில் முன்னணியில் இருந்து வந்துள்ளது. 2013 முதல், 100க்கும் மேற்பட்ட நாடுகளில் WASH நிலையங்களில் முதலீடு செய்துள்ளது TRF.

பள்ளிகளுக்கு நீடித்திருக்கக்கூடிய ஒரு நீர், சுகாதாரம், தூய்மை மற்றும் கல்விச் சவாலை உருவாக்குவதற்காக ரோட்டரி சங்கங்களை ஊக்குவிப்பதற்கென்று அது ஒரு வெள்ளோட்டத் திட்டத்தையும் அமைத்தது. இந்த வெள்ளோட்டத்துக்காக ஐந்து நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன: கென்யா (ஆப்பிரிக்கா), கௌடமாலா, ஹோன்டுரஸ் மற்றும் பெளிஜ் (மைய அமெரிக்கா) மற்றும் இந்தியா. பள்ளிச் சுகாதார முயற்சிகளில் இந்த நாடுகள் காட்டிய வலுவான, அர்ப்பணிப்புள்ள பங்களிப்பை அங்கீகரிக்கும்வகையில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இது TRFன் கவனப் பகுதிகளிலும் உள்ளது : நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை; மற்றும் அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு.

இன்றைய உலகம் மிகுதியாக இணைந்திருப்பதால், இந்த உண்மை நன்றாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. காரணம், ரோட்டரி உலகை இணைக்கிறது.

நண்பர்களே, பாதுகாப்பாக இருங்கள், நன்றாக இருங்கள்.



**குலாம் A வாஹன்வதி**

TRF அறங்காவலர்

# RC கல்கத்தாவின் திட்டங்கள், முக்கியத்துவங்கள்

ரஷீதா பகத்

இந்த மைல் கல் ஆண்டில் கல்கத்தா ரோட்டரி சங்கம் திட்டமிட்டுள்ள ரூ.20 கோடி மதிப்புள்ள திட்டங்கள் ஆரோக்கியம், தூய்மை மற்றும் எழுத்தறிவில் கவனம் செலுத்துவது தெளிவாகப் புரிகிறது. புனித தாமஸ் இல்லம் மற்றும் ஹௌரா தெற்கு மையத்தின் வழியாகச் சேரிக் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து போடுதல், நலப் பராமரிப்பு வழங்குதல் இந்த ஆண்டு நிறைவுக்குள் 100,000ஐத் தொடும்; 700,000க்கும் மேற்பட்டோர் ஏற்கெனவே இதனால் பலன் பெற்றுள்ளார்கள்.

இச்சங்கத்தின் இன்னொரு திட்டம், 10,000 குழந்தைகளுக்குச் சரியான நேரத்தில் கண் பரிசோதனை நடத்திச் சிறுவயதுப் பார்வையிழப்பைத் தடுத்தல், குறிப்பாக, விழித்திரைக் குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறிவதில் சிறப்புக் கவனம் செலுத்துதல், 1,000 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்தல்.

சங்கத் தலைவர் பூர்ணேந்து ராய் சௌத்ரி குறிப்பிடும் இன்னொரு நூற்றாண்டுத் திட்டம், ரவீந்திரநாத் தாகூர் பன்னாட்டு இதய அறிவியல் கல்விக் கழகத்துடன் இணைந்து இதய அறுவைச்சிகிச்சைகளைச் செய்வது. இதுவரை 700க்கும் மேற்பட்ட குழந்தைகளும் பெரியவர்களும் இத்திட்டத்தின்கீழ் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளார்கள். இந்த ஆண்டின் நிறைவுக்குள் 1,000 என்ற எங்கள் இலக்கை எட்ட இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இத்துடன், ஒரு பன்னாட்டு நல்கைவழியாக மெர்சி மருத்துவ மனைக்கு $271,000 மதிப்புள்ள கருவி பெறப்பட்டுவருகிறது. இன்னும் இரண்டு லட்சியத் திட்டங்கள், 200 ஆதிவாசிக் குழந்தைகளுக்கான ஒரு பள்ளி விடுதி, 1,000 கழிப்பறைகள், 300 ஆழ்துளைக்கிணறுகளை அமைத்தல்.

அவர் குறிப்பிடும் இன்னொரு திட்டம், தெருவில் வாழும் குழந்தைகளுக்கான ஹௌரா தெற்கு மைய இணைப்புப் பள்ளி. இதை வழிநடத்துபவர் ஒரு ஃபிரெஞ்சுப் பாதிரியார், டொமினிக் லாப்பியருடைய ‘சிட்டி ஆஃப் ஜாய்’ புத்தகத்திற்குத் தூண்டுதலாக இருந்தவர் இவர்தான்.



*RC கல்கத்தா தலைவர் பூர்ணேந்து சௌத்ரி தத்தாபுக்கார் கிராமத்தில்.*

இந்தியாவின் பெரும்பாலான மூத்த ரோட்டரித் தலைவர்கள் கல்கத்தா ரோட்டரி சங்கத்தின் நூற்றாண்டுக்கான வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்கள். அதே சமயம், அதன் தலைவர் சௌத்ரியின் இளம் தோள்களில் 100 ஆண்டுப் பண்பாட்டுச் சுமை இறங்குகிற நிலையையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

கொல்கத்தாவில் இந்தச் சங்கத்தின் பதிவு நாளின்போது RI இயக்குநர் பரத் பாண்ட்யா இதை மிகச் சிறப்பாக விளக்கினார், இச்சங்கத்தின் கடந்தகாலம் மிகச் சிறப்பாக இருந்துவந்திருப்பதில் ஐயமில்லை; நாம் பழையதை எண்ணிப் பெருமைகொள்கிறோம்; ஆனால் இப்போது, எதிர்காலத்தை நோக்கி நகரவேண்டிய நேரம். தலைமைச் சுடர் உங்கள் இளம் தலைவர் சௌத்ரியிடம் இருக்கிறது; அந்தச் சுடரை இன்னும் சற்று மேலே தூக்கிப் பிடியுங்கள்; அதை இன்னும் சற்றுக் கூடுதலாக ஒளிரச் செய்யுங்கள், வருங்காலத் தலைமுறைகளுக்கு அதை வழங்குங்கள்.

சௌத்ரி இதைத்தான் செய்ய முயல்கிறார். இந்த ஆண்டுக்கான அவருடைய பல முக்கியப்பணிகளில் முதலாவது, உறுப்பினர்களுடன் இணைவது; சங்கத்தை இன்னும் வலுவாக்குவது; வெளி இணைப்புகளைப் பெறுவது.

இந்த இலக்கின் ஒரு பகுதியாக, முன்னாள் தலைவர் சௌமென் ரே தலைமையிலான நூற்றாண்டுக் குழு, ஆசியாவில் 100 வயதைக் கடந்த அல்லது விரைவில் 100 வயதை எட்டவிருக்கும் அனைத்துப் பழைய சங்கங் களுடனும் தொடர்புகொள்ள முனைகிறது. ஷாங்காய், மணிலா, கல்கத்தா மற்றும் அடுத்த வருடம் 100 வயதை எட்டும் டோக்கியோ சங்கங்களின் கூட்டமைப்பொன்றை நாங்கள் உருவாக்குகிறோம்; இதன் முதல் கூட்டம், நூற்றாண்டுச் சந்திப்பின் போது நடைபெறும் என்கிறார் சௌத்ரி.



குழந்தைகளை மகிழ்விக்கும் ஒரு சங்கத்திட்டம்.

இதில் சிறப்பான விஷயம், களத்தில் ஒத்துழைப்பு ஏற்கெனவே தொடங்கிவிட்டது. இதய அறுவைச் சிகிச்சை தேவைப்படும் நைஜீரியப் பெண் குழந்தையொன்றை ஷாங்காய் சங்கம் அடையாளம் கண்டுள்ளது; இந்த அறுவைச் சிகிச்சை கொல்கத்தாவில் நடைபெறும் என்கிறார் ரே.

பள்ளிகளைக் கட்டுவதற்கும் இந்தச் சங்கம் பெரிய திட்டங்களை வைத்துள்ளது, இளம்பிள்ளைவாதத்தை அடுத்த பெரிய விஷயமாக நாங்கள் எழுத்தறிவைக் காண்கிறோம்; ஆகவே, பள்ளிகளைக் கட்ட விரும்புகிறோம். இவற்றில் இரண்டு பள்ளிகளுக்கான பணி தொடங்கிவிட்டது, மூன்றாவது பள்ளி புருலியாவில் திட்டமிடப்படுகிறது.''

முதல் பள்ளி ஹௌராவில் ஜெர்மன் சங்கத்தின் ஆதரவுடன், பன்னாட்டு நல்கை வழியாகக் கட்டப்படுகிறது. இரண்டாவது பள்ளி டார்ஜிலிங்கில் கட்டப்படுகிறது.


டார்ஜீலிங்கில் பழங்குடியினரின் குழந்தைகளுக்கான பள்ளியை இச்சங்கம் புதுப்பிக்கவுள்ளது.

கொல்கத்தா அருகிலுள்ள பிஷ்ணுபூர் RCCயிலுள்ள பள்ளியில் சங்க உறுப்பினர்கள் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருவதாகத் தொடர்ந்து சொல்கிறார். சமீபத்தில், நாங்கள் அரபிந்தோ சிக்ஷா கேந்த்ரா ரோட்டரி தொடக்கப் பள்ளியை உருவாக்கினோம். இப்போது எங்களுடைய திட்டம், பிஷ்ணுபூரை ஒரு மாதிரி RCCயாக ஆக்குவது என்கிறார் சௌமென் ரே.■

# இலங்கையில் மிகச்சிறந்தமுறையில் பணியாற்றும் ரோட்டரியன்கள்: மலோனி

ரஷீதா பகத்

கொழும்பிலுள்ள RID 3220ன் முன்னாள் ஆளுநர்கள், ரோடராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்கள், பிற ரோட்டரி தலைவர்கள் நிறைந்த ஒரு கூட்டத்தில் பேசிய RI தலைவர் மார்க் மலோனி, RI தலைவராக இருப்பதன் மிகச்சிறந்த நன்மைகளில் ஒன்றைக் குறிப்பிட்டார், கே, நான் இருவரும் உலகெங்கும் பயணம் செய்து, உலகெங்கும் ரோட்டரியன்கள் செய்கிற மிகச் சிறந்த பணிகளைக் காண இயலுகிறது; அவர்களுடைய தோழமை மற்றும் அர்ப்பணிப்புணர்வை அனுபவிக்க இயலுகிறது.

அந்த நிகழ்ச்சிக்கு முன்பாக, அன்று காலையில் தான் இரண்டு மிகச் சிறந்த திட்டங்களைக் கண்டதாகக் குறிப்பிட்டார் அவர்: RC கொழும்பு மேற்கு செய்த GG திட்டமாகிய மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான அயதி வளாகம் மற்றும் RC கொழும்பு ஃபோர்ட் செய்த இன்னொரு பன்னாட்டு நல்கைத் திட்டமான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் மனித இதய வால்வ் வங்கி.

இலங்கையிலும் பிற உலக நாடுகளிலும் ரோட்டரியன்கள் செய்கிற பணிகளைக் காண்பது மிகச்சிறந்த அனுபவமாக உள்ளது. என்னுடைய மாவட்டத்தில் மிகப்பெரிய சங்கங்களில் ஒன்று, RC பிர்மிங்காம். இதில் 640 உறுப்பினர்கள் உள்ளார்கள். (PRIP K R) ரவீந்திரன் அந்த ரோட்டரி சங்கத்தின் மதிப்புறு உறுப்பினர். கடந்த பல ஆண்டுகளாக, RC பிர்மிங்காம் மற்றும் RC கொழும்பு ஆகியவை பல திட்டங்களில் இணைந்து செயல்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று, இலங்கையிலிருந்து கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை நீக்குகிற திட்டம், இதை நான் மிக முக்கியமாகக் கருதுகிறேன். இந்தத் திட்டம் என்னை மிகவும் கவர்ந்து விட்டதால், IA 2020ல் உள்வரும் அனைத்து ஆளுநர்களுக்கும் இந்தத் திட்டத்தை வெளிச்சம் போட்டுக்

*இடதிலிருந்து: Rtn குமார் நடேசன், TRF அறங்காவலர் தலைவர் தேர்வு K R ரவீந்திரன், இலங்கைக்கான அமெரிக்க தூதர் அலைனா டெப்லிட்ஸ், RI தலைவர் மார்க் மலோனி மற்றும் கேய்.*





**இடதிலிருந்து:** *வினிதா,* RIDN A S *வெங்கடேஷ்,* PRID C *பாஸ்கர்,*
*அறங்காவலர் தலைவர் தேர்வு* K R *ரவீந்திரன் மற்றும்* RID 3070 DG *சுனில் நாக்பால்.*

காட்டும் படி ரவீந்திரனையும் RC பிர்மிங்காமைச் சேர்ந்த Dr எட் பார்ட்ரிட்ஜ்-ஐயும் நான் கேட்டுக்கொண்டுள்ளேன்.

தனிப்பட்ட இணைப்புகளும் முக்கியம் என்பதை மீண்டும் வலியுறுத்தினார் மலோனி, பல ஆண்டுகளுக்கு முன்னால், 1994ல், PDGயான ரவீந்திரன் பன்னாட்டுச் சந்திப்பில் தொடர்ந்து இரண்டாம் ஆண்டாகப் பயிற்சித் தலைவராக அழைக்கப்பட்டார். அப்போது, அதே IAவில் அலபாமாவைச் சேர்ந்த இன்னொரு முன்னாள் ஆளுநர் முதன்முறையாக ஒரு பயிற்சித் தலைவராவதற்கான அழைப்பிதழைப் பெற்றார். அந்த இளம் PDG, நான் தான். என்னுடைய மூத்த பயிற்சிதலைவரான ரவி அப்போது என்னை மிகவும் கஷ்டப்படுத்தினார், இப்போதும் கஷ்டப்படுத்துகிறார்! ஆனால், ஜூலையில் தொடங்கி, அறங்காவலர் தலைவராக அவர் வழங்கப்போகும் தலைமையை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் RY 20–21ல் இதைவிடச் சிறந்த எந்தக் கரங்களுக்கும் நம் அறக்கட்டளை சென்றுவிட இயலாது.

TRF மேலாண்மைபற்றி ரவீந்திரன் ஏற்கெனவே நிறையச் சிந்தித்துள்ளார் என்று மலோனி தெரிவித்தார். இந்நிலையில், இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவது நமக்கு எவ்வளவு முக்கியம் என்பதை அவர் உணர்ந்துள்ளார். சமீபத்தில், அவரும், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஹோல்கர் நாக்-கும் பாகிஸ்தான் சென்றார்கள்; உலகின் பிரச்னைக்குரிய இடமாகிய அந்நாட்டில் இளம் பிள்ளைவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதை உறுதிசெய்வதற்காக அந்நாட்டின் பிரதமர், ராணுவத் தலைவருடன் பேசினார்கள்.

ரவீந்திரன் தன்னுடைய தொழில் துறைத் திறமைகளை TRFக்குக் கொண்டுவருவார்; நம்முடைய கப்பல் கசிவில்லாமல் இருப்பதை உறுதி செய்வார் என்று RI தலைவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

ரோட்டரியன்கள், ரோடராக்டர்களுக்குத் தலைமைத் திறன்களில் பயிற்சியளிப்பதற்காக, ‘டோஸ்மாஸ்டர்ஸ் இன்டர் நேஷனலுடன்’ இம்மாவட்டம் இணைந்து செயல்படுவதை மலோனி பாராட்டினார்.

‘டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல்’ முன்னாள் தலைவரான பால்ராஜ் அருணாசலன் அந்த அறையில் இருப்பதைக் குறிப்பிட்டு இவ்வாறு பேசினார்: இந்த அறையில், டோஸ்ட்மாஸ்டர் இன்டர்நேஷனல் மற்றும் RI முன்னாள் தலைவர்கள் இருக்கிறார்கள், இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். நீங்கள் உங்களுடைய திறனுக்கு மீறிச் சாதிக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன்! USல் RI தலைவர்கள் பலர் உண்டு. ஆனால், இலங்கையைப்போன்ற ஒரு சிறிய நாட்டில், 1.6 மில்லியன் மக்களைப் பிரதிபலிக்கும் பன்னாட்டு அமைப்புகளுடைய இரு தலைவர்கள் இருப்பது ஒரு மிகச்சிறந்த சாதனை!’’

அவர் தொடர்ந்து குறிப்பிட்டது: இனி நாம் தனியாக இருக்க இயலாது என்ற நிலைக்கு வந்து விட்டோம்; நாம் பிறருடன் கூட்டணிகளை அமைக்கவேண்டும். இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதற்காக நாம் கேட்ஸ் அறக்கட்டளை, WHO, யுனிசெஃப் போன்றோருடன் கூட்டணி அமைத்தோம், அது போன்ற சிறந்த கூட்டணிகள் தான் ரோட்டரியை வளர்ப்பதற்கும், நம்முடைய இரு அமைப்புகளுக்கு மிடையிலான ஒத்திசைவை உருவாக்குவதன் மூலம் நம் தாக்கத்தைப் பெருக்குவதற்கு மான வழிகள்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# கொழும்பில் RI தலைவர் மார்க்





**மேலே:** *RI தலைவர் மார்க் மலோனி, PDG சாம் மோவா மற்றும் TN சுப்ரமணியனுடன்.*

**வலது:** *பிறந்தநாள் கொண்டாடும் கேய்*



# மலோனி





**மேலே:** *TRF அறங்காவலர் தலைவர் தேர்வு KR ரவீந்திரன், வானதி, RI தலைவர் மலோனி மற்றும் கேய்*

**இடது:** *தலைவர் மார்க் மலோனி மற்றும் கேய் வானதி அறங்காவலர் தலைவர் தேர்வு ரவீந்திரன் கொலம்போ எவஸ்ட் உறுப்பினர் அஜய் அமலீன் செபஸ்டியன் கருணாகரன் மற்றும் கொலம்போ வெஸ்ட் தலைவர் ப்ரவீர் சமரசிங்கே ஆகியோருடன் அயத்தி அறக்கட்டனை அலுவலகத்தில்.*






*கொழும்பில் மல்லிகைப்பூ சூடிய பெண்மணி*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# அயாத்தி அறக்கட்டளை வழியாகச் சிறப்புக் குழந்தைகளுக்கு நம்பிக்கை தரும் ரோட்டரி

ரஷீதா பகத்

எங்கு பார்த்தாலும் அதே பழைய கதைதான் மாற்றுத் திறனாளிகளைப்பற்றிய அறிவும் புரிந்துகொள்ளலும் போதாத, அல்லது, இல்லவே இல்லாத பொதுச் சமூகத்தால் சிறப்புக் குழந்தைகள் விலக்கப்படுகிறார்கள். இதற்கு இலங்கையும் விதிவிலக்கில்லை.

சில ஆண்டுகளுக்குமுன்னால், இலங்கையைச் சேர்ந்த ரோட்டரியன்கள் இலங்கை அரசு, அதன் ராணுவம், மருத்துவ, கல்வி அமைப்புகள் மற்றும் பெரிய நிறுவனங்களுடன் இணைந்து, சிறப்புக் குழந்தைகளுக்கான ஒரு தனித்துவமான திட்டத்தை ஆதரிக்கத் தீர்மானித்தார்கள்.

இந்த மிகப்பெரிய கூட்டணியானது, மன, உடல் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகளுக்கான ஒரு வண்ணமயமான, துடிப்பான, செயல்திறன்மிக்க, போதுமான அளவு ஊழியர்களைக் கொண்ட, பரந்து விரிந்த வளாகத்துக்கு வழிவகுத்துள்ளது. இதற்கு “அயாத்தி” (சமஸ்கிருதத்தில் “நம்பிக்கை”) என்று பொருத்தமாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழகம், ஹெமாஸ் ஹோல்டிங்ஸ், MAS ஹோல்டிங்ஸ் (இவை இரண்டும் இலங்கையின் ப்ளூ சிப் தொழில் கூட்டு நிறுவனங்கள்), ரோட்டரி இலங்கை ஆகியோரின் ஒருங்கிணைந்த உடனுழைப்பின் வழியாக உருவாக்கப்பட்ட தொண்டு அறக்கட்டளையான இந்த உயர் தொழில்நுட்ப, துடிப்பான, புதிய வளாகம், சிறப்புக் குழந்தைகளுக்குப் பலவிதமான நோய் கண்டறிதல், மாற்றுதல், சிகிச்சை வசதிகளை வழங்கத் தயாராகிறது.

RI தலைவர் மார்க் மலோனி சமீபத்தில் கொழும்பு வந்திருந்த போது, அயாத்தி வளாகத்தில் RC



*வானதி, TRF அறங்காவலர் தலைவர் தேர்வு K R ரவீந்திரன், கேய் மற்றும் RI தலைவர் மார்க் மலோனி.*

கொழும்பு மேற்கு நிறை வேற்றிய, ஒரு TRF பன்னாட்டு நல்கையால் நிதியளிக்கப்பட்ட, நல்ல வசதிகளைக் கொண்ட ஒலியியல் மையத்தைத் திறந்துவைத்தார்.

ஒட்டுமொத்தத் திட்டத்தைப்பற்றிய தகவல்களை வழங்கிய உள்வரும் அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன், இந்த $3 மில்லியன் மையம் இரண்டு ஏக்கர் அளவுக்குப் பரந்துள்ளது; 42,000சதுரஅடி கட்டுமான இடத்தைக் கொண்டுள்ளது, இங்கு சேவைகள் இலவசமாக வழங்கப்படும், தெற்காசியாவில் இப்படிப் பட்ட மையங்களில் மிகச் சிறந்தவற்றுள் ஒன்றாக இது அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது என விளக்கினார்.

இதற்கான நிலத்தைக் கொழும்பு பல்கலைக்கழகம் வழங்கியது. இந்த வளாகத்தை 13 மாதங்களில் இலங்கை ராணுவம் கட்டிக் கொடுத்தது. இதற்கு ஹெமாஸ், MAS ஹோல்டிங்ஸ் நிறுவனங்கள் தலா $600,000 அளவில் இரண்டு பெரும் நிதிகளை வழங்கின. இந்த இரு நிறுவனங்களின் முதன்மை வாரியங்களிலும் ரோட்டரி உறுப்பினர்கள் உள்ளார்கள். சுமார் $400,000 அளவிலான TRF பன்னாட்டு நல்கைகளின் மூலம் இதற்குத் தேவையான கருவிகளைக் கிடைக்கச் செய்தது ரோட்டரி கொழும்பு வெஸ்ட். இதற்கு இந்திய, அமெரிக்க மாவட்டங்கள் DDF ஆதரவை வழங்கின என்றார் அவர்.



அனைத்துச் செயல் பாட்டு, பராமரிப்புச் செலவுகளை இந்தப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப்பிரிவு ஏற்கும். மாற்றுத்திறனாளிகளுக்கான சிகிச்சை ஆய்வுத்துறையில் பயிற்சிபெற்ற தொழில் வல்லுனர்களை இப்பல்கலைக்கழகம் வழங்கும். அனைத்து விதமான (உடல் மற்றும் மனப்) பிரச்னைகளுக்கும் இங்கு சேவைகள் வழங்கப்படுகின்றன; தொடக்கத்தில் வடிகட்டல் நிகழ்த்தப்படுகிறது; பின்னர் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை, ஒலியியல், ஃபிசியோதெரபி, குடும்பச் சிகிச்சை, பணிசார்ந்த சிகிச்சை உள்ளிட்ட பல விதமான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. பெற்றோர் மற்றும் கவனித்து கொள்வோருக்கான ஆதரவு, வழிகாட்டுதலையும் இம்மையம் வழங்கும். இம்மையம் ஏற்கெனவே நாடுமுழுக்க 5,000க்கும் மேற்பட்ட வெளி

## குறைபாடும் களங்க உணர்வும்

குறைபாடு கொண்டோருடன் இணைக்கப் பட்டுள்ள களங்கவுணர்வின் அளவைப் பார்வையாளர் களுக்குப் புரியவைப்பதற்காக, அயாத்தி அறக்கட்டளையின் செயல் இயக்குநரும் குழந்தைகள் உளவியலாளருமான ஷிரோமி மச கொராலா சில கதைகளைப் பகிர்ந்துகொண்டார், அவை கேட்போர் இதயத்தை நொறுக்குபவையாக அமைந்தன.

இந்த வளாகத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளுக்காக, தெற்கு இலங்கையின் உட்பகுதிகளில் நான் ஒரு விழிப்புணர்வுத் திட்டத்தை நடத்தினேன்; அங்கு நன்றியுரை வழங்கிய ஒரு தாய் இவ்வாறு கூறினார்: "ஒவ்வொரு தாயும், தன் குழந்தை 400 ஆண்டுகள் வாழவேண்டும் என்று தான் நினைப்பார்கள்; ஆனால் நானோ, நான் இறப்பதற்கு ஒருமணிநேரம் முன்பாக என் குழந்தை இறந்து விடவேண்டும் என்று விரும்புகிறேன்."

அயாத்தி-யின் ஒரு பெரிய நன்கொடையாளரான அவருடைய நிறுவனம் ஹெமாஸ் ஹோல்டிங்ஸ், குழந்தைகளுக்கான விளையாட்டுப்பள்ளிகளை நடத்துகிறது. அங்கு ஒரு தாய் அவரிடம் கூறியது: என் மகனை உங்கள் மையத்துக்கு அழைத்துவருவதற்காக, நான் அவனை 3கிமீ சுமந்துவருகிறேன். ஆனாலும், எங்களைப் பார்த்தாலும் பேருந்து நிற்பதில்லை, காரணம், என் மகன் "கெட்டவனாக"த் தோன்றுகிறான் காலை நேரத்தில் அவனைப் பார்த்தால் எல்லாரும் கெட்ட சகுனமாக நினைக்கிறார்கள். ஆனால் எனக்கு, அவன்தான் மிகவும் மதிப்புமிக்க மாணிக்கம்"

இன்னொரு விஷயம், அவர்களுடைய விளையாட்டுப் பள்ளிகளில் அவ்வப்போது ஒரு மாற்றுத்திறனாளிக் குழந்தை சேர்க்கப்படும்போது, பிற பெற்றோர் தங்கள் குழந்தைகளை வேறு பள்ளிகளுக்கு மாற்றிவிடுகிறார்கள். குறைபாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ள களங்கவுணர்வு அந்த அளவு பெரியது.

ரோட்டரியன்கள் அயாத்தி-க்குப் பண உதவி செய்யலாம்; அதைத்தாண்டி, வேறு எந்த வழிகளில் அவர்கள் அயாத்தி-க்கு உதவலாம் என்று நான் அவரைக் கேட்டேன். உண்மையில் அவர்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய உதவி ஒன்று இருக்கிறது: குறைபாடுகளுடன் தொடர்புடைய களங்கவுணர்வை அகற்றுவதற்கான சமூகப் பரப்புரைகளை நடத்தலாம். அவர்கள் இலங்கையிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை அகற்றியவர்களாயிற்றே, இந்த முக்கியமான நோக்கத்துக்காகவும் அவர்கள் நிச்சயம் பங்களிக்கலாம் என்று பதிலளிக்கிறார் அவர்.

நோயாளிகளைப் (குழந்தைகள்) பதிவு செய்துள்ளது என்று தொடர்ந்து குறிப்பிட்டார் ரவீந்திரன்.

அயாத்தி அறக்கட்டளை யின் செயல் இயக்குநரான ஷிரோமி மசகொராலா இதுபற்றிப் பேசுகையில் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்குச் சிகிச்சை யளித்தல், பயிற்சியளித்தல், பணிசார்ந்த திறன்களை அவர்களுக்கு வழங்கிச் சமூகத்தின் பயனுள்ள, உருவாக்கும் திறன் கொண்ட உறுப்பினர்களாக ஆக்குவதற்கு இந்நாட்டில் ஒரு மிகப்பெரிய தேவை உள்ளது என்றார்.

இதுபற்றிய புள்ளி விவரங்களை வழங்கிய அவர், இப்படிப்பட்ட ஒரு வளாகத்தை அமைக்கும் எண்ணம் 2016ல் உண்டானது என்றார். நாங்கள் ஒரு முழுமையான கணக்கெடுப்பு நிகழ்த்தினோம்; இலங்கையில் சுமார் 20 சதவிகிதக் குழந்தைகள், அதாவது, ஐந்தில் ஒரு குழந்தைக்கு, ஏதாவது ஒரு குறைபாடு இருப்பதைக் கண்டறிந்தோம். பன்னாட்டளவில் 2 முதல் 5 சதவிகிதக் குழந்தைகளுக்குச் செரிப்ரல் பால்சி உள்ளது; 18 சதவிகிதத்தினருக்கு டிஸ்லெக்ஸியா உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை, பல நேரங்களில் டிஸ்லெக்ஸியா என்றால் என்ன என்றே அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை; ஆகவே, அந்தப் பிரச்னையுள்ள குழந்தைகள் தனிமையில் விடப்படுகிறார்கள்; அல்லது, “இந்தக் குழந்தைக்கு அறிவு போதாது” என்றோ, “இவர் மெதுவாகக் கற்கிறவர்” என்றோ முத்திரை குத்தப்பட்டு ஓரங்கட்டப்படுகிறார்கள்.''

அப்படிப்பட்ட குழந்தைகளைச் சிறு வயதிலேயே அடையாளம் கண்டு, சரியான சிகிச்சையும் பயிற்சியும் வழங்கினால், அவர்களைப் பொதுச் சமூகத்தில் இணைக்கலாம், வழக்கமான பள்ளிகளுக்குக்கூட அனுப்பலாம். எங்களுடைய நோக்கம், இப்படிப்பட்ட இணைப்பை வழங்குவதுதான்; நாடுமுழுவதிலுமிருந்து தேவையுள்ள குழந்தைகள் இந்த மையத்துக்கு வருவார்கள், இங்கு பகல்நேர மருந்தகங்களில் பல துறை வல்லுனர்களின் குழுவொன்று அவர்களை மதிப்பிடும், அவர்கள் உரிய சிகிச்சையையும், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்காகச் சிறப்பாக வடிவமைக்கப் பட்ட பணிசார்ந்த பயிற்சி யையும் பெறுவார்கள். இந்த மதிப்பீட்டை, குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவர்கள் செய்வார்கள்; தேவைப்படும் சிகிச்சைகள் வழங்கப்படும்.''

குழந்தைகளுக்கான மகிழ்ச்சியான் விளை யாட்டுப் பொருட்கள் நிறைந்த இந்தப் புதிய, நவீன வளாகத்தின் மிகச்சிறந்த அம்சம், இது மருத்துவத்துறை என்கிற குடையின்கீழ் வந்தாலும், இது ஒரு மருத்துவமனை இல்லை; இது ஒரு சமூக அமைப்புதான்; ஆகவே, குழந்தைகள் தங்களுக்கு ஏதோ பிரச்னை என்பது போலவோ, தாங்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் என்பதுபோலவோ உணரமாட்டார்கள். இங்கு நாம் பலவிதமான குறைபாடுகளைக் கையாளலாம்; குழந்தைகளைச் சிறப்பாகச் செயல்படச்செய்யலாம் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

மூத்த RI தலைவர் களுடைய குழு இந்த வளாகத்தைப் பார்வையிட்ட போது, இங்கு கிடைக்கும் வெவ்வேறு பயிற்சிச் செயல்பாடுகளைப்பற்றிய பல தொழில்நுட்பத்



*RI தலைவர் மார்க் மலோனி, கேய், RC கொலம்போ வெஸ்ட் தலைவர் ப்ரவீர் சமரசிங்கே, DG செபாஸ்டியன் கருணாகரன், RID 3070 DG சுனில் நாக்பால், அயாதி நிறுவனத்தலைவர் ஷிரோமி மசக் கொரோலா, Rtn அஜய் அமலின், TRF அறங்காவலர் தலைவர் தேர்வு K R ரவீந்திரன், வானதி, RC கொலம்போ உறுப்பினர் அப்பாஸ் எசுஃபலி மற்றும் RIDN A S வெங்கடேஷ்.*



தகவல்களை வல்லுநர்கள் விளக்கினார்கள். கேய் மலோனி குழந்தைகளிடம் சென்று பேசினார், விளையாடினார்.



இந்தக் குழந்தைகளைப் பொதுச் சமூகத்தில் இணைப்பதில் இருக்கு மிகப்பெரிய சவால், மாற்றுத்திறனாளிகளுடன் இணைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய களங்கவுணர்வுதான் என்று தொடர்ந்து குறிப் பிட்டார் ஷிரோமி. இலங்கை அல்லது ஆசியாவில்தான் என்றில்லை, உலகில் மிக முன்னேறிய நாடுகளில்கூட இந்தப் பிரச்னை உண்டு.

ஒருபக்கம், சிறப்புக் குழந்தைகளைப் போதுமான முறையில் கையாள்வதற்குப் பயிற்சி பெற்ற தொழில் வல்லுநர்களுக்கான பற்றாக்குறை உள்ளது. இன்னொருபக்கம், கவனித்துக்கொள்வோர், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான ஆதரவு அமைப்பும் குறைவாக உள்ளது. அத்துடன், எதிர்மறை எண்ணங்களும் உள்ளன; ஒரு குழந்தை குறைபாட்டுடன் பிறக்கும் போது, பெற்றோரும் ஒட்டு மொத்தக் குடும்பமும் நம்பிக்கையிழந்து விடுகிறார்கள், தங்களுக்கு உதவ யாரும் இல்லை என்று எண்ணுகிறார்கள், எதெதிலோ பணம் செலவழிக்கத் தொடங்கு கிறார்கள். இப்படிப்பட்ட பெற்றோர்/கவனித்துக் கொள்வோருக்கு நம்பிக்கை அளிப்பதற்காக நாங்கள் எங்கள் அறக்கட்டளைக்கு அயாத்தி என்று பெயர் சூட்டியிருக்கிறோம்.''

அடுத்தபடியாக, இந்த வளாகம் உலகத்தரம் கொண்ட மிகச்சிறந்த மையமாக ஆவதுடன், தொலைநோக்கில் நீடித்திருக்க வேண்டும், அதன்மூலம், பொது மற்றும் தனியார் கூட்டணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும், இவற்றை அயாத்தி வாரியம் உறுதிசெய்யவிரும்புகிறது. அத்துடன், இந்தக் கருத்தாக்கத்தைக் கல்விப் பணியில் ஈடுபடும் பிற மருத்துவமனைகளுக்கும் கொண்டுசெல்வதற்கு நல அமைச்சகம் திட்டமிடுகிறது. இலங்கைமுழுவதிலுமிருந்து மக்கள் இங்கு அனுப்பப் படுவதால், ஒரு தங்கும் மையமும் திட்டமிடப்படுகிறது.

ரோட்டரியால் நன்கொடையாக வழங்கப்படுகிற, நல்ல வசதிகளைக் கொண்ட ஒலியியல் மையத்தைத் தொடங்கிவைத்த RI தலைவர் மலோனி, மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான ஒரு மிகச்சிறந்த, உலகத் தரத்திலான மையத்தை உருவாக்குவதற்காக, பல அமைப்புகளை உலக ரோட்டரியன்களுடன் ரோட்டரி இணைத்துள்ளது, இது ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. ரோட்டரியின் பெருமைக் குரிய நாள் இது என்றார்.

PRIP ரவீந்திரன் தொடர்ந்து பேசுகையில்,

அடுத்த ஆண்டு TRF அறிமுகப் படுத்தவிருக்கும் புதிய அளவுத் திட்டங்கள், இவ்வகையிலான திட்டங்களைதான் பின்பற்ற முயலும் என்றார். இந்தத் திட்டம், பெரிதாகச் சிந்திக்கவேண்டும், சக-கூட்டு நிறுவனங்கள், ஆதரவாளர்களை அணுகவேண்டும், அவர்களுடன் இணைந்து, பெரிய பிரச்னைகளுக்கு ஒரு முழுமையான தீர்வைக் கண்டறியவேண்டும், அதன் பலன்களை இன்னும் கூடுதலான மக்களுக்குக் கொண்டுசேர்க்க வேண்டும் என்றெல்லாம் ரோட்டரி சங்கங்களுக்குச் சவால் விடும், அவற்றைத் தூண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, ஒட்டுமொத்த நாடும் இதனால் பலனடையும்.''

பின்னர், தலைவர் மலோனி ஒரு மனித இதய வால்வ் மற்றும் திசு வங்கிக்கும் வருகை தந்தார். இந்த வங்கி, கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் ஒரு பன்னாட்டு நல்கையின்வழியாக RC கொழும்பு ஃபோர்ட்டால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, மனித இதய வால்வ்கள் எடுக்கப்பட்டுச் சேமிக்கப்படுகின்றன; பழுதான இதய வால்வ் கொண்ட குழந்தைகளுக்கான அறுவைச்சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

செயற்கை இதய வால்வ்கள் அல்லது விலங்குகளிலிருந்து எடுக்கப்பட்ட வால்வுகளையும் நாம் பயன்படுத்தலாம், ஆனால், அவற்றில் விரைவாகக் கடினமாகிவிடுகின்றன (calcified). ஆனால், மனிதர் களிடமிருந்து எடுத்த வால்வ்கள் அதிக நாள் நீடிக்கின்றன, எனவே, இவை கிடைக்கும் சூழ்நிலைகளில் உலகில் எல்லா இடங்களிலும் இவற்றுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று இதயச் சிகிச்சை வல்லுநர்கள் வருகையாளர்களுக்கு விளக்கினார்கள்.

ஒருவர் இறந்து 24 மணி நேரத்துக்குள் இப்படிப்பட்ட வால்வ்களை எடுக்கவேண்டும்; பெரியவர்களுடைய வால்வ்களைக் கூடக் குழந்தைகளுக்குப் பயன் படுத்தலாம். இந்த வங்கியில்



இந்த வால்வ்களை மிகக் குளிரான வெப்பநிலையில் ஓராண்டுக்குச் சேமிக்கலாம்; இப்போது எங்களிடம் நான்கு பயன்படுத்தக்கூடிய இதய வால்வ்கள் உள்ளன. எடுக்கப்பட்ட அனைத்து வால்வ்களையும் பயன்படுத்த இயலாது; வால்வில் எந்த நுண்ணுயிரிகளும் இல்லை என்பதை உறுதிப்படுத்த நாம் ஒரு culture பரிசோதனை செய்யவேண்டும். இதில் சிறு ஐயம் ஏற்பட்டாலும், நாங்கள் அந்த வால்வை நிராகரித்துவிடுவோம் என்று விளக்கினார் ஒரு மருத்துவர்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை ஒரு நல்ல விஷயம், குடிமக்கள் தயக்கமின்றித் தங்கள் உடல் பகுதிகளை நன்கொடையாக அளிக்கிறார்கள்; மக்கள் நன்கொடை அளிக்க மறுக்கிற பிரச்னை எங்களுக்கு ஒருமுறைகூட ஏற்பட்டதில்லை.''

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

## A new assignment for PRID Desai



PRID Manoj Desai is appointed by RI as one of the six members of the Operations Review Committee which is chaired by PRID Karen Wentz. The assignment is for a six year term and involves reviewing the effectiveness and efficiency of operations, administrative procedures, standards of conduct and other operational functions as assigned by the Board. This committee also serves as the advisory compensation committee to the Executive Committee.

## Rotary News Subscription Remittances

**You can pay the**
**Rotary News / Rotary Samachar**
**subscription online**

**Our Bank details:**

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Montieth Road<br>Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

**E mail us following details:**

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Membership Summary

As on March 2, 2020

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | *Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,893 | 254 | 48 | 35 | 223 |
| 2982 | 67 | 3,122 | 162 | 84 | 82 | 55 |
| 3000 | 130 | 5,510 | 522 | 187 | 249 | 211 |
| 3011 | 88 | 3,696 | 939 | 51 | 83 | 25 |
| 3012 | 102 | 3,772 | 952 | 53 | 69 | 59 |
| 3020 | 73 | 4,260 | 244 | 54 | 54 | 350 |
| 3030 | 94 | 5,097 | 688 | 100 | 159 | 287 |
| 3040 | 89 | 2,102 | 245 | 37 | 45 | 144 |
| 3053 | 64 | 2,825 | 488 | 19 | 39 | 99 |
| 3054 | 128 | 6,186 | 1,146 | 79 | 137 | 502 |
| 3060 | 96 | 4,523 | 665 | 55 | 59 | 143 |
| 3070 | 106 | 3,170 | 445 | 45 | 20 | 58 |
| 3080 | 84 | 3,477 | 320 | 89 | 136 | 115 |
| 3090 | 79 | 2,070 | 56 | 37 | 5 | 122 |
| 3100 | 99 | 2,666 | 377 | 13 | 13 | 146 |
| 3110 | 123 | 3,736 | 328 | 28 | 7 | 105 |
| 3120 | 79 | 3,345 | 469 | 42 | 18 | 53 |
| 3131 | 135 | 5,505 | 1,225 | 103 | 171 | 116 |
| 3132 | 84 | 3,520 | 375 | 33 | 81 | 158 |
| 3141 | 103 | 5,780 | 1,402 | 116 | 129 | 87 |
| 3142 | 93 | 3,369 | 700 | 79 | 115 | 65 |
| 3150 | 93 | 3,645 | 382 | 58 | 121 | 116 |
| 3160 | 72 | 2,497 | 171 | 28 | 3 | 83 |
| 3170 | 128 | 5,767 | 735 | 75 | 187 | 169 |
| 3181 | 81 | 3,575 | 347 | 63 | 192 | 118 |
| 3182 | 83 | 3,203 | 266 | 46 | 90 | 97 |
| 3190 | 128 | 5,069 | 744 | 137 | 133 | 60 |
| 3201 | 145 | 5,673 | 459 | 104 | 72 | 50 |
| 3202 | 129 | 5,257 | 327 | 84 | 243 | 46 |
| 3211 | 143 | 4,649 | 349 | 8 | 23 | 132 |
| 3212 | 103 | 4,219 | 333 | 101 | 183 | 146 |
| 3231 | 92 | 3,798 | 457 | 51 | 71 | 357 |
| 3232 | 127 | 5,147 | 896 | 127 | 184 | 92 |
| 3240 | 90 | 3,117 | 418 | 50 | 365 | 190 |
| 3250 | 101 | 3,949 | 705 | 62 | 63 | 182 |
| 3261 | 72 | 2,655 | 379 | 16 | 18 | 43 |
| 3262 | 105 | 3,632 | 431 | 46 | 36 | 77 |
| 3291 | 155 | 3,852 | 808 | 86 | 84 | 616 |
| **India Total** | **3,877** | **1,52,328** | **20,209** | **2,494** | **3,774** | **5,697** |
| 3220 | 70 | 1,973 | 281 | 82 | 123 | 73 |
| 3271 | 93 | 1,537 | 278 | 63 | 19 | 22 |
| 3272 | 150 | 1,814 | 311 | 52 | 15 | 43 |
| 3281 | 221 | 5,934 | 927 | 227 | 45 | 195 |
| 3282 | 167 | 4,934 | 647 | 154 | 38 | 44 |
| 3292 | 124 | 4,992 | 792 | 132 | 111 | 115 |
| **S Asia Total** | **4,702** | **1,73,512** | **23,445** | **3,204** | **4,125** | **6,189** |

*Source: RI South Asia Office*

Rotary India Centennial Summit 2020

# நூற்றாண்டுச் சந்திப்பில் மினி-கொல்கத்தாவின் மாயாஜாலம்

V முத்துகுமரன்



நூற்றாண்டுச் சந்திப்பு நிறைவடைந்து விட்டது, பேச்சாளர்கள், நிகழ்வுகள், பின்னிரவுக் கொண்டாட்டங்களெல்லாம் பழைய நினைவுகளாகிவிட்டன, ஆனால் இப்போதும் ஒரு விஷயம் நம் இதயங்களில் தொடர்ந்து மிளிர்கிறது. ஆம், கொல்கத்தாவின் HoF பகுதி என்று செல்லமாக அழைக்கப்பட்ட நட்பு இல்லம்தான் அது. கொல்கத்தாவில் நடைபெற்ற ரோட்டரி இந்தியா நூற்றாண்டுக் கொண்டாட்டங்களில் அனைவரையும் ஈர்த்த விஷயம் அதுதான்.

HoFல் காணப்பட்ட மூன்று நாள் தோழமையும், நட்பும் பங்கேற்பாளர்களைச் சுறுசுறுப்பாக்கின, புதிய நட்புகளை உண்டாக்கச் செய்தன, நல்ல பழக்க வழக்கங்களைப்பற்றிய குறிப்புகளைப் பகிர்ந்து கொள்ளச் செய்தன, சுவையான கொல்கத்தா மற்றும் இந்தியப் பண்பாட்டு உணவுகளைச் சுவைபார்க்கச் செய்தன, பல கடைகளில் ஷாப்பிங் செய்யவைத்தன, அனைத்துக்கும் மேலாக, ஒவ்வொரு நாளின் நிறைவிலும் இசை, நடனத்தை அனுபவிக்கவைத்தன.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்கிறவர்களுக்கு ஒரு வாழ்நாள் அனுபவத்தை நாங்கள் வழங்க விரும்பினோம். மூன்று நாட்களிலும் மிகப்பலரை ஈர்ப்பதற்கான ஒரு சூழலை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டது என்றார் HoF குழுத் தலைவர் PDG V ராஜா சீனிவாசன்.

இங்குள்ள உட்பகுதி நான்கு பெரிய பிரிவுகளாகப் பகுக்கப்பட்டது: உணவுப் பகுதி; அமரும் வசதி கொண்ட மேடை; HoF கடைகள் மற்றும் நன்கு அலங்கரிக்கப்பட்ட ஓர் ஓய்வகம். இந்த நான்கு பகுதிகளிலும் நாள்முழுக்க மகிழ்ச்சியும் உரையாடலும் நிறைந்திருந்தன. அட்டாப் பகுதியில் ரோட்டரி திட்டங்கள் (77 அரங்குகள்), வணிக அரங்குகள் (14) மற்றும் கொல்கத்தாச் சந்தை (14 காட்சிப்பொருட்கள்) என மொத்தம் 105 அரங்குகள் இருந்தன.

### மிகச்சிறந்த திட்டங்கள்

TEACH, போலியோப்ளஸ், LN–4 மற்றும் ஜெய்ப்பூர் லிம்ப்ஸ், இதய அறுவைச் சிகிச்சைகள், WASH திட்டங்கள், மகிழ்ச்சிப் பள்ளிகள் உள்ளிட்ட ரோட்டரி இந்தியாவின் முதன்மையான, புகழ்பெற்ற திட்டங்களில் சில, RIDக்கள் 3291, 3030, 3170, 3201 மற்றும் 3012ன் அரங்குகள் உட்பகுதியின் ஒரு பாதியில் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.



கொல்கத்தாச் சந்தை, மகிழ்ச்சி நகரத்தின் தெருக்கள், சந்துகளில் ஷாப்பிங் செய்கிற ஓர் உணர்வைத் தருவதற்காக வடிவமைக்கப் பட்டது. நூற்றாண்டு ஓய்வகத்தில் பங்கேற்பாளர்கள் மனதைத் தளர்வாக்கிக்கொள்ளலாம், குஷன் இருக்கைகளில் சாய்ந்து இயல்பாகப் பேசலாம் என்றார் சீனிவாசன். இன்னொரு தளத்தில், பலவிதமான பாலிவுட் இசைத் தொகுப்புகள் மற்றும் மேடைக் குழு நடனங்கள் பார்வையாளர்களை மகிழ்வித்தன.



உணவுப்பகுதியில் 20 உணவு அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இவற்றில் பலவிதமான இந்திய, இத்தாலிய, சீன மற்றும் கான்டிமென்டல் உணவு வகைகள் ரோட்டரியன்களுடைய சுவை அரும்புகளைத் தூண்டின.





RI தலைவர் மார்க் மலோனி, கே, RIPN சேகர் மேத்தா RID கமல் சங்வி மற்றும் சோனல் அவர்களை வரவேற்கும் நடனக்கலைஞர்கள்.



**மேலே:** ஹவுரா பாலம் மாதிரி முன் செல்ஃபி எடுக்கும் ரோட்டரியினர்.

**இடது:** முத்துபழனியப்பன் அவர் மனைவி கமலாவை வைத்து கொல்கத்தாவின் பிரபலமான கை வண்டியை இழுக்கிறார்.

**கீழே:** இந்திய நடனம் ஆடும் RI தலைவர் மலோனி மற்றும் கேய்.



ரோட்டரி இந்தியா நூற்றாண்டு விழா செயலாளர் கிஷோர் குமார், PDG டிக்கு, ஷோபா கிஷோர் மற்றும் DG M வீரபத்ர ரெட்டி நட்பு கூடத்தில் உணவு அருந்துகின்றனர்.



### நகரத்தின் முக்கியப் பகுதிகள்

பங்கேற்பாளர்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்ற இந்தப் பகுதியில், பழங்கால டிராம், கையால் இழுக்கப்படும் ரிக்ஷா மாதிரிகளுடன் ஒரு மினி கொல்கத்தா-வே உருவாகியிருந்தது. இந்தச் சூழலின் வண்ணமயமான காட்சிகளைக் கண்டு வியந்த கனடா, RID 7010ஐச் சேர்ந்த RIDE வலெரி K வேஃபெர், தலைவர் மார்க் மற்றும் கே-யின் HOF தொடக்க விழா மிக மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் இருந்தது. மேடை நிகழ்ச்சிகளைக் கொண்ட கண்காட்சி, எங்களுடைய கனடாவில் இருப்பதைப்போலவே இருந்தது, ஆனால் இங்கு காணப்பட்ட பன்முகத்தன்மை மிகச் சிறப்பானது. இங்கு காணப்பட்ட உணவுவகைகள் எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தன, இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த உங்கள் திட்டங்களுடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பலருக்கு, ரோட்டரித் தலைவர்கள், வலைப்பின்னலுடன் உரையாடுகிற, புதிய நட்புகளை உருவாக்குகிற ஒரு தளத்தை HoF வழங்கியது. நாங்கள் பழைய நட்புகளை மீண்டும் கண்டறிந்தோம், புதிய நட்புகளை உருவாக்கினோம், தோழமையால் பிணைந்தோம் என்கிறார் RC ஜெய்ப்பூர் ரவுன்ட் டவுன், RID 3052ன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அபிஷேக் சொந்தாலியா.

RC கான்பூர், RID



**Clockwise:**

*RI தலைவர்களை வரவேற்கும் பாரம்பரிய நடனக் கலைஞர்கள்.*

*PDG அனிருதா ராய் சௌத்ரி அவர் மனைவி ஷ்ப்ரா மற்றும் ஒரு ரோட்டேரியன்.*

*கல்கத்தாவின் மாதிரி வீட்டுத் திண்ணையில் ரோட்டரியினர்.*

*DG மாதவ் சந்திரன் மனைவி சுஜாதா மற்றும் PDG சஞ்சய் கேம்காவுடன்.*

*கல்கத்தாவின் சின்னமான மஞ்சள் நிற டாக்ஸி.*









3110ஐச் சேர்ந்த கௌரவ் அகர்வால், DRR அலோக் பாண்டே ஆகியோருக்கு, “மகிழ்ச்சிக்கற்றல்” செயல்முறை இயல்பாக அமைந்தது. உலகெங்கிலுமிருந்து வந்துள்ள பங்கேற்பாளர் களுடன் யோசனைகளைப் பகிர்ந்துகொண்டது மிகவும் மகிழ்வளித்தது. அத்துடன், ரோட்ராக்டை வளர்ப்போம் என்ற பின்னணியில் பார்க்கும்போது, அறிவைப் பகிர்ந்து கொள்ளுதலுக்கு ஒரு பன்னாட்டுச் சந்திப்பு எந்த அளவு நன்மைசெய்யும் என்பதை இளைஞர்கள் புரிந்துகொள்வார்கள் என்றார் பாண்டே.

HoFன் நுழைவாயிலில், விக்டோரியா நினைவகம், ஹௌரா பாலம், தக்ஷினேஷ்வர் காளி ஆலயம், கல்கத்தா உயர் நீதிமன்றம், கல்கத்தா மெட்ரோ, மஞ்சள் கல்கத்தா டாக்ஸி, ஷாஹீத் மினார் மற்றும் பழங்காலக் கல்கத்தா வீடுகள் பலவற்றின் முகப்புகள் இடம்பெற்றிருந்தன. இங்கு பலர் செல் ஃபிக்களை எடுத்துக் கொண்டார்கள், ரோட்டரித் தம்பதியர் தங்களுடைய காதல் கணங்களைப் பதிவுசெய்தார்கள்.

### மிகச்சிறந்த நிகழ்ச்சி

ஸ்டால்கள், புகழ்பெற்ற இடங்களின் மாதிரிகள், ஓவியங்கள் ஆகியவற்றைப் பார்த்த வாஷிங்டன் DC, RID 7620ஐச் சேர்ந்த RIDE பீட்டர் கைல், HoF பயனாளர்களுக்கு இதமாக இருந்தது, நன்கு வடிவமைக்கப்பட்டிருந்தது, காண்பதற்கு மிகுந்த இன்பமளித்தது என்றார்.

RC மெட்ராஸ் சென்ட்ரலைச் சேர்ந்த வினோத் சரோகி, அவருடைய மனைவியும் இன்னர் வீல் 323யின் தலை வராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவருமான உஷா ஆகியோர், சிறப்பாகச் செய்யப்பட்ட உள் மற்றும் வெளிக் கட்டுமானத்தால் தாங்கள் பழங்காலக் கல்கத்தாவின் உணர்வைப் பெறுவதாகக் குறிப்பிட்டார்கள்.

உணவுக்கூடம், அரங்குகளுக்குப் பார்வையாளர்கள் அளித்த பாராட்டுகள் அனைத்தும் PDGக்கள் சஞ்சய் கெம்கா, சந்தீப் நாரங் ஆகியோருக்குச் செல்லவேண்டும், இவர்கள் தான் ஒட்டு மொத்த அட்டாப் பகுதியையும் சிந்தித்து வடிவமைத்தார்கள்.

HoF தனித்து வமானது, பன்னாட்டுப் பங்கேற்பாளர்களிடையே வலைப்பின்னலுக்கான ஒரு நல்ல தளத்தை வழங்கியது என்றார் DGE S முத்துபழனியப்பன், RID 3232. இந்த இடம் நன்கு பரந்து விரிந்திருந்தது, அழகியலோடு வடிவமைக்கப்பட்டிருந்தது, ரோட்டரியன்கள் கலந்து பழகவும், நீடித்த நட்புகளை உருவாக்கவும் உதவியது என்றார் அவர்.

நூற்றாண்டுச் சந்திப்பின் போது, ரோட்டரி மனப்போக்கு மற்றும் நல்லியல்புக்கான மையமாகிய HoFயிற்கு நாள் தோறும் 4,000க்கும் மேற்பட்டோர் வந்தார்கள். இந்தத் தனித்து வமான தோழமையை அனுபவிப்பதற்காகப் பல பங்கேற்பாளர்கள் ஒரே நாளில் பலமுறை இங்கு வந்தார்கள்.

புகைப்படங்கள்:
V முத்துகுமரன்

# அதிசயங்களை நிகழ்த்த ரோட்டரியன்களுக்கு உதவும் TRF

ரஷீதா பகத்

*இந்தியாவில் பன்னாட்டு நல்கைகள்: உள்வரும் TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன், அறங்காவலர் குலாம் வாஹன்வதியுடன் ஓர் உரையாடல்*

இந்தூர் பிராந்தியச் சந்திப்பில் மிகுந்த ஆர்வம், விவாதங்களை உண்டாக்கிய ஒரு நிகழ்வு, பன்னாட்டு நல்கைகளை (GGக்கள்)ப் பற்றியது. தங்களுடைய நல்கை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதை எண்ணிப் பலர் வருந்தினார்கள். தங்களுடைய நல்கை விண்ணப்பங்கள் ஏன் நிராகரிக்கப் பட்டன என்பதற்கான எந்தக் காரணமோ விளக்கமோ தரப்படவில்லை என்பது தான் பொதுவான உணர்வாக இருந்தது.

அந்த உரையாடலில் கலந்து கொண்ட உள்வரும் அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன், பொதுச் செயலாளர் ஜான் ஹீகோ ஆகியோர் சில கவலைகளுக்கு அங்கேயே பதிலளித்தார்கள், எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு மூன்று மாதங்களுக்குள் GGக்களைப்பற்றிய தகவல்கள், புள்ளிவிவரங்களுடன் பதிலளிப்பதாக வாக்களித்தார் ரவீந்திரன்.

சில GG விண்ணப்பங்கள் ஏற்கப் படுவதும், மற்றவை மறுக்கப்படுவதும் ஏன் என்று கண்டறிவதற்காக, ரவீந்திரன், TRF அறங்காவலர் குலாம் வாஹன்வடி, GGக்களைக் கையாளும் RI ஊழியர்களான அப்பி மெக்னியர், மெரிடித் பர்ல்யூ ஆகியோருடன் பேசியது ரோட்டரி நியூஸ்.

மிக முக்கியமாக, விரைவாகச் செயல் முறைப்படுத்தப்பட்டு ஏற்கப்படுகிற ஒரு GGயின் உதவியுடன் ஒரு சங்கம் செயல் திறன் மிக்க, வெற்றிகரமான ஒரு திட்டத்தைச் சிந்தித்துச் செயல்படுத்த வேண்டுமென்றால், என்னென்ன



வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்?

இன்றைக்கு இந்தியா முழுக்கப் பரபரப்பாகப் பேசப்படுகிற ஒரு விஷயம், RIயின் மகுடத்தில் ரோட்டரி இந்தியா ஒரு வைரம். இந்த உணர்வை, RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள சேகர் மேத்தா முதன் முதலாகத் தெரிவித்தார். ரோட்டரி செய்திகளுக்கு அவர் வழங்கிய ஒரு பேட்டியில், ரோட்டரி இந்தியா உறுப்பினர் எண்ணிக்கையில் முதலிடம், TRF வழங்கலில் இரண்டாமிடத்தைப் பிடித்துப் பல மிகச் சிறந்த சமூக சேவைத் திட்டங்களைச் செய்துவருகிற பின்னணியில் அவர் இதைத் தெரிவித்தார்.

இந்தியாவின் வைர நிலை, இந்திய ரோட்டரியன்கள் செய்யும் சேவைத் திட்டங்களைப்பற்றி ரவீந்திரனிடம் கேட்டபோது, அவர் இவ்வாறு தெரிவித்தார்: இந்தியச் சங்கங்கள், மாவட்டங்கள் TRF செயல்பாடுகளின் வழியாகக் காட்டுகின்ற ஆர்வம், நன்மைகளை வைத்துப் பார்த்தால், அவர் சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். அதேசமயம், TRFன் மற்ற பெரிய பயனாளர்களும் இதில் சிறப்பாகவே செயல்படுகிறார்கள்.''

நம்முடைய GGக்களின் பெரிய பயனாளர்களை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்தியா முதலிடத்தில் இருப்பது ஐயத்துக்கு இடமின்றிப் புரிகிறது, இதன்மூலம், இந்த நாட்டை வாழ்வதற்கு இன்னும் நல்ல இடமாக மாற்றுவதற்கு அது நன்கு பங்களிக்கிறது. நாம் அதை எண்ணிப் பெருமைப்படலாம் என்கிறார் அவர்.



TRF அறங்காவலர் தலைவர் தேர்வு K R ரவீந்திரன் மற்றும் அறங்காவலர் குலாம் வஹன்வதி.

உள்வரும் அறங்காவலர் தலைவர் வழங்கும் புள்ளிவிவரங்கள், இதோ: RY2019ல் (குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகள் அனைத்தும் ஜூலை முதல் ஜூன் வரையிலான ரோட்டரி ஆண்டுகள்) இந்தியா 269 பன்னாட்டு நல்கைகளுக்கு இடமளித்தது, இவற்றின் ஒட்டுமொத்த நிதி மதிப்பு $21,516,796 (சுமார் ரூ.151 கோடி). 101 பன்னாட்டு நல்கைகளுக்கு இடமளித்த இங்கிலாந்து தொலைதூரத்தில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

நல்கைகளின் தன்மையை ஆராய்ந்துபார்த்தபோது, மருத்துவக் கருவிகள் (குறிப்பாக, டயாலிசிஸ் கருவிகள்), கழிப்பறைகள் மற்றும் பள்ளிகளுக்குத் தேவையான பொருட்களுக்காக நிறைய நிதி பயன்படுத்தப்படுவது தெளிவாகப் புரிகிறது. சென்ற ஆண்டு, அடிப்படைக் கல்வி, எழுத்தறிவில் (BEL) 44 திட்டங்கள் நிறைவேறின. ஆனால், நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம், 2019ல் TRF மறுத்த 53 BEL திட்டங்களில் 33க்கு இந்தியா ஆதரவளித்தது.''

2018ல், அறக்கட்டளை 95 சதவிகித GG நல்கைகளை அங்கீகரித்தது; 2019ல், விண்ணப்பதாரர்களிடம் தங்களுடைய சமூக மதிப்பீடுகளின் முடிவுகளைப் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டது அறக்கட்டளை, அதன்பிறகு, இந்த எண்ணிக்கை 89 சதவிகிதமாகக் குறைந்தது; இந்த ஆண்டில் அது 85 சதவிகிதமாக உள்ளது. எந்தவோர் அறக்கட்டளைக்கும் 85 சதவிகிதம் என்பது ஒரு மிக நல்ல அங்கீகரிப்பு விகிதம்; ஆனால், இதற்குமுன் அதிக அளவாக இருந்த 95லிருந்து அது இறங்கியுள்ளது என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

இது எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்று நான் ரவீந்திரனைக் கேட்டேன். நிராகரிக்கப்பட்ட திட்டங்களை நாங்கள் ஆராய்ந்து பார்த்த போது, ஒரு பொதுவான இழை காணப்பட்டது. சமூக மதிப்பீடுகள்



*மெரிடித் பர்லியு*
*RIன் ஸ்டிவார்ஷிப் மானேஜர்*

தான் திட்டங்களின் வடிவமைப்புக்கு வழிகாட்ட வேண்டும்; ஆனால், பல நேரங்களில் நம்முடைய ரோட்டரியன்கள் இயன்றவரை மிகக் கூடுதலான எண்ணிக்கையில் பலன்பெறுவோரைச் சென்றடையவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இந்தப் பழக்கத்துக்கான காரணத்தை நம்மால் புரிந்து கொள்ள இயன்றாலும், நலத்திட்டத்தைச் சரியாகத் திட்டமிடாமை, கவனக்குறைவு ஆகிய வற்றால் உண்டாகக்கூடிய செயல்பாட்டுப் பிரச்னைகளுக்கு இது வழிவ குக்கலாம்.

மிக வலுவான திட்டங்கள் எவை என்பதை அறங்காவலர் வாஹன்வடி குறிப்பிடுகிறார்: வலிமை யான சமூக மதிப்பீடு களையும் உறுதியான ரோட்டரிப் பங்களிப்பையும் கொண்டவை, முதன்மைத் தொடர்பு நபரைத் தாண்டிச் சங்க அல்லது மாவட்ட உறுப்பினர்கள் சுறுசுறுப் பாகப் பங்களிக்கிறவை.

ரோட்டரியை ஒரு தொழில் நிறுவனமாகக் காணவேண்டும் என்றும் செயல் பாட்டுச் செலவுகளைக் குறைப்பதில் RI தலைவர் தன்னுடைய நேரத்தையும் ஆற்றலையும் மிகவும் செலவிட்டுள்ளார், குறிப்பிடத்தக்க அளவு வெற்றியடைந்துள்ளார் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார் ரவீந்திரன்.

ரோட்டரியின் பணி ஒரு தொழில்நிறுவனத்தை நடத்துவதற்குச் சமம் என்று நீங்கள் சொல்வது ஏன் என்று விளக்குங்களேன் என்று கேட்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: ஆம், அது ஒரு தொழில் நிறுவனம் தான், ஆனால், மற்ற தொழில் நிறுவனங்களிலிருந்து மிகவும் வேறுபட்டது. நம்முடைய தொழில், எழுத்தறிவு, உடல்நலன். நம்முடைய தொழில், வாழ்வாதாரம், நம்பிக்கை. நம்முடைய தொழில், வாழ்க்கை. நம்மிடம் உதவி பெறுகிற பலருக்கு, நம்முடைய தொழில் ஓர் அதிசயத் தொழில்.

நாம் ஒரு நெடுஞ் சாலையில் பெட்ரோல் பம்ப் அமைக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். முதலில், அந்த நெடுஞ்சாலையில் எவ்வளவு போக்குவரத்து இருக்கிறது என்று நாம் மதிப்பிடுவோம்.'' அப்போது கேட்கவேண்டிய கேள்விகள்: மிக அருகிலிருக்கும் பெட்ரோல் பங்க் எது? இப்பகுதியில் அதிகப் புகழ்பெற்ற எரிபொருள் டீசலா? பெட்ரோலா? இந்தப் பகுதிக்கு எத்தனைப் பம்ப்கள் தேவை? எரிபொருளை நாம் எப்படிச் சேமிப்போம்? பம்ப் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும், அலுவலக மேலாளருக்கு மறு ஆர்டர் நிலைகள், பணம் திரட்டுதலைப்பற்றி யெல்லாம் சொல்லித்தர வேண்டும், இப்படி இன்னும் பல.

இப்படியெல்லாம் ஆராயாமல், இந்த இடத்தில் பெட்ரோல் பம்ப் கட்டினால் நன்றாக இருக்கும், என்றைக்காவது யாருக்காவது பெட்ரோலோ டீசலோ தேவைப்பட்டால் அது உதவக்கூடும் என்று நம்பி நாம் ஒரு பெட்ரோல் பம்பை அமைக்கமாட்டோம்!

ரோட்டரியின் திட்டங்களும் இப்படிப் பட்ட சிந்தனையின் அடிப்படையில் தான் அமையவேண்டும்.

எங்களுடைய ஆராய்ச்சியில் தெரியவந்த ஒரு விஷயம், ரோட்டரியன் கள் பலன்பெறுவோருடைய முதன்மைத் தேவைகளைப் பற்றிய ஒரு சமூக ஆய்வை நடத்தாதபோது, அல்லது, திட்டமிடலில் பலன்பெறுவோர் சமூகத்தைப் பங்குபெறச் செய்யாதபோதுதான் நல்கை மேலாண்மைப் பிரச்னைகள் மிகப் பொதுவாகக் காணப் படுகின்றன. ரோட்டரியன் கள் ஒரு முறையான சமூக மதிப்பீட்டை நடத்தாதபோது என்ன ஆகிறது என்பதற் கான உண்மையான எடுத்துக்காட்டுகளை நாங்கள் தேடினோம்.

இந்த ஆராய்ச்சியில்





என்ன கண்டறியப்பட்டது என்று அறங்காவலர் வாஹன்வடியைக் கேட்ட போது, TRFன் சேவைப் பிரிவுத் தலைவர் மெரிடித் பர்ல்யூவுடன் நாங்கள் இதை விவாதித்தோம் என்றார். மெரிடித் நம் ஊழியர் உறுப்பினர்களுடன் நெருங்கிப் பணியாற்று கிறார்; 13 ஆண்டுகளுக்கு மேலாக TRF உடன் பணியாற்றுகிறார், 2012லிருந்து ரோட்டரியின் சேவைப்பிரிவு மேலாளராக உள்ளார், 300க்கும் மேற்பட்ட ரோட்டரி நல்கைத் தணிக்கைகளை ஆராய்ந்துள்ளார். இந்த ஆண்டின் முற்பகுதியில் அவர் கொல்கத்தாவுக்கு வந்திருந்தார், DISHA நிகழ்ச்சியில் கலந்து கொண்டார், அந்த ஆண்டுக்குள் நிறைவு செய்யப்பட்ட 40க்கும் மேற்பட்ட தணிக்கை களிலிருந்து திரட்டப்பட்ட சில எடுத்துக்காட்டுகளைப் பகிர்ந்துகொண்டார்,அவற்றில் பெரும்பாலானவை நன்கு செயல்படுத்தப்பட்டன.’’

அவர் குறிப்பிட்ட ஒரு திட்டம், பள்ளிகளுக்குத் தூய நீர் வழங்குவது, அந்தத் திட்டம் அங்கீகரிக்கப் பட்டது. அந்தத் திட்டம் முதன்மையாக வழங்குநர்களால் இயக்கப்பட்டது என்று அவர் சுட்டிக் காட்டினார்; ரோட்டரியன்கள் வீட்டுப் பயன்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட வடிகட்டிகளைப் பள்ளி களுக்கு வழங்கினார்கள்; அந்தப் பள்ளிகளில் சிலவற்றில் 800க்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தார்கள். ஒவ்வொரு பள்ளியும் எந்த அளவில் இருந்தாலும் சரி, அங்கு வருகிற நீர் எந்தத் தரத்தில் இருந்தாலும் சரி, ஒரேமாதிரியான வடிகட்டிகள் தாம் வழங்கப்பட்டன. இந்த அமைப்புகளில் பெரும்பாலானவை தோல்வியடைந்தன, மதிப்பு மிக்க அறக்கட்டளை நிதி வீணாக்கப்பட்டது, மோசமான திட்டத்தரத்தால் ரோட்டரியின் பெயர் கெட்டுப்போனது.

இன்னொரு திட்டத்தில், பல பள்ளிகளுக்குப் பெரும் எண்ணிக்கையிலான உலோகப் பள்ளி இருக்கை களை வழங்குவதற்காக ஒரு மாவட்டம் தன்னுடைய சங்கங்களுக்கு ஒரு நல்கையைப் பெற்றது. இப்படி இருக்கைகளைப் பெற்ற சில பள்ளிகளில் சிறு குழந்தைகள்தான் இருந்தார்கள், அவர்களுக்கு அந்த இருக்கைகள் மிகப் பெரியவையாக இருந்தன, ஆகவே, அவை அவர்களுக்குப் பயன்படவில்லை. அவை துருப்பிடித்து வீணாகின; அவற்றின் கூரான விளிம்புகள் ஆபத்தைக் கொண்டுவந்தன. இதனால், ஆசிரியர்கள் அவற்றை வகுப்பறைகளிலிருந்து அகற்றிவிட்டார்கள். இம்முறையும், மதிப்புமிக்க அறக்கட்டளை வளங்கள் வீணாகின; ரோட்டரியின் நற்பெயர் கெட்டுப்போனது; இவை அனைத்துக்கும் காரணம், மிக எளிய சமூக மதிப்பீடு இல்லாததுதான் என்கிறார் வாகன்வடி.

இன்னோர் எடுத்துக் காட்டு, ஒரு மாவட்டம் தன்னுடைய சங்கங்கள் சானிட்டரி நாப்கின்களுக் கான எரியூட்டிகளை அமைக்க ஒரு நல்கையைப் பெற்றது.அச்சங்கங்களுக்கு இந்தத் திட்டத்தைப்பற்றி எதுவும் தெரிந்திருக்க வில்லை; எரியூட்டி கள் தேவையில்லாத

# நன்கு திட்டமிடப்பட்ட, நன்கு செயல்படுத்தப்பட்ட பன்னாட்டு நல்கைகள்

ஆனால், ஒவ்வோர் எதிர்மறையான அல்லது தவறாகச் செல்கிற GGக்கும் எதிர்ப்பக்கம் பல நல்ல GGக்கள் உள்ளன, அவை நன்கு திட்டமிடப்பட்டு நன்கு செயல்படுத்தப்படுகின்றன. நல்ல GGக்களுக்கான இந்த எடுத்துக் காட்டுகளை அறிவதற்காக, எவான்ஸ்டனில் நல்கை இயக்குநரான அபி மெக்னியாரிடம் பேசியது ரோட்டரி நியூஸ். பன்னாட்டு நல்கைகளைச் சிறப்பாக்குவது என்ன என்பதுபற்றி இந்த உரையாடலிலிருந்து அறியலாம்.

பள்ளித் திட்டங்களை நாம் எப்படி அணுகுகிறோம் என்பதிலிருந்துதான் பல பிரச்னைகள் தொடங்குகின்றன என்றார் அபி. அறக்கட்டளைக்கு வருகிற பல திட்டங்களின் முதன்மை இலக்கு, இயன்றவரை கூடுதலான எண்ணிக்கையில் பள்ளிகளுக்குக் கருவிகளை வழங்குவது. அறங் காவலர்களுடைய BEL கொள்கை அறிக்கையிலோ WASH கொள்கை அறிக்கையிலோ கருவிகளை வழங்குவதில் மட்டும் முழுக்கவனம் செலுத்துகிற ஓர் இலக்கை உங்களால் காண இயலாது.

திட்டங்களை வடிவமைப்பதற்கான இந்த அணுகுமுறை, மாவட்ட நல்கைப் பின்னணியில் வேலை செய்கிறது, ஆனால், அறக்கட்டளையின் அடையாளங்களாகக் காட்சிப்படுத்தப் படுகிற திட்டங்களாகிய GGகளுக் கான தகுதி அடிப்படையுடன் இது சிறிதும் பொருந்துவதில்லை. அவை மாற்றத்தை உண்டாக்கு பவையாக, பலன்பெறுவோருக்கு அளவிடக்கூடிய முன்னேற்றங்களைக் கொண்டுவருபவையாக இருக்கவேண்டும்.

"100 பள்ளிகளுக்குச் சில கருவிகளை வழங்கினோம்" என்று சொல்வதும், "ரோட்டரி செய்த உதவியால் குழந்தைகளுடைய வாசிப்பும் புரிந்துகொள்ளலும் 10 சதவிகிதம் மேம்பட்டுள்ளது; வருகை எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது, ரோட்டரிக்கு நன்றி." என்று சொல்வதும் ஒன்றில்லை. இதில் முதல் திட்டத்தைச் சமூக மதிப்பீடு ஏதும் இல்லாமலே நிறைவேற்றலாம். ஆனால், இரண்டாவது திட்டத்தைச் சமூக மதிப்பீடு இல்லாமல் நிறைவேற்றவே இயலாது.

ஒரு நல்ல GG திட்டத்துக்கான எடுத்துக்காட்டுகளைக் கேட்டபோது அவர் இவ்வாறு சொன்னார், பம்பாய் (RID 3141), RC தானே ஹில்ஸ் (RID 3142) மற்றும் கொழும்பு (RID 3220) ரோட்டரி சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து, தானேயிலுள்ள 100 பள்ளிகளின் முதல்வர்கள், கல்வி அலுவலர்கள், ஆசிரியர்களுக்குத் தொழில் முன்னேற்றத்தை வழங்குவதற்கான ஒரு GG உருவாக்கினார்கள். இந்தத் தொழில்வல்லுனர்களின் மீது கவனம் செலுத்துவதன்மூலம், தானேயிலுள்ள 24,000 பள்ளிக் குழந்தைகள் பலன் பெறுவார்கள் என்பது அந்தச் சங்கங்களுக்குத் தெரிந்திருந்தது.''

அறங்காவலர்கள் முன்வைத்த அனைத்து அடிப்படைகளையும் நிறைவுசெய்து, அதன்மூலம் நன்கு நிறைவேற்றப்பட்ட வேறு இரண்டு GG எடுத்துக்காட்டுகளையும் அவர் குறிப்பிட்டார்.

அதில் ஒன்று, RC மெட்ராஸ் சவுத் (RID 3232) மற்றும் RC பசதெனா (RID 5300) ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் நோக்கம், சென்னையிலுள்ள சூரியா மருத்துவ மனையிலிருக்கும் பலன் பெறுவோருக்குச் சுமார் 230 இதய அறுவைச்சிகிச்சைகளைச் செய்வது, அவர்களைத் தொடர்ந்து கவனித்துக் கொள்வது. அதன் நோக்கம், ஏழைக் குழந்தைகளுடைய சிறுவர் இதய அறுவைச்சிகிச்சைத் தேவைகளை நிறைவுசெய்வது, அவர்கள் உடல் நலத்துடன் வாழ உதவுவது.

பிறவி இதய நோய் கண்டறியப்பட்ட குழந்தைகளுடைய பெற்றோருக்கு இந்தத் திட்டம் ஒரு முழுமையான தீர்வை உறுதிசெய்தது. சூரியா மருத்துவமனையில் நிகழ்த்தப்பட்ட, இலவசமாகக் கிடைத்தன.

இந்தத் திட்டத்தின் நோக்கம்,



ஒரு தொடக்கப்பள்ளியில் நிறுவப்பட்டன, அதை விட மோசம், சூடான உலோகத்தால் குழந்தைகளுக்குச் சூடு படக்கூடிய வகையில் கழிப்பறைகளுக்கு அருகில் வைக்கப்பட்டன. இந்த எரியூட்டிகளிலிருந்து வெளியான எரியும் பிளாஸ்டிக்கின் புகை காற்றை மாசுபடுத்தியது.

இது போன்ற திட்டங்களில் அறக்கட்டளை ஈடுபடக்கூடாது. நிதியளிப்போர் பன்னாட்டு நல்கைகளுக்காக வழங்கியுள்ள அளவான நிதிகளை இது வீணாக்குகிறது; ரோட்டரியின் நற்பெயரை மேம்படுத்துவதில்லை. நம்மால் இதைவிட சிறப்பாகச் செயல்பட இயலும், நாம் அதைச்

தங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக ஆதரவை நாடும் குடும்பங்களுக்கு நம்பிக்கையையும், உறுதியளிக்கும் பாதுகாப்புப் போர்வையையும் வழங்குவது.

TRF அடிப்படைகள் அனைத்தையும் நிறைவு செய்து நன்றாகச் செயல்பட்ட இன்னொரு பன்னாட்டு நல்கை, ஜோத்பூரிலுள்ள எட்டுப் பள்ளிகளில் மாணவர்கள், ஆசிரியர்களுக்குத் தூய்மைக் கல்விப் பயிற்சி வழங்குதல், கழிப்பறைகளை அமைத்தலுக்கான பள்ளி WASH திட்டம். இந்தத் திட்டத்தை RC ஜோத்பூர் பத்மினி (RID 3053) மற்றும் RC பென்டன்வில்லெ (D6110)க்கு ஆகியவை ஆதரித்தன. இதன் நோக்கம், இந்த ராஜஸ்தான் நகரத்திலுள்ள எட்டுப் பள்ளிகளில் சுகாதாரம் மற்றும் தூய்மையில் நீடித்திருக்கும் மேம்பாடு களைச் செய்வது. இதன்மூலம் கிட்டத்தட்ட 2,000 மாணவர்கள் பலன்பெற்றார்கள். புதிய கை கழுவல் அமைப்புகள், பாத்திரம் கழுவல் அமைப்புகள், குடிநீர் அமைப்புகளைக் கட்டுதல், பையன்கள், பெண்களுக்கான கழிப்பறைகளை அமைத்தல் ஆகிய நோக்கங்களுடன் இத்திட்டம் செயல்பட்டது.

6ம் வகுப்பில் தொடங்கிச் சுமார் 630 சிறுமியருக்கு மாதவிலக்கு பற்றிய பயிற்சியையும் சானிட்டரி நாப்கின் களையும் இந்தத் திட்டம் வழங்கியது, பள்ளியிலிருந்த வசதிகளைப் பரா மரிப்பதற்கான அமைப்பை உருவாக்கியது, சுகாதாரம் மற்றும் தூய்மைப் பயிற்சி நடத்தியது. இதன் மூலம், அரசால் நடத்தப்படுகிற, நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கிற தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் பலன் பெற்றன. இவர்கள் நடத்திய பயிற்சியினால் மாணவர்கள், ஆசிரியர்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது, அவர்களுடைய பழக்க வழக்கங்கள் மாறின, மாணவர்கள், பெண்கள் தொடர்ந்து படிப்பதற்கு இத்திட்டம் வழிவகை செய்தது.



அபி மெக்நியர்
TRFன் கிராண்ட்ஸ் டைரக்டர்

இந்தத் திட்டத்துக்கு ஓராண்டு முன்னதாக, RC ஜோத்பூர் பத்மினி சங்க உறுப்பினர்கள் 30 அரசுப் பள்ளிகளைச் சென்று பார்த்தார்கள், அவற்றில் நிலவும் சூழ்நிலைகளை ஆராய்ந்தார்கள். அத்துடன், முந்தைய ஐந்து ஆண்டுகளில் இந்தச் சங்கம் அரசுப் பள்ளிகளில் தூய்மைப் பயிற்சி உள்ளிட்ட பல சேவைத் திட்டங்களை நிறைவேற்றியது. இதன் அடிப்படையில் இச்சங்கம் மேம் பட்ட சுகாதார மற்றும் தூய்மைக் கல்வி, கட்டமைப்புக்கான தேவையை அடையாளம் கண்டு, இந்தத் திட்டத்துக்கான எட்டுப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்தது.

ஆக, பெரும் எண்ணிக்கையிலான பள்ளிகளில் வெற்றிகரமான பன்னாட்டு நல்கைத் திட்டங்களை நிறை வேற்றலாம். அதற்காக, திட்டத்தின் இலக்குகளைப் பற்றிப் பெரிய அளவில் சிந்திக்கவேண்டும், வெறுமனே கருவிகளை வழங்குவதை விட, குழந்தைகளுடைய கல்வியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். எல்லாமே திட்ட இலக்கு களைப் பொறுத்துதான் அமைகிறது.''

நாம் அடுத்து என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கேள்விக்கு அபி இவ்வாறு பதிலளிக்கிறார்: இந்த விஷயத்தில் உங்களுக்குப் பல உதவிகள் காத்திருக்கின்றன. நல்கைக் குழு ஊழியர்கள் உங்களுடைய திட்ட யோச னைகளை முன்கூட்டியே ஆராய்ந்து ஆலோசனை வழங்குவார்கள். உங்களுக்கு உதவக்கூடிய உள்ளூர் ஊழியர் உறுப்பினர் ஒருவருடன் அவர்கள் உங்களை இணைப்பார்கள். ஒவ்வொரு கவனப் பகுதியிலும் GG திட்டங்களுக்கான வழிகாட்டுதல்களை அறக்கட்டளை உருவாக்கியுள்ளது; ஆனால், GG நிதியளித்தலுக்கான BEL வழிகாட்டுதல்கள் பள்ளித் திட்டங்களுக்கு மிகவும் உதவும் வகையில் அமைகின்றன.''

செய்யவேண்டும் என்று தொடர்ந்து கூறுகிறார் வாகன்வடி.

இன்னொரு விஷயம், அறங்காவலர்கள் பொருத்தமாகக் கருதுகிறவற்றுக்கும், மாவட்டங்கள் எடுக்கிற சில தீர்மானங்களுக்கும் இடையிலுள்ள தத்துவ வேறுபாடு கள் என்கிறார் ரவீந்திரன். இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் ஒரு பள்ளியில் ஒரு கழிப்பறை என்பது கழிப்பறையே இல்லாமலிருப்பதைவிட நல்லது என்று ரோட்டரியன்கள் எங்களிடம் அடிக்கடி சொல்லியுள்ளார்கள்; ஆனால், உலகெங்கிலுமிருந்து எஙக்களுக்காகத் திரட்டப்பட்ட நிதியைப் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ள அறங்காவலர்கள் இந்தப் பார்வையை ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு பள்ளிக்கு ஏழு கழிப்பறைகள் தேவை என்றால், ஒன்றைமட்டும் கட்டுவது போதாது என்று அறங் காவலர்கள் எண்ணுகிறார்கள். அந்த ஒரு கழிப்பறை சில நாட்களில் பயன் படுத்த இயலாதபடி மாறிவிடும், பயனாளர்கள் தங்களுடைய பழைய பழக்கங்களுக்குத் திரும்பிவிடுவார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஒரு வகுப்புக்கு 10 இருக்கைகள், பங்குகள் தேவை என்றால், அதில் இரண்டைமட்டும் தந்தால் போதாது, எல்லா விஷயங்களிலும் இப்படிதான் அறங்காவலர்கள் சிந்திப்பார்கள்.

அதேசமயம், மாவட்ட நல்கைகள் நிதி மூலங்களாக இருந்தால், TRFக்கு அதன்மீது எந்தத் தனியுரிமையும் இல்லை என்பது தெளிவாகிறது, அது அந்த மாவட்டத்தின் சொந்தத் தீர்மானமாக இருக்கும் என்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

வாகன்வடி தொடர்ந்து குறிப்பிட்டது, இது நம்முடைய நூற்றாண்டு. நம்முடைய GGக்கள் வெற்றியடையவும், ரோட்டரியை அதன் சிறப்பான வடிவத்தில் வெளிப்படுத்தவும் நாம் என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்வோம்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# இளைஞர்களை விவசாயத் தொழில்முனைவோராக்கலாம்

ஜெய்ஶ்ரீ

கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பின் நிறைவு நாளில் தலைமை விருந்தினர், இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் M வெங்கையா நாயுடு.

விவசாயத்தை தொழிலாக எடுத்துக் கொள்வதில் இளைஞர்களிடையே ஆர்வம் குறைந்துவருவது பற்றிக் கவலை தெரிவித்த நாயுடு, ரோட்டரி இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து, திறன்களை வழங்கி, அவர்களை விவசாயத் தொழில்முனைவோராக்கவேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தார்.

2014 சென்னை பிராந்தியச் சந்திப்பில், ஸ்வச்ச பாரத் பரப்புரைக்காக இந்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்கான ஓர் MoAல் கையொப்பமிட்டது ரோட்டரி. அதில் கலந்துகொண்டதை நினைவுகூர்ந்த அவர், உங்களுடன் சேர்ந்து பணியாற்றுவது, ஒருவருடைய அனுபவங்களிலிருந்து மற்றவர் கற்றுக்கொள்வது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நான் புரிந்து கொள்கிறேன் என்றார்; நாடுமுழுவதும் பல துறைகளில் ரோட்டரியின் மனிதாபிமானச் செயல்பாடுகளைப் பட்டியலிட்டார்.

முன்னதாக, ரோட்டரியின் மூத்த தலைவர்களுடைய குழு ஒன்று குடியரசுத் துணைத்தலைவருக்கு HoFஐச் சுற்றிக்காட்டியது. இதில் RIPN மேத்தா, RIDகள் பரத் பாண்ட்யா, கமல் சங்வி, நூற்றாண்டுச் சந்திப்புத் தலைவர் வினோத் பன்சால், இணைத் தலைவர் அனிருத்தா ராய் சௌத்ரி மற்றும் செயலாளர் கிஷோர் குமார் இடம்பெற்றிருந்தார்கள். ரோட்டரியின் WinS மற்றும் எழுத்தறிவுத் திட்டங்களைக் காட்சிப்படுத்திய




*RID கமல் சங்வி இந்திய துணை குடியரசுத்தலைவர் வெங்கையா நாயுடுவை கௌரவிக்கிறார். மேற்கு வங்க ஆளுநர் ஜக்தீப் தன்கர், மாநில அமைச்சர் ப்ரத்திய பாசு, RIPN சேகர் மேத்தா, அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங், RID பரத் பாண்ட்யா மற்றும் நூற்றாண்டு விழா செயலாளர் கிஷோர்குமார் ஆகியோரும் உள்ளனர்.*



*ரோட்டரியின் WinS திட்டத்தை RIPN சேகர் மேத்தா துணை குடியரசு தலைவர் நாயுடுவிற்கு விளக்குகிறார். மேற்கு வங்க ஆளுநர் தன்கர், PDG V ராஜா சீனிவாசன் ஆகியோரும் உடன் உள்ளார்.*

அரங்கங்களை அவர் மிகவும் பாராட்டினார்; நூற்றாண்டின்போது செயல்படுத்துவதற்காக ரோட்டரி இந்தியா வரிசைப்படுத்தியுள்ள செயல்பாடுகளைக் குறிப்பிட்டு மேத்தாவைப் பாராட்டினார்.

காலநிலை மாற்றம், உலகில் அதன் தாக்கம் ஆகியவற்றைப் பற்றிப் பேசிய அவர், சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை ரோட்டரியன்கள் முன்னிறுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். தூய்மை மற்றும் தூய நீரின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்; தொற்றாத நோய்களின் எண்ணிக்கை பெருகி வருவதைச் சுட்டிக்காட்டினார். எப்போதும் உட்கார்ந்த நிலையில் வேலை செய்கிற வாழ்க்கை முறை, நலத்துக்கு வழிவகுக்காத உணவுப் பழக்கங்களின் தீமைகளைப் பற்றி மக்களிடையே, குறிப்பாக, இளைஞர்களிடையே ரோட்டரி விழிப்புணர்வை உண்டாக்கவேண்டும்.''

அனைத்துவகையான தீவிர வாதத்துக்கும் எதிரான ஒரு வலுவான கொள்கைச் சட்டகத்துக்காக இணைந்து உழைக்கும்படியும், UN போன்ற தளங்களில் பன்னாட்டளவில் இது பற்றி ஓர் ஒருமித்த கருத்தை உருவாக்கும்படியும் அவர் குடிமைச் சமூகத்துக்கு அழைப்பு விடுத்தார். அமைதி இருந்தால் தான் முன்னேற்றம் நிகழும். தீவிரவாத அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக அனைவரும் பணியாற்ற வேண்டும் என்றார் அவர்.

60 சதவிகிதத்துக்கும் மேற் பட்ட இந்தியர்கள் இன்னும் கிராமங்களில் தான் வாழ்கிறார்கள் என்று சுட்டிக்காட்டிய நாயுடு, கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் ரோட்டரி கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகள், பணி வாய்ப்புகள் இல்லாததால், மக்கள் வேறு இடங்களுக்கு மாற வேண்டிய கட்டாயம் உண்டாகிறது. கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் நடுவிலான இந்த இடைவெளியை நிரப்புவதில் நாம் தீவிரமாகப் பணியாற்றவேண்டும் என்றார் அவர். எழுத்தறிவின்மை, வறுமை, பாலின மற்றும் சமூகப் பாரபட்சம் போன்ற பன்னாட்டுச் சவால்களைக் கையாள்வதற்காக ஒன்றாகப் பணியாற்றும்படி அனைத்து நாடுகளையும் கேட்டுக்கொண்டார்.

சமூக முன்னெடுப்புகள் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான ஆதித்ய பிர்லா அறக்கட்டளையின் தலைவர் ராஜஷ்ரி பிர்லா மற்றும் RC பெங்களூர் ஆர்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் D ரவிசங்கர் ஆகியோர் ரோட்டரிக்கு வழங்கியுள்ள தாராளமான பங்களிப்பை அவர் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பாராட்டினார். இந்தியாவில் இதுபோன்ற கருணை மனம் கொண்ட மக்கள் பலர் உள்ளார்கள்; அவர்களை அடையாளம் கண்டு, நல்ல நோக்கங்களுக்காகப் பங்களிக்குமாறு தூண்டுவது நம் கடமை என்றார் அவர்.

இந்தியாவிலிருந்து இளம்பிள்ளை வாதத்தை அகற்றியதில் ரோட்டரியின் மிகச்சிறந்த பங்கைக் குறிப்பிட்டுப் பேசிய நாயுடு, பொது நன்மைக்காக உழைப்பதற்கு அரசும் பிற NGOக்களும் செயல்திறன் மிக்க, வெற்றிகரமான கூட்டணிகளை அமைக்கலாம் என்பதற்கு இந்தச் சாதனை ஒரு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு என்றார்.■

Rotary India Centennial Summit 2020

# பொருளாதார எதார்த்தங்கள்: ஒரு பார்வை

V முத்துகுமரன்

கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பில் இரண்டு சமூகத் தொழில்முனைவோர் இரண்டு பிரச்னைகளைப்பற்றிய தங்களுடைய நேரடியான கருத்துகளை விவரித்தார்கள்: குழந்தைகளின் பசி மற்றும் ஆடையின்மை.

“வளரும் உள்ளூர்ப் பொருளாதாரங்கள்” என்ற தலைப்பிலான இந்த நிகழ்ச்சிக்கு PRID C பாஸ்கர் தலைமைதாங்கினார். இதில் இரு சிறந்த நிறுவனங்களைப்பற்றிய பேச்சுகள் இடம்பெற்றன. அவை:

தில்லியைச் சேர்ந்த NGOவான அன்ஷு குப்தா-வின் கூஞ்ச், நகர்ப்புறங்களில் வீணாகும் பொருட்கள், ஆடைகளை மறுசுழற்சி செய்து லட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்களுக்குக் கண்ணியத்தை வழங்குகிறது. அட்சய பாத்ரா-வின் தலைமைச் சந்தைப்படுத்தல் அலுவலரான சந்தீப் தல்வார் அந்த NGOவின் மதிய உணவுத் திட்டத்தின் வழியாக அரசுப் பள்ளிகளில் சேர்க்கை விகிதத்தை மேம்படுத்துவதில் ஆர்வமாக உள்ளார்.

இந்தியாவில் இயற்கைச் சீரழிவுகளால் இறப்பவர்களைவிட, முறையான ஆடைகள் இல்லாமல் இறப்பவர்கள்தான் அதிகம். ஆனால், நலிந்த மக்களுக்குக் கண்ணியமான ஆடைகளை வழங்குவதற்கான வளங்களுக்குப் பற்றாக்குறை இல்லை என்றார் அன்ஷு குப்தா. அவர் ஒரு பெரிய பெருநிறுவனப் பொறுப்பிலிருந்து விலகி 1999ல் கூஞ்சைத் தொடங்கினார்; நலிந்த மக்களுக்குக் கண்ணியமான ஆடைகளை வழங்குதல், மேம்பட்ட தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பின்பற்ற அவர்களுக்குக் கற்றுத்தருதல் ஆகியவற்றின்மூலம் அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகப் பணியாற்றலானார்.



PRID C *பாஸ்கர்* PDG *மகேஷ் கோட்பாகி கூஞ்ஜ் அறக்கட்டளையின் நிறுவனர் அன்ஷீ குப்தாவை கௌரவிக்கின்றனர். அக்ஷயபாத்ரா நிறுவனத்தின்* CMO *சந்திப் தல்வார் (இடது) மற்றும் ஜவஹர் வட்லாமணி ஆகியோரும் உடன் உள்ளனர்.*

ஒருவர் என்ன அணிகிறார் என்பதைப் பொறுத்து தான் அவர் மதிப்பிடப்படுகிறார்; எதார்த்தம் என்னவென்றால், உயர் கல்விக்கு மிகுந்த மானியம் வழங்கப்படுகிற அதே நேரத்தில், விவசாயிகள் கண்ணியமான வருவாயைச் சம்பாதிக்க உதவும் பண்ணை மானியத்தை நாம் எதிர்க்கிறோம் என்று விளக்கினார்.

ஓராண்டில், நகர்ப்புறங்களில் வீசியெறியப்படுகின்ற 6,000 டன்னுக்கும் மேற்பட்ட பொருட்களைப் புதிய ஆடைகளாக, சானிட்டரி பேட்களாக மாற்றி மறுசுழற்சி செய்தது கூஞ்ச். ஆடையின்மை, வீடின்மை, உணவின்மையால் உண்டாகும் நகர்ப்புற ஏழைமையைக் கவனிக்கிற அதே நேரத்தில், கிராமப்புறங்களில் குறைந்தபட்சக் கூலிக்கான தகுதி இருந்தும் கூட விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது மிகுதியாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறபோது, அரசாங்கம் சரியானவற்றுக்கு முக்கியத்துவம் தருவதில்லை என்பது புரிகிறது என்றார்.

வறுமையால் கிராமப்புறங்களிலிருந்து குடிபெயர்கிறவர்கள் ஒரு கண்ணியமான வாழ்க்கையை வாழ்கிறவர்களாக மாறவேண்டுமென்றால், தொண்டு நிறுத்தப்படவேண்டும், இல்லாவிட்டால் அது பலன்பெறுவோருடைய சுய மதிப்பை அழித்துவிடுகிறது.’’

கிராமப்புறங்களிலிருந்து குடிபெயர்ந்தவர்கள், ஒருகாலத்தில் தங்கள் ஊரில் சொந்தக்காலில் நின்றவர்கள், இப்போது அவர்கள் வருமானத்துக்காகத் தடுமாறினாலும், சுயமரியாதை எப்போதும் முக்கியம் என்று குறிப்பிட்டார் அவர்.

வறுமையில் உள்ளவர்களை நாம் தீர்மானம் எடுக்கிறவர்களாக ஆக்கவேண்டும், அதற்கு, அவர்களுடைய பிரச்னைகளைப் புரிந்து கொள்ளவேண்டும், அவர்கள் அடிப்படை உள்கட்டுமானத்தை

அணுகுவதற்கான வாய்ப்புகளைத் திறந்துவிடவேண்டும், அவர்களுக்கு உரிமையுணர்வை உருவாக்கவேண்டும் என்று விளக்கினார் குப்தா.

'திறனற்ற பணியாளர்கள்', கிராமப் புறப்பணியாளர் களைப்பற்றிய எண்ணம், சிந்தனைச் செயல்முறை மாறவேண்டும். ஏனெனில், அவர்களுக்கு முறையான கல்வி இல்லாவிட்டாலும், "அவர்கள் கிராமப்புறச் சாலைகளைக் கட்டியுள்ளார்கள், நீர்நிலைகளை அமைத்திருக்கிறார்கள், பள்ளிகளைக் கட்டியிருக்கிறார்கள், இதையெல்லாம் அவர்கள் உரிமையுணர்வோடு செய்யாமல், கண்ணியம், மன நிறைவு ஆகிய உணர்வுகளுடன் செய்துள்ளார்கள் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

தல்வார் தன்னுடைய பேச்சில் திடுக்கிட வைக்கும் பல புள்ளிவிவரங்களை வழங்கினார். நம்முடைய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 15 சதவிகி தத்தினருக்கு ஊட்டசத்துப் பற்றாக்குறை உள்ளது; இந்தியாவில் நாள்தோறும் 196 மில்லியன் பேர் பசியோடு உள்ளார்கள்; இதில் 60 சதவிகிதத்தினர் பெண்கள்; ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 21 சதவிகிதத்தினருடைய எடை குறைவு; நான்கில் ஒருவர் ஊட்ட சத்துக் குறைபாட்டுடன் உள்ளார்.''

குழந்தைகள் பள்ளியிலிருந்து நிற்பதற்கான காரணங்களில் சில: வீட்டிலிருந்து பள்ளில் நெடுந்தொலைவில் இருப்பது, வீட்டு வருவாய்க்குக் குழந்தைகள் பங்களிக்க வேண்டியிருப்பது, கல்வி முக்கியமாகக் கருதப்படாதது அல்லது வீட்டு வேலைகளைச் செய்யவேண்டியிருப்பது.

அட்சய பாத்ரா, மதிய உணவுத் திட்டத்தின் வழியாகக் குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு ஈர்க்கிறது. 52 சமையலறைகளின் ஆதரவுடன் 13 மாநிலங்களில் 16,800 பள்ளிகளைச் சேர்ந்த 18 லட்சம் குழந்தைகள் இதனால் பலன் பெறுகிறார்கள். 13 குழந்தைகளில் 9 பேரைத் தொடர்ந்து பள்ளிக்கு வரவழைக்கும் முக்கியமான ஊக்கம் இது என்றார் அவர். இந்தத்திட்டத்தின் கீழ் இப்போது குழந்தைகளுக்கு மதிய,காலை உணவுகள் வழங்கப்படுகின்றன.

## பெரிய வாய்ப்புகள்

பொட்டலமாக்கப்பட்ட உணவைப் பள்ளிக்குழந்தைகளுக்கு டெலிவரி டிரக்குகளில் செயல்திறனோடு வழங்குவதற்காக, ரோட்டரி சங்கங்கள் உள்ளூர் அட்சய பாத்ரா பிரிவுகளுடன் கை கோக்கலாம் என்றார் தல்வார். நிதி திரட்டுவதற்குப் பொருந்தும் நல்கைகள் மற்றும் பொது மக்களிடமிருந்து திரட்டும் தளங்களை ஆராயலாம். சமையலறைகளை அமைப்பதில், ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதில், மதிய உணவுத் திட்டத்துக்கு ரோடராக்டர்களைப் பயன்படுத்துவதில் நீங்கள் எங்களுக்கு உதவலாம் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.■

# குழந்தைகளுக்கு பாதுகாப்பான குடிநீர்

ரோட்டரி செய்திக்குழு

விருதுநகர் இலைட் ரோட்டரி கிளப், RID 3212, மதுரைக்கு அருகிலுள்ள விருதுநகரில் உள்ள 11 பள்ளிகளில் $65,265 செலவில் அமெரிக்காவின் RC FMAM, RID 5580ன் மானிய உதவியோடு RO ஆலைகளை நிறுவுவதன் மூலம் 15,000 பள்ளி மாணவர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கியுள்ளது

RC ராஜபாளையம் அதன் தங்க விழாவை கொண்டாடிய போது DGE PNஆ முருகதாஸ் 2016ம் ஆண்டில் TRFக்கு வழங்கிய 50,000 கால பரிசு மூலம் இந்த மானியத்தை பெற முடிந்ததாக திட்டத்தின் முதன்மை தொடர்பு C மாரிமுத்து கூறினார். ரோட்டரியின் ஆறு மையங்களில் ஒன்றான நீர் மற்றும் சுகாதாரத்திற்காக முருகதாஸ் தனது சிறப்பான பங்களிப்பை தந்துள்ளார்.

மாணவர்கள் தங்கள் பள்ளிகளில் குடிநீர் கிடைப்பதில் மகிழ்ச்சி அடைந்தனர். வீட்டிலிருந்து தண்ணீர் தூக்கி வந்து அதை நண்பர்களுடன் பகிரவும் முடியாமல் இருந்த நாங்கள் இப்போது வெற்று பாட்டில்களைக் கொண்டு வந்து அவற்றில் நீரை நிரப்பி வீட்டிற்கு எடுத்துச் செல்கிறோம், என்று பயனாளி பள்ளியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கூறினார்.■




*DGE PNB முருகதாஸ், DG ஷெக் சலீம் மற்றும் PDG B ஆறுமுகப்பாண்டியன் குடிநீர் வசதிப்பெற்ற ஒரு பள்ளியில்...*

Rotary India Centennial Summit 2020

# எழுத்தறிவுக்காக ஒரு பயணம்

ஜெய்ஸ்ரீ

இந்தப் பிப்ரவரியில் நடைபெற்ற கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பில் கருப்பு, மஞ்சள் டி-சட்டை அணிந்த 12 ஆண்கள் தங்களுடைய இருப்பை வலுவாக உணர்த்தினார்கள். RI தலைவர் மார்க் மலோனே அவர்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்தினார். இந்நிகழ்வில் RIPN சேகர் மேத்தா, சந்திப்பின் ஒருங்கிணைப்பாளர், RID கமல் சங்வி மற்றும் RID பரத் பாண்ட்யா கலந்து கொண்டார்கள்.

சுனில் தெல்கர் தலைமையிலான இந்தக் குழு, 'ரோட்டரி எழுத்தறிவுப் பயணம் 2020' என்ற பேரணியைக் கன்னியாக்குமரியில் தொடங்கியது; 19 நாட்களில் 16 நகரங்கள், 14 ரோட்டரி மாவட்டங்களின் வழியாகப் பயணம் செய்து கொல்கத்தாவுக்கு வந்து பேரணியை நிறைவுசெய்தது. இந்தப் பேரணியின் நோக்கம், குழந்தைகளை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பதற்கான ரோட்டரி இந்தியா எழுத்தறிவுப் பணியின் ஆஷா கிரண் திட்டத்தை முன்னிறுத்துதல்.

இது வெறும் விளையாட்டுப் பயணமாக தான் தொடங்கியது; ஆனால், பின்னர் அதுவே எங்கள் அனைவருக்கும் ஒரு வாழ்நாள் அனுபவமாக மாறிவிட்டது என்றார் RC பெங்களூர் கல்யாண், RID 3190 உறுப்பினரான தெல்கர்.

இந்தப் பேரணியில் கலந்து கொண்ட அனைவரும் RID 3190ஐச் சேர்ந்த ரோட்டரியன்கள், மோட்டார்சைக்கிள் ஓட்டும் ரோட்டரியன்களுடைய பன்னாட்டுத் தோழமையின் உறுப்பினர்கள். தெல்கர் இந்த அமைப்பின் முன்னாள் தலைவராவார். இந்தக் குழுவினர் பலமுறை சிறு பயணங்கள் சென்றிருக்கிறார்கள்; இவ்வளவு நீளமான ஒரு பயணத்தை அவர்கள் மேற்கொள்வது இதுதான் முதன்முறை.

இப்படியொரு பயணத்துக்கான யோசனையை RC பெங்களூர் ஆர்சர்ட்ஸின் முன்னாள் தலைவரான D ரவிசங்கர் சிந்தித்தார்; பயணச் செலவுகளுக்காக ரூ.150,000 பங்களிப்பையும் வழங்கினார் இவர். நாங்கள் வழியில் கண்ட மாவட்டங்களில் ஆஷா கிரணை முன்னிறுத்தினோம், நிதி திரட்டினோம். DG சமீர் ஹரியானி பிற ஆளுநர்களுடன் ஒருங்கிணைத்தார் என்று தொடர்ந்து கூறுகிறார் அவர்.




*சுனில் தெல்கர் மற்றும் குழுவினர் கொல்கத்தாவின் நூற்றாண்டு விழாவில். RID கமல் சங்வி, சோனல், PRID C பாஸ்கர், PDG ராஜேந்திர ராய் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

இவர்களுடைய பைக்குகள் பெங்களூரிலிருந்து கன்னியாக்குமரிக்கு அனுப்பப் பட்டன, அங்கு, DG ஷேக் சலீம் பேரணியைக் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார். கன்னியாக் குமரியிலிருந்து எங்களைத் திருநெல்வேலி, விருதுநகருக்கு வழிநடத்தினார், ரோட்டரி சங்கங்களுடன் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தார். இவை அனைத்தின் நிறைவில், RID 3212லிருந்து 350க்கும் மேற்பட்ட ஆஷா கிரண்களுக்கான உறுதிமொழியை நாங்கள் பெற்றோம் என்றார் அவர்.

அவர்களுடைய அடுத்த நிறுத்தம், கரூர், RID 3000. அங்கு, PRID C பாஸ்கர் அவர்களைப் பாராட்டி வரவேற்றார்.

பயணத்தின் நிறைவில், பைக்கர்கள் கொல்கத்தாவுக்கு வந்து சேர்ந்த போது, சுமார் 600 குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதற்கான ரூ.15 லட்சம் மதிப்புள்ள உறுதிமொழிகளைப் பெற்றிருந்தார்கள்; கிட்டத்தட்ட 4,000 குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதை ஆதரிக்கும் குழு நிதியளித்தலைத் தொடங்கியிருந்தார்கள்.

இந்தப் பயணம்முழுவதும் ஒரு மிகச்சிறந்த அனுபவமாக இருந்தது. பல மாவட்டங்களைச் சேர்ந்த ஆளுநர்கள், ரோட்டரியன்களுடன் நாங்கள் அமைத்த பிணைப்புகளும், எழுத்தறிவு நோக்கத்துக்காக ஒவ்வொருவரும் கொண்டிருந்த அர்ப்பணிப்புணர்வும் மிகச் சிறப்பானவை என்றார் தெல்கர்.

தன் இதயத்துக்கு மிகவும் நெருக்கமான ஓர் அனுபவத்தை அவர் விவரித்தார். அவர் குழுவினருடன் ஜான்ஸியை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த போது, மற்ற உறுப்பினர்கள் வருவதற்காகச்

சாலையோரமாக வண்டியை ஓரங்கட்டி நிறுத்தினார். அப்போது அவருடைய பைக்கின் பின்பக்கப் பெட்டியில் ஜபல்பூர் ரோட்டரியன்கள் சில பலூன்களைக் கட்டியிருந்தார்கள். சாலைக்காட்சிக்காகக் கட்டப்பட்ட அந்தப் பலூன்களைப் பார்த்துவிட்டு இரண்டு இளம் குழந்தைகள் அவரிடம் வந்தார்கள்.

அவர்களில் குழந்தை, என்னிடம் ஐந்து ரூபாய் தந்து அந்தப் பலூன்களைக் கேட்டார். நான் அவற்றை விற்கிறேன் என்று அந்தக் குழந்தைகள் நினைத்துவிட்டார்கள். நான் மகிழ்ச்சியோடு அவர்களுக்கு அந்தப் பலூன்களைத் தந்துவிட்டேன்.

பிறகு அவர், நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கேயாவது படிக்கிறீர்களா? என்று அவர்களைக் கேட்டார். தாங்கள் ராஜஸ்தானிலிருந்து வருவதாக அந்தக் குழந்தைகள் சொன்னார்கள். தங்களுடைய பெற்றோரிடம் போதுமான பணம் இல்லாததால் அவர்கள் தங்களைப் பள்ளிக்கு அனுப்பவில்லை என்றார்கள்.

அவர் அந்தக் குழந்தைகளின் பெற்றோரைத் தேடினார். ஆனால், அவரால் அவர்களைக் கண்டறிய இயலவில்லை. பின்னர், முந்தைய நாள் நிகழ்ச்சியிலிருந்து தான் கொண்டுவந்த பூக்களை அவர்களுக்கு வழங்கினார் அவர். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் திரும்பச்சென்றார்கள்.

நாம் முன்வைக்கும் ஆஷா கிரண் திட்டம், குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அழைத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி எனக்கு வருத்தத்தைத் தந்தாலும், உள்ளுக்குள் எங்கோ ஒரு மனநிறைவையும் உணர்ந்தேன், இந்த நோக்கத்தைப் பரப்புவதற்காக நம்மால் இயன்றதைச் செய்கிறோம் என்றார் தெல்கர்.



*பேரணிக் குழுவினர் RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் D ரவிசங்கருடன்.*

### பொதுத் தோற்றப் பேரணி

RC விஜயநகரம், RID 3020ன் தலைவரான ரவி மன்டாவும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த வேறு ஐந்து ரோட்டரியன்களும், RC சென்னை மெரகி என்ற, RID 3232ல் உள்ள அனைத்துப் பெண்கள் சங்கத்தைச் சேர்ந்த எட்டு உறுப்பினர் குழுவும், RC சங்ககிரியைச் சேர்ந்த இரண்டு பயணிகளும் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விசாகப்பட்டினத் திலிருந்து பைக்குகளிலும் கார்களிலும் பயணம்செய்து கொல்கத்தாவுக்கு வந்தார்கள். இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் வழியெங்கும் ரோட்டரியின் பொதுத் தோற்றத்தைப் பரப்பினார்கள்.

பல இளைஞர்கள் இதில் ஆர்வம் காட்டினார்கள். தங்களிடம் பணம் இல்லாவிட்டாலும் ரோட்டரியில் சேரலாமா என்றுகூடச் சிலர் கேட்டார்கள். பணம்மட்டும் முக்கியமில்லை, நேரத்தையும் யோச னைகளையும்கூட ரோட்டரிக்கு வழங்கலாம் என்று நாங்கள் அவர்களுக்கு விளக்கினோம் என்றார் மென்டா, இவருடைய கையில் கட்டுப் போடப்பட்டிருந்தது.

இச்ஹாபுரத்தில் இவர் பைக் ஓட்டிக் கொண்டிருந்த போது ஒரு விபத்தைச் சந்தித்தார்; அப்போது இவருடைய மனைவி வாணியின் கால் ஒரு பாறை மீது மோதியது.

அவர் இச்ஹாபுரத்திலுள்ள ஒரு மருத்துவ மனையில் ICUல் இருக்கிறார்; ஆனால், நான் பேரணியை நிறைவுசெய்யவேண்டும் என்று என்னை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தார் என்கிறார் மன்டா, நாங்கள் இலக்கை எட்டியதும், அந்தப் புகைப்படங்களை அவருக்கு வாட்ஸாப்பில் அனுப்பினேன், ‘நீ தந்த ஊக்கத்தால்தான் நாம் பேரணியை நிறைவுசெய்தோம் என்று அவருக்குச் சொன்னேன்.■



*RID 3120வின் பேரணிக் குழு.*



*RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் D ரவிசங்கர்.*

# ரோட்டரியை வெகுவாகப் பாராட்டிய மேற்கு வங்க ஆளுநர்

ஜெய்ஸ்ரீ

நானும் ஒரு ரோட்டரியன்தான் என்று சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் ரோட்டரியுடன் இணைந்தது முதல், முன்பைவிட உயர்வான ஒரு பாதையில் அது என்னைச் சேர்த்துள்ளது. இந்த முக்கியமான நேரத்தில், இந்த மிகச்சிறந்த விழாவில் கலந்துகொள்வதை நான் மகிழ்ச்சியாக எண்ணுகிறேன் என்றார் மேற்கு வங்காள ஆளுநர் ஜக்தீப் தன்கர். சமீபத்தில் கொல்கத்தாவில் நடைபெற்ற நூற்றாண்டுச் சந்திப்பில் கலந்துகொண்ட 32 நாடுகளைச் சேர்ந்த 4,000 ரோட்டரியன்களின் கூட்டத்தில் பேசும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தன்கர் வழக்கறிஞராகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, நீதிபதி B P பெரி அவரை ரோட்டரி சங்கக் கூட்டத்துக்கு விருந்தினராக அழைத்துச் சென்றார். ராஜஸ்தானைச் சேர்ந்த சிறு கிராமத்திலிருந்து வருகிற எனக்கு, இந்த அனுபவம் திகைப்பூட்டியது; எனக்கு அது மிகவும் பிடித்திருந்தது என்றார் அவர். பின்னர், மறைந்த PRID சுதர்ஷன் அகர்வாலுடன் 90களில் பழகியதை நினைவுகூர்ந்தார். அவர் எனக்கு வழிகாட்டினார்; பாராளுமன்றச் செயல்முறைகளை நான் அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன்.''

RI தலைவர் மார்க் மலோனியின் செய்தியிலிருந்து மேற்கோள் காட்டிய அவர், ரோட்டரியில் நாம் எல்லாரும் ஒன்றாக இருக்கிறோம், நாம் யாரானாலும் சரி, எங்கிருந்து வந்திருந்தாலும் சரி, என்ன மொழி பேசினாலும் சரி, அல்லது, எந்தப் பண்பாட்டைப் பின்பற்றினாலும் சரி. நாம் அனைவரும் ஒருவரோடொருவர் இணைந்திருக்கிறோம்: நம்முடைய சங்கங்களில்மட்டும் நாம் உறுப்பினராக இருப்பதில்லை, நாம் அனைவரும் பங்குபெறும் பன்னாட்டுச் சமூகத்தின் உறுப்பினராகவும் உள்ளோம்.

ரோட்டரியின் தத்துவம், நம்முடைய நாட்டின் பழங்கால நாகரிகத்தின் ஒரு பிரதிபலிப்பாகும் என்றார் அவர். RIPN சேகர் மேத்தாவை அவருடைய புதிய பொறுப்புக்காகப் பாராட்டினார்.

இதற்கு முன் மேத்தாவும் அவரும் சந்தித்தபோது, சந்திப்புக்கு உங்களுடைய வருகையைப் பெருமைப்படுத்தும்வகையில், ரோட்டரி 50 குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளுக்கு ஆதரவளிக்கும் என்பதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஏனெனில், பொதுவாக மக்கள் என்னிடம் எதையாவது கேட்க தான் வருவார்கள், முதன் முறையாக இப்போது தான் ஒருவர் எதையோ வழங்குவதற்காக வந்திருக்கிறார் என்று அவர் சொன்ன போது, கைதட்டல் எழுந்தது. எப்போதெல்லாம் உங்களுக்கு என்னுடைய சேவை தேவைப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் காலாட்படை வீரனாக ரோட்டரியன்களுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பேன் என்றார்.

புகைப்படம்: ஜெய்ஸ்ரீ

*மேற்கு வங்க ஆளுநர் ஜக்தீப் தன்கர் மற்றும் அவர் மனைவி சுதேஷி அவர்களை ராஷி, கேய், RIPN சேகர் மேத்தா, RI தலைவர் மலோனி, RID கமல் சங்வி மற்றும் DG அஜய் அகர்வால் கௌரவிக்கின்றனர்.*



# ரோட்டரியின் வளர்ச்சிக்கு ரோடராக்ட் அடிப்படையானது: அறங்காவலர் ஜெனிஃபர்

V முத்துகுமரன்

கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பில் PRID டாக்டர் மனோஜ் தேசாய் தலைமை தாங்கிய, உறுப்பினர்களைப்பற்றிய குழு விவாதத்தில் பேசப்பட்ட தலைப்புகளில் சில: பன்முகத் தன்மையைக் கொண்டாடுதல், மேலும் கூடுதலான இளைஞர்களை ரோட்டரிக்கு, தலைமைப் பொறுப்புகளுக்கு ஈர்த்தல், ஒரு வியூகத் தொலைநோக்குடன் இருத்தல்.

PRID பாண்டுரங்க செட்டி வழங்கிய தொடக்கக் குறிப்புகளில், ஆசியாவில் ரோட்டரியின் வளர்ச்சி விகிதம் நிறைவளிப்பதாக இருந்தபோதும், வட அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பிற பகுதிகளில் அது கவலையளிக்கிற விஷயமாக உள்ளது என்று சுட்டிக்காட்டினார். மொத்த உறுப்பினர் எண்ணிக்கையான 1.2 மில்லியனை அடுத்த நிலைக்குக் கொண்டுசெல்ல நாம் விரும்பினோம்; அது உண்மையில் நிகழவே இல்லை.

இனிவரும் பத்தாண்டுகளில் ரோட்டரியை முன்னேற்றிச் செல்வதற்காக, தொலைநோக்கு வாக்கியம் 2025, தலைமைப் பொறுப்புகளைச் சரியானபடி வலியுறுத்தியுள்ளது என்றார் அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ். ரோடராக்ட் இயக்கத்தையும் ரோடராக்டர்களையும் ஏற்றுக் கொள்வதுதான் நாம் செய்ய வேண்டிய சரியான பணி, ஏனெனில், ரோட்டரியின் வளர்ச்சிக்கு அவர்கள் அடிப்படையானவர்கள் என்றார்.

உலகிலுள்ள 7.5 பில்லியன் மக்களில் பாதிக்கும் மேற்பட்டோர் 30 வயதுக்குக் குறைவானவர்கள் என்றும், இவர்களுக்கு ரோட்டரி அமைப்பின் மீது ஆர்வம் உண்டாக்குவதற்காக, சமீபத்தில் வெளியிடப்பட்ட தொலைநோக்கு அறிக்கையும் செயல் திட்டமும் நான்கு முக்கியத்துவப் பகுதிகளில் கவனம் செலுத்தியுள்ளன என்றும் குறிப்பிட்டார் கொரியாவைச் சேர்ந்த அறங்காவலர் சங் கூ யுன். அந்தப் பகுதிகள்: வீச்சை விரிவாக்குதல், ஊடாடலை மிகுதியாக்குதல், கூடுதல் பன்முகத்தன்மை, உறுப்பினராதலைக் கட்டுப்படியாகக்கூடியதாக்குதல்.

இளம் தலைமுறையானது ரோட்டரியின் எதிர்காலத்தைப் பாதிக்கும், மக்கள்தொகை ஆய்வின் பகுதியாக நாம் அவர்களைக் கவனமாகக் காணவேண்டும். அவர்களுடைய பேரார்வம், ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கையைத் தூண்டும் என்றார்.

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துப் பகுதியைச் சேர்ந்த Rtn சரிதா மெக்லியான், தன்னுடைய பகுதிகளில், குறைந்து வரும் உறுப்பினர் எண்ணிக்கை ஒரு பெரிய கவலை என்றார்.

21A மற்றும் 21B பிராந்தியங் களைச் சேர்ந்த (மத்திய ஆசியா மற்றும் கிழக்கு ஐரோப்பா) RIDE காத்ரினா கோட்சாலி, எங்கள் பிராந்தியத்தில் இளைஞர்களை ஈர்ப்பதற்கு ரோட்டரியின் அமைதி முயற்சிகள் முக்கியமானவை என்றார்.

RIDN விக்கி புலிஜ், RID 5190, அமெரிக்கா, ஒரு மாறுபட்ட கோணத்தை வழங்கினார், நம் சேவைகள் பல விதமானவை என்பதால், இளைஞர்கள் ரோட்டரியின் தலைமைப்பண்பு வளர்ச்சி, நட்பு வலைப்பின்னல் ஆகியவற்றை ஈர்க்கும் அம்சங்களாகக் காண்கிறார்கள்.

மாவட்டத் தலைவர்கள் தங்களுடைய சங்கங்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள முயற்சியெடுக்க வேண்டும் என்று நிகழ்ச்சியைத் தொகுத்துக்கூறினார் தேசாய். ■

**இடதிலிருந்து:** RIDN *விக்கி புல்லிட்ஸ், அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ்,* PRIDs *மனோஜ் தேசாய், பாண்டுரங்க செட்டி, சரிதா மெக்லீன், அறங்காவலர் சாங்கு யூன் மற்றும்* RIDE *காட்ரீனா கோட்சாலி.*



# DGEக்கள் சங்கத்தினரை ஊக்குவிக்க வேண்டும்

V முத்துக்குமரன்

உலகின் சிறந்த தலைவர்கள் யார், அவர்களின் எந்த பண்புகளை நீங்கள் பின்பற்ற விரும்புகிறீர்கள் என்று இந்தூர் இன்ஸ்டியூட்டில் நடந்த GETS பயிற்சி அமர்வில் PDG தீபக் கபூர் கேட்டார்.

எந்த துறையின் தலைவரானாலும் நெருக்கடியில் நிதானமாகவும் மற்றவர்களை அங்கீகரிக்கவும் வேண்டும் என்ற கபூர் ரோட்டரி மாவட்டங்களின் நோக்கம் கிளப்புகளை ஆதரிப்பதும் பலப்படுத்துவதோடு, RIக்கும் ரோட்டேரியர்களுக்கும் இடையே பாலமாகவும் செயல்படுகின்றன என்றும் கூறினார்.

பிற குழு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாத கிளப்புகளுக்கு பொறுப்பு வழங்கப்பட வேண்டும்; “பயிற்சி அமர்வுகளில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களின் மாதாந்திர நடவடிக்கைகளை கண்காணியுங்கள்’’ என்றார் கபூர் .

பிரிவினை, அதிகார போட்டி ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தின் சவால்களை சமாளிக்க மத்தியஸ்த திறமை வேண்டும் என்றார்.

சிறந்த பணியை பாராட்ட செயல் குழு, மோதல்களுக்கு ஒரு மோதல் மேலாண்மை குழு அமைப்பதோடு சிக்கல்களை ஆராய்வதற்கு DG ஒரு வசதியாளரை நியமிப்பதோடு எதிர்மறையான கருத்து மற்றும் அடையாள நெருக்கடியை அகற்ற கிளப்பின் முக்கிய குழுவுடன் தொடர்பு சேனல்கள் பலப்படுத்தப் பட வேண்டும் என்று பிரேக் அவே அமர்வுகள் மோதல் சூழ்நிலைகளை கையாள்வது பற்றி விவாதித்தது.

எதிர்கால ஆளுநர்களாக அவர்கள் மோதல்களைக் கையாள்வதற்கான உத்திகளை வகுக்க வேண்டும் என்று கூறினார்.

### சமூக ஊடகங்களின் சக்தி

5 மற்றும் 7 மண்டலங்களின் DGEக்களுக்கான மற்றொரு அமர்வில், PDG J B காம்தார் கிளப்புகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி சமூக ஊடகங்களை பெரிய திட்டங்களை செயலாக்க திறம்பட பயன்படுத்தலாம் என்றார். உதவி ஆளுநர்கள், கிளப் தலைவர் மற்றும் செயலாளருடன் கலந்தாலோசிப்பதன் மூலம் அவர்கள் செய்யும் திட்டங்கள், உறுப்பினர் நிலை மற்றும் TRF பற்றி மதிப்பிட உங்கள் வருகைககளை முன்கூட்டியே திட்டமிடுங்கள் என்று விளக்கினார்.

### மாவட்ட வலைத்தளம்

அனைத்து DGEகளும் கிளப் நிகழ்வுகள், திட்டங்களை வெப் சைட்டில் அப்டேட் செய்வது வேலையை எளிதாக்கும் என்றனர். DGE S முத்துபழனியப்பன்,




PDG J B *காம்தார்* GETS *நிகழ்ச்சியில்*



*RID பரத் பாண்ட்யா, PRID C பாஸ்கர் மற்றும் TRF அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மாநிலத்தலைவர்களுக்கான பயிற்சியில்.*

3232 , RI மாவட்ட போர்ட்டலில் குறிப்புகளைப் பகிர்வதற்கும் பதிவேற்றுவதற்கும் வலைத்தளங்களுக்கான இணைப்புகளை வழங்கலாம் என்றார். DGEக்கள் ரங்கநாத் பட், 3181, சங்கிராம் பட்டேல், 3170, டாக்டர் தாமஸ் வாவனிகுன்னெல், 3211, மற்றும் K S வெங்கடேசன், 2982, மாவட்ட வலைத்தளங்கள் கிளப் நடவடிக்கைகளை மேம்படுத்து வதற்கு டிஜிட்டல் கருவிகள் சக்திவாய்ந்த சாதனங்களாக மாறலாம் என்று ஒப்புக்கொண்டனர்.

### புதுப்பிக்கப்பட்ட GML

GML இன் சாப்ட் காபிகள் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படலாம் என்றாலும், ஹார்டு காபிகள் மாவட்டத் தலைவர்களுக்கு வெளியிடப்பட வேண்டும். மாவட்ட திட்டங்களைத் தவிர, TRF, பெரிய நன்கொடைகள் மற்றும் அறக்கட்டளை நடவடிக்கைகள் குறித்து செய்தி வெளியிட வேண்டும் என்று காம்தார் கூறினார்.

### பிராந்திய தலைவர்களுக்கு தொடர்ச்சியான கற்றல் அவசியம்

ரோட்டரியின் தாக்கத்தை அதிகரித்து, வரம்பை விரிவுபடுத்தி, பங்கேற்பாளர்களின் ஈடுபாட்டை ஆழப்படுத்த, மாற்றங்களுக்கு ஏற்ப திறனை மேம்படுத்த புதிய முன்னுரிமைகள் பழைய உத்திகளை மாற்றியுள்ளன என்று நோரா பீமிஷ் கூறினார்.

Rotary.org வலைத்தளம் பயிற்சி வளங்களை சேமிக்கப் பயன்படும் அதே வேளையில், புதிய செயல் திட்டம் பிராந்திய தலைவர்கள் (RRFC, ARRFC, EMGA, EPNC, DRFC, RPIC மற்றும் அறங்காவலர்) RI மாவட்டங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் உதவும் என்று PRID C பாஸ்கர் கூறினார். இப்போது ரோட்டராக்டர்கள் ரோட்டரியின் ஒரு பகுதியாக உயர்த்தப்பட்ட நிலையில் RIஇன் அறிக்கையில் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் சேர்த்தல் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

அறங்காவலர் ஜெனிபர் ஜோன்ஸ், ரோட்டரியின் பொது இமேஜை மேம்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும் என்று RPICகளை வலியுறுத்தியவர் ரோட்டரி இமேஜை மேம்படுத்துவதற்கு ரோட்டரேக்டர்களையும் அதிகமான பெண் உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டும் என்றார் .

ரோட்டரியின் தரப்படுத்தப்பட்ட மூன்று-படி அணுகுமுறையின் மூலம் உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் ரோட்டரியின் பங்கு பற்றிய ஓர் கண்ணோட்டத்தை EPNC டாக்டர் E K சகாதேவன் வழங்கினார்.

ரோட்டேரியன்கள் அரசாங்கங்களின் நலன் முயற்சிகளை ஆதரித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பேரணிகள், சிறப்பு முகாம்கள் மற்றும் பள்ளிகளில் NCD அமர்வுகளை நிகழ்த்தும் என்றும் சகாதேவன் கூறினார்.

*ரோட்டரி இமேஜை மேம்படுத்துவதற்கு ரோட்டரேக்டர்களையும் அதிகமான பெண் உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டும் என்றார்.*

ஜெனிஃபர் ஜோன்ஸ்
TRF அறங்காவலர்

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# மேற்கு வங்காள அமைச்சரின் ரோட்டரி MSME செல்லுக்கான அழைப்பு

V முத்துகுமரன்

மேற்கு வங்கத்தின் அமைச்சர் அமித் மித்ரா, மனிதநேய ஹீரோ விருதுகள் அமர்வில் தனது உரையின் போது சுகாதார மற்றும் நிறுவனத் துறைகளில் ரோட்டரிக்கான மூன்று பரிந்துரைகளை முன்வைத்தார்.

அவர் மேலும் மூன்று எக்ஸ்ரே மையங்களை அமைக்குமாறு ரோட்டரியை கேட்டுக்கொண்டார். இந்த மையத்தினால் கடந்த நான்கு ஆண்டுகளில் 150,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பயனடைந்துள்ளனர். எக்ஸ்ரே மையத்தின் அருகில் கிராமப்புற நோயாளிகளை விடுவதற்கு பயன்படும் பஸ் சேவையை நான் மீண்டும் தொடங்கினேன். இப்போது, இதனிடமுள்ள $200,000 உபரி பணத்தை வங்கியில் டெபாசிட் செய்துள்ளது, என்று மித்ரா கூறினார்.

RIPN ஷேகர் மேத்தா, ரோட்டரி ஆறு நோய் கண்டறியும் மையங்களை எதிர்காலத்தில் அமைக்கும் என்று கூறினார்.



*மேற்கு வங்க நிதித்துறை அமைச்சர் அமித்மித்ராவை RIPN சேகர் மேத்தா, PDG சுபாஷ் ஜெயின் மற்றும் நூற்றாண்டு விழாத்தலைவர் வினோத் பன்சல் முன்னிலையில் வாழ்த்துகிறார்.*

புகைப்படம்: V முத்துகுமரன்

ரோட்டரியின் நூற்றாண்டில் 1,000 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து இலவச இதய அறுவை சிகிச்சைகளை வழங்கும் திட்டமான ஷிஷு சாத்தியிற்க்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது என்றார்.

மேற்கு வங்கம் முழுவதும் 2019–20 $30 மில்லியன் (ரூ.200 கோடி) மதிப்புள்ள பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய ரோட்டரியை பாராட்டி அடிமட்ட அளவில் திட்டங்களை மேம்படுத்தும் படி மித்ரா கூறினார்.

அமைச்சகத்துடன் இணைக்கப் பட்ட MSMEக்களுக்காக உதவும் ஒரு சிறப்பு செல்லை உருவாக்கும்படி ரோட்டரியை அமைச்சர் கேட்டுக் கொண்டார். உங்கள் நிபுணத்துவத் துடன், அவர்களின் வேலையை மேம்படுத்தவும், வணிகத்தை விரிவு படுத்தவும் நீங்கள் உதவலாம். மாநிலத்தில் 900,000 யூனிட்டு களைக் கொண்ட MSME துறையின் வளர்ச்சிக்காக ரூ.70,000 கோடியை ஒதுக்கியுள்ளதால் ரோட்டரியின் எந்தவொரு திட்டத்தையும் உடனடி யாக ஒப்புதல் வழங்க அவர் உறுதியளித்தார்.

மேற்கு வங்கத்தில் உள்ள 549 தொழில்துறை கிளஸ்டர்களில் ரோட்டரி குறைந்தது ஐந்தையாவது குறிப்பாக பெரிய கிளஸ்டரான தோல் பதனிடுதல் மற்றும் தோல் கிளஸ்டரை தத்து எடுக்க, உங்கள் முயற்சிக்கு ஆதரவை நாங்கள் வழங்குவோம்.'' என்றார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் ரோட்டரி திட்டங்கள் ரூ.500 கோடியை எட்டும் என்று நம்பிய அவர், மேற்கு வங்கத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் ரோட்டரி முன்னிலை வகிக்க அழைப்பு விடுத்தார்.

Rotary India Centennial Summit 2020

# சிக்கலான நேரங்களில் அமைதியைக் கொண்டு வருதல்

V முத்துக்குமரன்



புகைப்படம்: V முத்துக்குமரன்

*இடதிலிருந்து: ராஜேந்திர ருயியா, அமைதித் தோழமைக்கான மாவட்ட அவென்யூ தலைவர், RID 3141, IPS அதிகாரி லூயிஷ் அய்ன்ட், TRF அறங்காவலர் தேர்வு அஜீஸ் மேமன், RID பீட்டர் கைல், சலோனி லகியா மற்றும் PDG கல்பனா கௌண்ட்.*

நூற்றாண்டுச் சந்திப்பின் போது, 'அமைதியை முன்னிறுத்துதல்: கனவுகளை நனவாக்குதல்' என்ற வல்லுனர் விவாதத்துக்குத் தலைமை தாங்கிய கைல், ரோட்டரியின் ஆறு கவனப் பகுதிகளில் அமைதி, முரண்களைக் களைதலும் ஒன்று என்றார்.

"அமைதி என்பது, ரோட்டரியின் DNAவில் உள்ளது, நம்முடைய 1,350 அமைதித் தோழர்கள் உலகெங்கும் பரவியுள்ளார்கள், தங்கள் பணிகளின் மீது பேரார்வத்துடன் உள்ளார்கள் என்றார் அவர்.

குவகாத்தியைச் சேர்ந்த IPS அலுவலரும் RID 3240ன் அமைதி அறிஞருமான DIG லுயிஷ் ஐன்ட், 2,000க்கும் மேற்பட்ட போடோ போராளிகள் தங்களுடைய ஆயுதங்களைக் கீழே போட்டதைக் கண்டது தனக்கு மிகுந்த மனநிறைவை அளித்ததாகக் குறிப்பிட்டார். அவருடைய குழுவைச் சேர்ந்த அமைதி அறிஞர்கள் சமூக ஊடகங்களில் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள்; பொய்யான செய்திகள், தவறான நோக்கத்துடன் பொய்யான தகவல்களைப் பரப்பும் பரப்புரைகள் ஆகியவைபற்றிப் பொதுமக்களுக்கு எச்சரிக்க இது அவர்களுக்கு உதவுகிறது.

ஆனால், சரணடைந்த போராளிகள் அனைவருக்கும் சமூகத்தில் மறுவாழ்வு அளிப்பது ஒரு சவால் என்றார் அவர். வடகிழக்குப் பகுதியிலிருந்து வரும் PDG கல்பனா கௌன்ட், RID 3240, அப்பகுதியைப்பற்றிப் பேசினார். அங்கு போராளிகள் அதிகம், பழங்குடியினருடைய ஆர்வங்கள் முரண்படுவது அதிகம், இளைஞர்களை அதே இனக்குழு, மொழி, பண்பாடு கொண்ட தீவிரவாதக் குழுக்கள் ஈர்க்கிற ஆபத்தும் அதிகம்.

வடகிழக்குப் பகுதிகளில் நீடித்திருக்கிற அமைதியை உருவாக்குவதற்கு ரோட்டரி அமைதி மையங்கள் பங்காற்றலாம் என்றார் அவர்.

TRF அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, பாகிஸ்தானைச் சேர்ந்த அஜீஸ் மேமன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சமீபத்திய உரையாடலொன்றை நினைவுகூர்ந்தார். போர் இல்லாதது மட்டும் அமைதியாகிவிடாது என்று அந்த உரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது, களத்தில் பலன்களைப் பெறத் தொடர்ந்த முயற்சிகள் தேவை என்று விளக்கப்பட்டது.

பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தானிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் நம்முடைய முயற்சிகளுக்குக் கொலைகள், தீவிரவாத வன்முறைச்செயல்களால் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. முன்னணியில் நின்று தடுப்பு மருந்து தரும் நம்முடைய தன்னார்வலர்களில் சுமார் 70 சதவிகிதம் பெண்கள்; கடந்த மூன்று ஆண்டுகளில், 190க்கும் மேற்பட்டவர்கள் Swat பகுதியில் தங்களுடைய இளம்பிள்ளைவாதப் பணியின்போது கொல்லப்பட்டுள்ளார்கள் என்றார் மேமன்.

பாகிஸ்தான் 1968லேயே பெரியம்மையை வெற்றிகரமாக அகற்றிவிட்டது. இதற்குக் காரணம், அப்போது தீவிரவாதம் இல்லாதது தான் என்று சுட்டிக்காட்டினார் அவர்.

ரோட்டரி அமைதித் தோழரான சலோனி லகியா, நாங்கள் தேர்ச்சி பெற்று ஆறு மாதங்களாகின்றன. இந்தக் காலகட்டத்தில் நாங்கள் வளங்களைப் பகிர்ந்துகொள்கிறோம், ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்குப் பங்களிக்கிறோம், எல்லை தாண்டிய உடனுழைப்புகளை நாடுகிறோம் என்றார்.

மும்பையிலுள்ள 25 அமைதி அறிஞர்களும் சிந்தனைக்குழுவில் உள்ளார்கள், சங்கத் திட்டங்களை வடிவமைப்பதில் உதவுகிறார்கள் என்றார் ராஜேந்திர ருயியா, அமைதித் தோழமைக்கான மாவட்ட அவென்யூ தலைவர், RID 3141.■

# டிஸ்கான் 3250: நட்பு கலந்த நிகழ்வு

கிரண் ஜெஹ்ரா

800க்கும் மேற்பட்ட ரோட்டேரியர்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்ட லக்னோவின் RID 3250 இன் மாவட்ட மாநாட்டின் ஜூனூன் நிகழ்வை மகிழ்ச்சி என்றே ஒரு சொல்லில் விளக்கலாம். டிஸ்கனில் RIPR பிரான்செஸ்கோ அரேசோ, RIPN ஷேகர் மேத்தா, RIDகள் கமல் சங்வி, பரத் பாண்ட்யா மற்றும் RIDN A S வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். கொண்டாட்டகளிடையே ரோட்டரி தலைவர்கள் பாரம்பரிய ஆரத்தியுடன் வரவேற்கப்பட்டனர்.

தனது தொடக்க உரையில், RIPR அரேஸோ ரோட்டரியன்களிடம் கடினமாக உழைக்கவும், கடந்த காலத்தைப் பாதுகாக்கவும், நிகழ்காலத்தை மதிக்கவும், எதிர்காலத்திற்கு வழி வகுக்கும்படியும் கேட்டுக் கொண்டதோடு ரோட்டரி அறக்கட்டளைக்கு ஆதரவளித்ததற்காக முக்கிய நன்கொடையாளர்களை அவர் பாராட்டி, DG கோபால் கெம்கா தனது மாவட்டத்தில் பெண் ரோட்டேரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததற்கு வாழ்த்து தெரிவித்தார்.

ஒரு மாவட்ட மாநாடு "புதிய நண்பர்களை உருவாக்குவதற்கும், பழைய நட்பைப் புதுப்பிப்பதற்கும், எங்கள் மூத்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதற்கும், எங்கள் அமைப்பின் இளைஞர்களுடனான பிணைப்பிற்கும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது'' என்று RIPN மேத்தா அனைவருக்கும் நினைவுபடுத்தினார். ரோட்டரியில் அவர் செய்த மிகப் பெரிய சாதனை தன் பொறுப்புக்களை தட்டிக்கழிக்காததோடு ரோட்டரியின் சாரம் இதுவே என்பதை உணர்ந்ததாகவும் கூறினார்.

ஒரு கவிதை பாணியில், RID கமல் சங்வி "ஒவ்வொருவரும் ஒருவரை கொண்டு வாருங்கள்" கூறியவர் ரோட்டரியை வலிமையாக்க நம் குழந்தைகளை பெருமைமிக்க ரோட்டேரியர்களாக ஆக்குவது முக்கியம்,'' என்றார். ரோட்டரியை வலிமையாக்குவதில் பெண்களின் பங்கை பாராட்டினார்.

"ரோட்டரியின் உண்மையான வலிமை ரோட்டரியர்கள் தங்கள் கிளப்புகளிலும் சமூகங்களிலும் உண்மையாக பணியாற்றுவதிலிருந்து வருகிறது.''என RID பாண்ட்யா கூறினார். உறுப்பினர் வளர்ச்சி



RIPR *ஃப்ரான்செஸ்கோ அரேசோ மற்றும் அவர் மனைவி அன்னா மாரியா,*
RID *கமல்சங்வி மற்றும் சோனலுடன்.*



**இடதிலிருந்து:** *அவிட்டா மற்றும் DG கோபால் கேம்கா, RIPN சேகர் மேத்தா, ராஷியுடன்.*

யோடு, அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து சேவை திட்டங்களை முன்னெடுப்பதை வலியுறுத்தினார். ரோட்டேரியர்களுக்கு நல்ல ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்தும், நம் வாழ்வின் இலக்கை அடைவதில் அதன் முக்கிய பங்கு குறித்தும் அவர் கூறினார். கல்வியறிவின் அவசியம் குறித்து பேசிய RIDN A S வெங்கடேஷ் வயது வந்தோரின் கல்வியறிவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

டிஸ்கான் சுவையாக இருந்தது. DG கெம்கா தனது சொந்த கிளப்பான RC பாடலிபுத்ராவுக்கு நன்றி தெரிவித்ததோடு, டிஸ்கானை வெற்றிகரமாக மாற்றிய அனைவரையும் பாராட்டினார்.■

# கன்னட மாணவர்களுக்கு பன்மொழி கீபோர்டு

ரோட்டரி செய்திக்குழு

ராஜனகுண்டே அரசு உயர்நிலைப்பள்ளியில் கணினி கல்வியறிவை மேம்படுத்தவும் கன்னட மொழியில் டிஜிட்டல் கற்றலை ஆதரிப்பதற்கும், அவர்களின் தாய்மொழியில் பல்வேறு பாடங்களைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கும், RC பெங்களூர் ஓயாசிஸ், RID 3190, பன்மொழி கீபோர்டு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

கா-நாடா எனப்படும் பல்துறை விசைப்பலகை பள்ளியின் மொழி ஆய்வகத்தில் நிறுவப்பட்டது. '' இந்திய மொழிகளுக்கான பன்மொழி தட்டச்சு செய்ய உதவும் ஒரு ஸ்மார்ட் கீபோர்டுடன் ஆங்கில மொழிக்கான ரோமானிய எழுத்துத் தொகுப்புகளைக் கொண்டுள்ளது கா-நாடா '' என்று கிளப்பின் சமூக சேவை இயக்குனர் பால் முண்டக்கல் கூறினார். கானாடா ஃபோனெடிக்ஸ் நிறுவனத்தின் டாக்டர் குரு பிரசாத் உருவாக்கிய இந்த சாதனம், மாணவர்களின் கற்றல் அனுபவத்தை வளப்படுத்த குறைந்த கட்டண கம்ப்யுடருடன் வருகிறது.

இந்த கீபோர்டு ஒரு குழந்தைக்கு 1ஆம் வகுப்பிலிருந்தே தன் தாய்மொழியில் சொற் களையும் வாக்கியங்களையும் தட்டச்சு செய்ய உதவும்.



ஒரு மவுஸை கூட தொட்டிராத இப்பள்ளி மாணவர்கள் இப்போது கன்னடத்தில் தட்டச்சு செய்யத் தொடங்கியுள்ளதோடு இந்த கீபோர்டில் பிற இந்திய மொழிகளிலும் தட்டச்சு செய்வதாக கூறினார்.

கிளப் பள்ளி கட்டிடத்தை சீரமைத்து, புதிய பெஞ்சுகளை வழங்குவதோடு, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சிந்தனையின் பல்வேறு அம்சங்களைப் பற்றி பயிற்சி அளிக்கிறது.'' WinS திட்டங்கள் நடத்தப்படுவதோடு மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி பட்டைகள் மாணவிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன'' என்று கிளப் தலைவர் ஹேமந்த் சர்மா கூறினார்.■




PRIP *கல்யாண் பானர்ஜி பள்ளிக்குழந்தைகளுக்கு சைக்கிள் வழங்குகிறார்.*

# 75வது பிறந்த நாளைச் சிறந்த சேவைகளுடன் கொண்டாடியது RC பாவ்நகர்

ரஷீதா பகத்



RC பாவ்நகர், 1945ம் ஆண்டு காதலர் தினத்தன்று பிறந்தது. பிப்ரவரி மாதத்தில் தன்னுடைய பிளாட்டினம் ஆண்டைக் கொண்டாடியது. முன்னாள் தலைவரும் நிகழ்ச்சி தலைவருமான மனீஷ் கோத்தாரி இதுபற்றிப் பேசுகையில், அன்றுமுதல், கடந்த 75 ஆண்டுகளாக, எங்கள் சங்க உறுப்பினர்கள் பாவ்நகர் மாவட்டத்தின் நலிந்தோர் மீது அன்பைப் பொழிகிறார்கள், அவர் களுக்குச் சேவை செய்கிறார்கள், அதன் மூலம், காதலர் தினத்தை நாள்தோறும் கொண்டாடுகிறார்கள் என்றார்.

RID 3060ன் ஆறாவது மிகப் பழைய, மிகப்பெரியவற்றுள் ஒன்றான தன்னுடைய சங்கத்தில் உள்ள 131 உறுப்பினர்களும் எப்போதும் பழைய பிரச்னைகளைக் கையாள் வதற்குப் படைப்பூக்கமுள்ள வழிகளைச் சிந்திக்கிறோம்; அதைவிட முக்கியமாக, பிறர் எங்களை அணுகு வதற்கு முன்பாகவே பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்று முன் கூட்டியே சிந்திக்கிறோம். இந்தத் தொலைநோக்கு, எங்கள் நகரத்தில் ரோட்டரியின் தோற்றத்தை

மேம்படுத்தியுள்ளது. எங்கள் சங்கத்துக்குச் சொந்தமாக அழகிய, குளிர்பதன வசதியும் சிறந்த ஒலியமைப்பும் கொண்ட அரங்கமொன்று உள்ளது; இங்கிருந்து நாங்கள் மையமாக்கப்பட்ட சமூக சேவைச் செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துகிறோம் என்றார் அவர்.

RC பாவ்நகர் தன்னுடைய 75வது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக, பிரமாண்டமான இரண்டு நாள் கொண்டாட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதற்கு PRIP கல்யாண் பேனர்ஜி தலைமை தாங்கினார்; இதில் DG அனிஷ் ஷா, DGN சந்தோஷ் பிரதான், IPDG பிங்கி படேல் மற்றும் PDGகள் பிரதீப் கோஹில் மற்றும் தீபக் அக்ரவால் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சங்கத்தின் பிளாட்டினம் விழாக் கொண்டாட்டம் ஒரு குருதிக்கொடை முகாமுடன் தொடங்கியது, இதில் 100 பாட்டில் குருதி திரட்டப்பட்டது. பின்னர், மூத்த ரோட்டரி தலைவர்கள் சங்கத்தின் புகழ்பெற்ற திட்டங்களைப் பார்வையிட்டார்கள்.

அந்தத் திட்டங்களில் ஒன்று: ஒரு நம்பிக்கைக் கதிர் என்கிற குழந்தைகள் பராமரிப்புத் திட்டம். தெருவில் வாழும் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பது, ஊட்டமளிப்பது என்கிற முக்கியமான, நெடு நாட்களாகத் தொடர்கிற உள்ளூர்த் தேவையை நிறைவு செய்வது இது என்கிறார் சங்கத் தலைவர் ராகேஷ் கனடா. 20 ஆண்டுகளாகச் செயல்பட்டுவரும் இந்தத் திட்டம் இந்நகரில் மிகுந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது, இதன் மூலம் வளர்க்கப்பட்ட பல குழந்தைகள் பட்டம் பெற்று மிக நல்ல வேலைகளில் உள்ளார்கள் என்று தொடர்ந்து கூறுகிறார் அவர்.

“அவர்களுடைய பாதையில் ஒளியேற்றுவோம்” என்கிற இன்னொரு திட்டம் 4,300 பள்ளி இருக்கைகளை நன்கொடையாக வழங்கியுள்ளது. ரூ.90 லட்சம் என்கிற பெருஞ் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டம் இது.

ரோட்டரி மின்-நூலகம் என்பது கல்லூரி மாணவர்களுக்கான ஒரு தனித்துவமான, நவீன, குளிர்பதன வசதி கொண்ட நூலகம்.

அம்ருதம் என்பது, கிணறுகளுக்குப் புத்துணர்ச்சியூட்டுகிற, புத்துயிர்ப்பளிக்கிற, நிலத்தடி நீரளவை மேம்படுத்துகிற நீர்த் திரட்டல் திட்டம்.

ரோட்டரியின் நிரந்தரத் தடுப்பு மருந்து மையத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 300க்கும் மேற்பட்ட குழந்தைகள் தகுதிபெற்ற மருத்துவர்கள், செவிலியர்களிடம் தடுப்பு மருந்து பெறுகிறார்கள்; கடந்த 20 ஆண்டுகளாக நடந்துவரும் இத்திட்டத்தில் மானிய விலையில் தடுப்பு மருந்துகள் வழங்கப் படுகின்றன.

ரோட்டரி பரேக் டயக்னஸ்டிக்ஸ் என்ற இன்னொரு திட்டம் மருத்துவ நோயியல் ஆய்வகமாகும். இங்கு தகுதிபெற்ற, திறன்மிக்க நபர்களால் நியாயமான கட்டணத்தில் ஆய்வுகள் நிகழ்த்தப்படுகின்றன. சமூகத்தின் தேவைகளை நுண்ணுணர்வுடன், பச்சாத்தாபத்துடன், செயல் திறனுடன் நிறைவுசெய்கிற இச்சங்கத்தின் மிகச்சிறந்த பணியை PRIP பேனர்ஜி வாழ்த்தினார்.

அன்று மாலை,





*ரோட்டரி சேவை மையத்தில் RC பாவ்நகர் உறுப்பினர்கள் PRIP கல்யாண் பானர்ஜியுடன்.*



PDG பிங்கி பட்டேல் அவர் கணவர் சுமுத் பட்டேல் மற்றும் கல்யாண் பானர்ஜி.

கொடிகள், மெழுகு வர்த்திகளுடன் பிரமாண்டமான கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட்டத்தின் மூத்த தலைவர்கள், நகரத்தின் புகழ்பெற்ற ஆளுமைகள், முன்னணிக் குடிமக்கள், நன்கொடையாளர்கள், ரோடராக்டர்கள், சங்க உறுப்பினர்களுடைய குடும்பத்தினர் இதில் கலந்து கொண்டார்கள்.

தன்னுடைய சங்கத்தின் TRF தலைவராகவும் செயல்பட்டுவருகிற கோத்தாரி, இந்த மைல்கல் ஆண்டில் இச்சங்கம் EREY (Every Rotarian Every Year; ஒவ்வோராண்டும் ஒவ்வொரு ரோட்டரியனும்) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டார். சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒவ்வோராண்டும் TRFக்கு நன்கொடையளிக்க வேண்டும் என்று இந்தத் திட்டம் ஊக்குவிக்கிறது. இந்த ஆண்டு நாங்கள் 131x100 அல்லது ரூ.13,100ஐ TRFக்கு நன்கொடையாக அளிப்போம்; இதற்கான ஓர் அடையாளக் காசோலையை இந்த நேரத்தில் எங்கள் DG அனிஷ் ஷா அவர்களிடம் வழங்கினோம்.''

மறுநாள், ஒரு மிகச் சிறந்த PR, பொதுத் தோற்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; இதில் ரோட்டரி சின்னங்களுடன் கூடிய நீல டி-ஷர்ட்கள், தொப்பிகளை அணிந்த 5,000 இளைஞர்கள் ஒரு மிகப்பெரிய சைக்ளத்தானில் பங்கேற்றார்கள். கடந்த 10 ஆண்டுகளாக நாங்கள் இதைச் செய்துவருகிறோம். இதன்மூலம், பசுமைப் பாவ்நகர் என்கிற ஒரு வலுவான, குறியீட்டுச் செய்தியை வழங்குகிறோம் என்றார் கோத்தாரி. இந்த மைல்கல்லைக் குறிக்கும் வகையில், தேவையுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு இச்சங்கம் 75 புதிய மிதிவண்டிகளை வழங்கியதாகத் தொடர்ந்து குறிப்பிட்டார்.



சங்கத்தலைவர் ராகேஷ் கனடா DG அனிஷ் ஷாவிடம் TRFயிற்கான காசோலை வழங்குகிறார்.

வடிவமைப்பு:
N கிருஷ்ணமூர்த்தி

# பெரிய திட்டங்களுடன் RC மெட்ராஸ் சவுத் 60 ஆண்டுகளை கொண்டாடுகிறது

கிரண் ஜெஹ்ரா

RC மெட்ராஸ் சவுத் (RCMS), RID 3232, அதன் வைர விழாவைக் கொண்டாடியது, 60வது ஆண்டு விழாவில் ரோட்டேரியன்கள், இன்டராக்டர்கள், அன்ஸ் மற்றும் அன்னெட்ஸின் வேடிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நிரம்பியிருந்தன. ஜூன் 30, 1960 அன்று பட்டயம் வழங்கப்பட்ட, சென்னையின் இரண்டாவது பழமையான கிளப்பான இது நான்கு ரோட்ட்ராக்ட் கிளப்புகள் மற்றும் ஐந்து இன்டராக்ட் கிளப்புகளுக்கு நிதியுதவி செய்துள்ளது.



**இடதிலிருந்து:** PDG *ராமகிருஷ்ண ராஜா,* TRF *அறங்காவலர் தலைவர் தேர்வு* K R *ரவீந்திரன்,* Rtn R N *வீரப்பன் மற்றும்* PRID P T *பிரபாகர்.*

'உங்கள் உறுப்பினர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப் பணிப்பு மூலம் இந்த மைல்கல்லை நீங்கள் அடைந்துள்ளீர்கள். நீங்கள் கொண்டாடும் போது, அடுத்த 60ஐ உருவாக்குவதற்கான உங்கள் முயற்சிகளில் கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று TRF அறங்காவலர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட K R ரவீந்திரன் கூறினார்.

ரவீந்திரன் கிளப் உறுப்பினர் S R மது தொகுத்த சிறப்பு வைர விழா புத்தகத்தை வெளியிட்டார். DG G சந்திரமோகன் PDG ராமகிருஷ்ண ராஜாவுக்கு வழங்கப்பட்ட சிறப்பு விருதுக்கான மேற்கோளைப் படித்தார். DG கிளப்பை வாழ்த்தி, நீங்கள் ஒரு வலுவான கிளப். எந்தவொரு ரோட்டரி விஷயத்திலும் உங்கள் கிளப்பிடம் கருத்து கேட்ட போதெல்லாம், மாறுபட்ட கருத்துக்கள் வந்ததேயில்லை. உங்களிடம் இருக்கும் ஒத்த கருத்து இன்று மிகவும் அரிதானதாகும். சிறந்த பணியைத் தொடருங்கள் என்றார்.



*அறங்காவலர் தலைவர் தேர்வு* KR *ரவீந்திரன் மற்றும்* DGE S *முத்துப்பழனியப்பன்.*

ஆஸ்திரியா, நெதர்லாந்தில் இருந்து பத்து வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்காவின் RC பசடேனாவைச் சேர்ந்த ரோட்டேரியன்கள், கேரிங் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் திட்டத்தில் கிளப்புடன் கூட்டுசேர்ந்ததற்காக கௌரவிக்கப்பட்டனர். இந்த உலகளாவிய மானிய திட்டத்தின் கீழ், 2019ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகளாக பிறவி இதய நோயால் பாதிக்கப்பட்ட வறுமையிலுள்ள 225 குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

இந்த திட்டத்தைப் பாராட்டிய ரவீந்திரன், சேவையை முழு கவனம், நிபுணத்துவம், முழு மனதுடனும் அணுகும்போது ரோட்டரியால் என்ன செய்ய முடியும் என்பதையே

காட்டுகிறது என்றவர் கூட்டாண்மை மூலம் இன்னும் சாதிக்க முடியும் என்றும் கூறினார்.

கிளப்பின் தலைவர் M C ஸ்ரீகாந்த் TRF மற்றும் கூட்டாளர் கிளப்புகளின் முற்போக்கான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். அர்ப் பணிப்புடன் செயலாற்றும் எங்கள் உறுப்பினர்களுடன் உங்கள் ஆதரவும் சேர்ந்தால் பலருக்கு சேவை செய்யலாம் என்று நாங்கள் நம்புகிறோம் என்றார்.

கடந்த கால உறுப்பினர்களின் சொந்த, தொழில்சார்ந்த மற்றும் ரோட்டரி வாழ்க்கையை சிறப்பித்த ஆடியோ விஷுவல் வழியாக சிறப்பித்த பின் மூன்று தொகுதிகளாக மேடைக்கு அழைக்கப்பட்டனர். காலமான ரோட்டேரியன்ஸ்களின் அன்ஸ் அங்கீகரிக்கப்பட்டபோது துக்கம் கவ்வியது. குமரன் சிறப்புப் பள்ளியின் விரிவாக்கம், காட்டூரில் பெண்களுக்கான தையல் வகுப்புகள், கிளப்பின் தத்தெடுக்கப்பட்ட கிராமம் மற்றும் அதன் மழைநீர் சேகரிப்பு முயற்சி ஆகிய மைல்கல் திட்டங்கள் சிறப்பிக்கப்பட்டன.

PRID P T பிரபாகர், PDGக்கள் கிருஷ்ணன் V சாரி, P T ராம்குமார், G ஒளிவன்னன், ISAK நாசர், நடராஜன் நாகோஜி, C R ராஜு, மற்றும் DGE S முத்துபழனியப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.■



**இடதிலிருந்து:** *சங்கத்தலைவர் MC ஸ்ரீகாந்த், TRF அறங்காவலர் தலைவர் தேர்வு K R ரவீந்திரன், Rtn S R மது, DG G சந்திரமோகன் மற்றும் சங்கச் செயலாளர் S ரமேஷ்பாபு.*

# கை கொடுக்கும் கை

ரோட்டரி செய்திக்குழு



*இடதிலிருந்து: LN-4 முகாமில் RID பரத் பாண்ட்யா.*

RID 3100ன், RC மீரட் விராட், மீரட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மெகா LN–4 செயற்கை கை பொருத்துதல் முகாமில் விபத்து அல்லது பிறவிலிருந்தே கையை இழந்த சுமார் 250 பேருக்கு புரோஸ்டடிக் கைகள் பொருத்தப்பட்டன. முகாமுக்கு வருகை தந்த RID பரத் பாண்ட்யா ரோட்டரியினரை பாராட்டினார். மேலும் அவர்கள் இன்னும் பல பெரிய திட்டங்களை சமூகத்திற்கு செயல்படுத்துமாறு வலியுறுத்தினார்.

கிளப் தலைவர் சமீர் அகர்வால் உறுப்பினர்கள் நகரைச் சுற்றியுள்ள பயனாளிகளை அடையாளம் காண 10 மாதங்கள் உழைத்ததாகவும் புதிய “கையை” சரியான பயன்பாட்டிற்கு கொண்டு வர அவர்களுக்கு பயிற்சி அளித்தாகவும் கூறினார்.■



Wordsworld

# புத்தகங்களுக்குத் தடை எதற்கு?

சந்தியா ராவ்

*சில நூல்களால் பெரும் பிரச்னை உண்டாவது ஏன்? நாம் எதைக்கண்டு அஞ்சுகிறோம்?*

கொரோனா வைரஸ் விரைவாகப் பரவிக் கொண்டிருப்பதை எண்ணி உலகெங்குமுள்ள அரசுகள் அச்சத்துடன் எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கும்போது, பயணங்கள் தடை செய்யப்பட்டுள்ளன; கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு நீண்ட விடுமுறைகள் அறிவிக்கப் பட்டுள்ளன, சிலர் தேர்வுகளைத் தள்ளிப்போட்டுள்ளார்கள்; கருத் தரங்குகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ஆனால், இதிலும் ஒரு நன்மை உள்ளது: இதனால் கார்பன் கால்த டங்கள் பெருமளவு குறைகின்றன; ஏனெனில், சும்மா உட்கார்ந்திருப்பது தான் இதற்கு மிகச்சிறந்த தீர்வாகத் தோன்றுகிறது.

அப்படிச் சும்மா உட்கார்ந்திருக்கும் போதெல்லாம், வீட்டிலிருந்து வேலை செய்வதற்கும் சமூக ஊடகங்களைக் கூடுதலாகக் காண்பதற்கும் நடுவில் நம்மில் சிலர் புத்தகங்களின்பக்கம் திரும்புவோம் என்று நான் எப்போதும் நம்புகிறேன்: நீங்கள் எப்போதும் படிக்க விரும்பிய, ஆனால், நேரம் கிடைக்காத அந்த ஒரு புத்தகத்தைக் கையில் எடுங்களேன்!

படிக்கும் பழக்கத்தை மீட்பதற்கு நல்ல நேரம் இது. பலவிதமான தலைப்புகளில் ஏகப்பட்ட சுவையான விஷயங்கள் பதிப்பிக்கப்படுகின்றன; ஆகவே, உங்களுக்கு ஆர்வமூட்டும் ஒரு புத்தகம் கிடைப்பது உறுதி.

முதன்முறையாக ஹாரி பாட்டர் அறிமுகமானபோது, உலகெங்கும் மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. இதற்கு மிகச்சிறந்த சந்தைப்படுத்தல் வியூகங்கள் ஒரு காரணம், அதே அளவு முக்கியமான இன்னொரு காரணம், J K ரௌலிங்கின் கவர்ந்திழுக்கும் எழுத்து. இதற்குமுன் எப்போதும் எதையும் படித்திருக் காதவர்களெல்லாம், “பெயர் சொல்ல வேண்டிய இடங்களில்” இந்த வரிசைப் புத்தகங்களின் குண்டான-மேலும் குண்டான-அதற்கு மேலும் குண்டான பிரதிகளைக் கையில் பிடித்துக்கொண்டு தோன்றத்தொடங்கினார்கள். அந்த வெறி இப்போது இல்லை; ஆனாலும் பாட புத்தகங்கள் தொடர்ந்து நன்கு விற்கிறது. இருந்தபோதும்...




ஆம், இத்தனை இருந்தபோதும், அமெரிக்காவின் சில பள்ளிகளில் ஹாரி பாட்டர் புத்தகங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன; காரணம், அவை மாய மந்திரங்களை முன் வைக்கின்றனவாம்.

ஆனால், அவர்கள் சொல்வது உண்மை தான். ஏனெனில், இந்தப் புத்தகங்களே மாய மந்திரப் பள்ளியில் பயிலும் குழந்தைகளைப் பற்றியவைதாம். இந்தப் புத்தகத்தைச் சில பள்ளிகள், அவ்வளவு ஏன், நாடுகளே தடை செய்திருக்கின்றன என்றால், அதற்கான காரணங்கள் மதம் சார்ந்த பிடிவாதங்களில் வேரூன்றியுள்ளன.

இந்தத் தொடர் நூல்கள் மாயம், கற்பனை உலகம்பற்றியவை, அமானுஷ்யம், சாத்தானிய வழிபாடுகளைப்பற்றியவை இல்லை என்கிற வாதத்தை இவர்கள் ஏற்க மறுக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, UAEல் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இந்தப் புத்தகங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. எனினும், இவை புத்தகக் கடைகளில் கிடைக்கின்றன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. USல் சில தேவாலயங்கள், பல்கேரியா, கிரேக்கத்தைச் சேர்ந்த சில பகுதிகள் இந்தப் புத்தகங்களுக்குத் தீவிரமாகக் கண்டனம் தெரிவிக்கின்றன.

தி சாத்தானிக் இறைதூதரைத் தாக்கும்படி அமைந்துள்ளது என்ற அடிப்படையில், அந்நூலின் ஆசிரியர் சல்மான் ரஷ்டியைக் கொல்லும்படி ஈரானின் அயத்துல்லா கொமேனி அறிவிக்க, சல்மான் ரஷ்டி சுமார் பத்தாண்டுகளுக்கு ஒளிந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அடுத்து வந்த அரசாங்கத்தின் அதிபர் கடாமி, தங்கள் அரசு ரஷ்டியைக் கொல்லுவதை ஆதரிக்காது என்று அறிவித்தபோது, மறைந்திருந்த இடத்திலிருந்து வெளியில் வந்தார் ரஷ்டி. அப்போது அவர் கையில் “ஜோசஃப் அன்டன்” என்ற புதிய நூலின் எழுத்துப்பிரதி இருந்தது.

யார் அந்த ஜோசஃப் அன்டன்?

“சிறைவாச”த்தின்போது சல்மான் ரஷ்டி சூட்டிக்கொண்டிருந்த பெயர்தான் அது!




சில மாதங்களுக்குமுன்னால், மிருதங்கங்களைத் தயாரிக்கும் கலைஞர்களைப்பற்றிச் செவ்வியல் இசைக்கலைஞர் T M கிருஷ்ணா எழுதிய "செபாஸ்டியன் சன்ஸ்" என்ற புத்தகம் வெளியானது. இதனால், புத்தகங்கள் தொடர்பான ஒரு சமீபத்திய சர்ச்சை தொடங்கியது.

இந்நூலின் அதிகாரப்பூர்வமான அறிமுக விழா, சென்னையின் மதிப்புமிக்க கலாக்ஷேத்ரா அறக் கட்டளையில் நடைபெறவிருந்தது. ஆனால், இந்த நிகழ்ச்சிக்கான அனுமதியை கலாக்ஷேத்ரா அறக் கட்டளை நிர்வாகிகள் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். காரணம், இந்நூலில் சாதிபற்றி எழுப்பப்பட்டுள்ள கேள்விகள் அவர்களுக்கு வசதியற்ற உணர்வை உண்டாக்கிவிட்டன.

சாதிப் பாரபட்சம் இன்னும் உள்ளது, குறிப்பாக, செவ்வியல் கலைத்துறையில் மிகுதியாகவே உள்ளது; ஆனால் நாமோ, நெருப்புக் கோழியைப் போல் தரையில் தலையைப் புதைத்துக் கொள்ளப் போகிறோம், இதையெல்லாம் மனத்தில் வைத்துப் பார்க்கும்போது செபாஸ்டியன் சன்ஸால் பிரச்னை எழுவது இயல்புதான்.

scroll.inல் ஸ்ரீரீஜன் தேஷ்பாண்டே எழுதிய விமர்சனத்தில், இந்த சர்ச்சையின் முக்கிய அம்சத்தைச் சுருக்கமாக விவரிக்கிறார். அவர் எழுதுகிறார்: கர்நாடகச் செவ்வியல் இசையின் அடிப்படைத் தாளக் கருவியான மிருதங்கத்தை ஆராய்வதன்மூலம், சாதிப் பாரபட்சம் எப்படி இயங்குகிறது என்பதை வெளிப்படையாக ஆராயும் நூல் செபாஸ்டியன் சன்ஸ். இந்நூலிலுள்ள பன்னிரண்டு அத்தியாயங்களில், மிருதங்கம் செய்யத் தேவையான தோல் வேலை, மர வேலை, கல் வேலை ஆகியவை விரிவாகவும் விளக்கமாகவும் வழங்கப்படுகின்றன, தொனித் தூய்மை மற்றும் அழகியல் மேன்மைபற்றிய விவாதங்கள் நிகழ்கின்றன; ஆந்திரப்பிரதேசம் மற்றும் கேரளாவைச் சேர்ந்த மிருதங்கம் உருவாக்குநர்களுடைய மாற்றுக் கதைகளில் தொடங்கி, இந்தத் தொழிலில் ஈடுபடும் சில பெண் மிருதங்கம் உருவாக்குநர்களுடைய மாற்று முயற்சிகள்வரை பலவும் பேசப்படுகின்றன; இந்தக் குறிப்புகள் ஒவ்வொன்றிலும், சாதி என்னும் தோற்றம் உறுதியாகப் படிந்துள்ளது, ஒவ்வொரு படிநிலையிலும் காணப்படுகிறது.

இங்கு விவரிக்கப்பட்டுள்ள கதைகள், குறிப்புகள் மகிழ்வூட்டு பவை; இவை சமூக வரலாற்றின் சிந்தனைப் பதிவுகளாக அமைகின்றன. இவை சிறந்த மிருதங்க இசைக் கலைஞர்கள் (பொதுவாகப் பிராமணர்கள்) மற்றும் மிருதங்கம் உருவாக்கும் சிறந்த கலைஞர்கள் (இவர்களில் பலர் தலித் கிறிஸ்துவர் கள்) இடையிலான உறவின்கீழ் படிந்திருக்கும் சிக்கலான சமூக அமைப்பு வலையை இவை வெளிப்படுத்துகின்றன.

தேஷ்பாண்டே சுட்டிக் காட்டுவது போல், இதுபோன்ற ஒரு பணி, நம் பழக்கவழக்கங்களின் அழகியலைப்பற்றிய நம் புரிந்து கொள்ளலை மீண்டும் மதிப்பிட நம்மை ஊக்கப்படுத்துகிறது, அழகுபற்றிய பாரம்பரியச் சிந்தனைகள் மனித முயற்சியினால் விளைந்தவை, ஆகவே, சாதி, தரநிலை மற்றும் பாலினச் சிந்தனைகளால் இவை வடிவமைக்கப்பட்டன, தொடர்ந்து வடிவமைக்கப்படுகின்றன என்று நமக்கு நினைவுபடுத்துகிறது.




ஜார்ஜ் ஆர்வெல் எழுதிய டிஸ்டோபியப் படைப்பான அனிமல் ஃபார்ம் (1945) ஜெர்மனியில் நேசப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது, 1946ல் யூகோஸ்லாவியாவால், 1991ல் கென்யாவால், மிகச் சமீபத்தில் 2002ல் UAEஆல் தடைசெய்யப்பட்டது.

ஆலிஸ் வாக்கரின் தி கலர் பர்ப்பிள், பாலியல்ரீதியில் வெளிப் படையானதாகவும், புண்படுத்துகிற மொழியைக் கொண்டதாகவும் கருதப்பட்டது.

தஸ்லிமா நஸ்ரினின் எழுத்துகளுக் காக அவர் நாடுகடத்தப்பட்டார்.

எல்லாரும் நன்கறிந்த இன்னொரு நூல், நடுத்தர வயது மனிதர் ஒருவர் 12-வயதான ஒருவர்மீது மிகுந்த ஆர்வம் கொள்கிற கதையைச் சொன்ன வ்ளாதிமிர் நபகோவ் எழுதிய லோலிடா (1955). இன்றைக்கு இந்த நூல் ஒரு செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது; ஆனால் அப்போது, ஃபிரான்ஸ், கனடா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, அர்ஜென்டினா உள்ளிட்ட பல நாடு களில் "ஆபாசமான கதை" என்று தடைசெய்யப்பட்டது.

நிறைவாகப் பார்த்தால், புத்தகங்கள் தடைசெய்யபடுவதற்கான காரணங்கள் அரசியல் சார்ந்தவை, அதாவது, மக்களைத் தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க விரும்பும் அரசியல் அமைப்புகளுக்கு, அந்தப் புத்தகங்கள் சொல்லும் விஷயங்கள் மக்கள்மீது தாக்கம் உண்டாக்கும் என்று ஏற்படும் அச்சத்தால் நிகழ்கிறவை. இது ஒரு ஃபாசிஸ்ட் மனநிலை; இந்தக் காரணத் தால், புத்தகங்களின்மீதான தடையை நாம் நிராகரிக்கவேண்டும்.

படிப்பதா, வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பது நம் அடிப்படை உரிமை. ஆனால், எதைப் படிப்பது, எதைப் படிக்கக் கூடாது என்று நமக்குச் சொல்லும் உரிமை யாருக்கும் இல்லை.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ரோட்டரி கிளப்புகள் திட்டங்களை அதிகரிக்க வேண்டும்: RIDN வெங்கடேஷ்




V முத்துக்குமரன்

ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டரி கிளப்புகள் தங்கள் பார்வை, கனவுகள் மற்றும் திட்ட அளவை உலகளாவிய திட்டங்களை நோக்கி பார்க்க வேண்டும் என்று RIDN A S வெங்கடேஷ் RID 3232ன் 25வது சார்டர் நைட் கொண்டாட்டத்தில் கூறினார்.'' மனநிலை மாற்றத் தேவையுடன் காலத்திற்கேற்ப வித்தியாசமான சிந்தனைகளும் தேவை. வாராந்திர கிளப் கூட்டங்கள், நெட்வொர்க்கிங் மற்றும் சிறிய, தொண்டு நடவடிக்கைகள் இளம் தொழில் வல்லுநர்களை ஒரு கிளப்பில் சேர தூண்டாது, என்றார்.

கிளப் கூட்டங்கள் சுவையாக இல்லாவிடில் சோர்வு ஏற்படும். நம்மிடம் கடல்கடந்த திட்டங்களை எதிர்பார்க்கும் ஒரு நிச்சயமான திட்டம் இருக்க வேண்டும். RC கிண்டி பங்களாதேஷ் அல்லது நேபாளத்தில் முன்னணி பங்காளராக திட்டங்களை எடுக்க முடியும்,

**இடதிலிருந்து:** PDGs *கிருஷ்ணன்* V *சாரி,* A *சுப்ரமணியன்,* RIDN A S *வெங்கடேஷ்,* PDG A *சம்பத்,* Rtn *சதீஷ்குமார் மற்றும்* RC *கிண்டி தலைவர்* R *சிவராமன் சங்கத்தின்* 25 *ஆண்டு கொண்டாட்டத்தில்.*






புகைப்படங்கள்: V முத்துகுமரன்

அடுத்த 25 ஆண்டுகளில் சிறந்த பணி யாற்றயதாக பெருமை கொள்ளலாம் என்றும் அவர் விளக்கினார். மருத்துவ முகாம்கள், வகுப்பறைகளை புதுப்பிப்பது என்பதற்கு பதிலாக, புதிய பள்ளி, மருத்துவமனை என்று சிந்தியுங்கள் என்று ரோட்டரியர்களுக்கு அறிவுறுத்தினார்.

25 ஆண்டுகள் நிறைவை கொண்டாடும் போது கொட்டிவாக்கம் பல் மையம் மற்றும் ஹோய்னா அனாதை இல்லம் ஆகியவற்றை செயலாக்கியது பெருமைக்குரிய விஷயம் என்றார்.

40ஐ எட்டியபோது, எதிர்காலம் பற்றிய சிந்தனை வந்ததாக கூறிய RIDN என் மனைவி வினிதா பாலம் மேசையின் வடிவத்தில் ஓர் அழகான கேக்கை அளித்து என்னை ஊக்கப்படுத்தினார். அவர் என்னிடம்: உங்களுக்கு வயதாகவில்லை, ஆனால் தெளிவாகிறீர்கள் என்றார்.

இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரோட்டரி இந்தியா வழங்கும் ஷெல்டர் கிட்களை விநியோகிப்பதில் முன்னிலை வகிக்குமாறு கிளப்பை வெங்கடேஷ் வலியுறுத்தினார்.'' தென்னிந்தியாவில் 4–5 இடங்களைத் தேர்வுசெய்து ஷெல்டர்களை சேமித்தால் பேரழிவுக்கு பின் எந்த தாமதமில்லாமல் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கலாம்,'' என்றார். சேவைக்காக RCG ரத்னா விருதை மக்கள் சிந்தனை பேரவைத் தலைவர் டி ஸ்டாலின் குணசேகர னுக்கு, வெங்கடேஷ் வழங்கினார். விருது பெற்றவர் ஒரு பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் மற்றும்'' சமூகத்தில் முற்போக்கான மாற்ற-முகவராக'' இருப்பதற்காக தேசிய மற்றும் உலகளாவிய கௌரவங்களைப் பெற்றவர்.

சார்ட்டர் நைட்டில் TRFக்கு கிளப், 12,000 பங்களித்தது, ஆண்டுக்கான 50,000 இலக்குக்கு எதிராக மொத்த பங்களிப்புகளை இதுவரை 20,000ஆக கொண்டு சென்றது. இந்த நிகழ்ச்சியில் சார்டர் உறுப்பினர்களுக்கு சிறப்பு காலர் மற்றும் உருவப்பட ஸ்கெட்ச் வழங்கப்பட்டது.

ஜனவரி 10, 1995ல் உருவாக்கப் பட்ட, RC கிண்டியில் 40 சார்டர் உறுப்பினர்களும் ஏ ராமானுஜம் சார்டர் பிரிசிடெண்டாகவும் இருந்தனர். பெரும்பாலோர் கிண்டி பொறியியல் கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் கிண்டி தொழில் துறை தோட்டத்தில் அலுவலகங்கள் அல்லது தொழிற்சாலைகளை அமைத்திருந்தனர். கிளப்பின் தலைவர் R சிவராமன் மைல்கல் திட்டங்களான - மாத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி, ஆலத்தூர் கிராமத்தில் உள்ள ஒரு சமூக மருத்துவமனை மற்றும் சங்கரா நேத்ராலய கண் மருத்துவமனையின் உலகளாவிய மானிய திட்டம் குறித்து விளக்கமளித்தார்.

சராசரியாக கிளப் 100 உறுப்பினர்களுடன் ஆண்டுக்கு 14 திட்டங்களைச் செய்து வருகிறது. நான்கு ரோட்டராக்ட் மற்றும் நான்கு இன்டராக்ட் கிளப்புகளுக்கு நிதியுதவி அளித்துள்ளது. RID 3300 மலேசிய கிளப்களான RC அலார் ஸ்டாரைச் சேர்ந்த R ஜனார்த்தனா நாயுடு மனைவி மகேஸ்வரி முத்தையாவுடனும் RC பந்தர் சுங்கை பெடானியிலிருந்து Dr S ராஜேஷும் சிறப்பு விருந்தினர்களாக வந்தனர். வெள்ளி விழாவைக் குறிக்கும் வகையில் ஒரு நினைவு அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டது. DG G சந்திரமோகன், DGE S முத்துபழனியப்பன், PDGக்கள் ISAK நாசர் மற்றும் நடராஜன் நாகோஜி கிளப் தலைவர் சிவராமனால் பாராட்டப்பட்டனர்.■

# உங்கள் உண்மையில் ஓய்வெடுங்கள்

பரத் மற்றும் ஷாலன் சாவூர்

“நான் எனக்கு உண்மையாக வாழ்கிறேன் என்று எப்படி அறிந்து கொள்வது?” என்று முனிவரிடம் கேட்கப்பட்டது” நீங்கள் அதைப் பற்றி கவலையின்றி இருக்கும்போது என்றார் முனிவார். உங்கள் உண்மையை நீங்கள் அறிய விரும்பினால், நான் எதைப் பற்றி நிதானமாக இருக்கிறேன்? எனக்கு நிம்மதியான உணர்வை வழங்குவது எது? உங்களை மகிழ்ச்சியாக்கும் பொழுது போக்கு, செயல் உங்கள் பணிகளை எளிதாவதோடு பிரச்சினைகளை சமாளிக்கும் திறனையும் அளிக்கிறது.

உங்கள் பொழுதுபோக்கு உங்கள் பிரார்த்தனை அல்லது தியானம் ஆகும். இது வேறு வழியிலும் இருக்கலாம். உங்கள் பிரார்த்தனையே உங்கள் பொழுதுபோக்காக இருக்கலாம். பொழுதுபோக்கு, ஆற்றல்களை தெளிவுடன் தூண்டுவதோடு, சிறப்பாக வெளிப்படுத்தவும் உதவுகிறது. ஒரு பொழுதுபோக்கில் ஈடுபடும்போது, உங்களுள்ளும் புறமும் அமைதியாகயிருக்கிறது. இது மரண அமைதி அல்ல, மாறாக வாழ்க்கையின் அமைதி ஆகும். இந்த அமைதியை உங்கள் தலையின் பின்புறத்தில் ஒரு இனிமையான உணர்வாக நீங்கள் உணர முடியும்.

இது வடிகட்டுதல் போன்றது. அனைத்து ஆற்றல்களும் வடிகட்டப்பட்டு தெளிவாகவும் வெளிப்படையாகவுமாகின்றன. நீங்கள் ஒரு குழந்தையைப் போல தூய்மையாகி விடுகிறீர்கள். குழந்தையின் கண்களை பார்க்கும் போது தெரியும் ஏற்கும் தன்மை அதே குழந்தை வேறு புறம் திரும்பும் போது நீங்கள் வெறுமையை உணருவீர்கள். ஒரு குழந்தையிடம் நிகழ்ச்சி நிரல் இல்லாததால் அது தூய்மையாகயிருக்கிறது. இதேபோல், உங்கள் பொழுதுபோக்கோடு எந்த நிகழ்ச்சி நிரலோ வணிக ரீதியான பரிசீலனைகளோ, புகழ் அதிர்ஷ்டம் போன்ற எதிர்பார்ப்புகளோ இல்லாதபோது, நீங்கள் மற்றவர்களை ஆசீர்வதிக்கவே விரும்புகிறீர்கள்.

ஒரு பொழுதுபோக்கு உங்கள் மனதை-கோபம், பொறுமையின்மை பதற்றம் ஆகியவற்றிலிருந்து விலக்கிவைக்கிறது. நீங்கள் பொழுது போக்கில் மூழ்கிய நிலையிருக்கும் போது உங்களை தூஷிப்பவரின் குரல் கூட மிக மென்மையாகவே ஒலிக்கும். நீங்கள் எதற்கும் காத்திருக்காத ஒரு மன நிலையில் இருக்கும் போது உங்கள் மனம் ஆனந்தமான நிலையில் நிகழ்காலத்தில் இருக்கிறது. பொழுதுபோக்கில், மனம் திருப்தியான நிலையில் இருப்பதால் அங்கே நம் வாழ்க்கை தரத்தை குறைக்கும் எதிர்மறை சிந்தனைக்கு இடமேயில்லை.

எப்போதும் உங்கள் வாழ்வின் தரத்தை குறைக்காதீர்கள். கண் சிமிட்டலில் அதைக் குறைப்பது மிகவும் எளிதானது. சுடு சொல்,



சுட்டெரிக்கும் பார்வை, எதிர்மறை விமர்சனம் நம் வாழ்வின் தரத்தை குறைத்து விடும். வாழ்வின் தரத்தை ஏற்றுவதில் முனைப்பாகுங்கள் நம் உடலில் உள்ள அனைத்து உயிரணுக்களின் நடத்தையையும் மூளை கட்டுப்படுத்துகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். மூளை ஒரு அற்புதமான ஒருங்கிணைப்பாளர் ஆகும். குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு விஷயம் : நம் உடலின் அனைத்து செல்களிலும் மூளையை போன்ற ரிசெப்டர்களே உள்ளன. அதாவது நமது முழு உடலும் கிட்டத் தட்ட ஒரு மூளை போன்றதுதான். உடலில் உள்ள ஒரு நோயைக் குணப் படுத்த நேர்மறையான எண்ணங்கள், நம்பிக்கைகளை உருவாக்க நம் மூளையை நாம் உணர்வுபூர்வமாகப் பயன்படுத்தலாம் என்றும் ஆராய்ச்சி காட்டுகிறது.

**அழிவுகரமான மற்றும் ஆக்கபூர்வமான குறுக்கீடு.** உங்கள் ஆற்றலை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள். தொடர்ந்து புகார் அளிக்கும் ஒரு நபருடன் நீங்கள் நேரத்தை செலவிட்டு அவர் சென்றதும் சக்தியை இழந்தது போல் உணர்கிறீர்களா? காரணம், அமைதியான ஏரியில் வீசப் பட்ட கூழாங்கற்களைப் போல உங்கள் முழு மனதின் செல்லுலார் அமைப்பும் 'அழிவுகரமான குறுக்கீட்டை' அனுபவித்தது. ஆகவே, உங்கள் இயல்பான அமைதியை சீர் குலைக்கும் மோசமான அதிர்வுகளை உருவாக்கும் நபர்களைத் தவிர்ப்பதே நல்லது. இல்லையெனில் நீங்களும் மற்ற வர்களை குற்றம் சாட்டும் செயல்களில் ஈடுபடுவீர்கள். அத்தகையவர்களை தவிர்க்க வழியேயில்லை என்றால், அவர்களிடம் கேள்விகள் கேட்காதீர்கள். ஒரு எளிய நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? கேள்விக்குக் கூட புகார் பட்டியல் பதிலாக கிடைக்கும். அவர்களை முந்திக் கொண்டு நீங்களே இனிமையான விஷயங்களை பேசுங்கள். அவர்கள் வாழ்விலும் நிகழ்ந்த நல்ல விஷயத்தை பற்றி பேச உற்சாகமூட்டுங்கள். இதன் விளைவு அழகானதாக இருக்கும். இந்த அணுகுமுறை உளவியலாளர்களால் 'ஆக்கபூர்வமான குறுக்கீடு' என்று அழைக்கப்படுகிறது.

**நேர்மறை சமூக ஊடகங்கள்.** அழிவுகரமான மற்றும் ஆக்கபூர்வமான குறுக்கிடும் குணங்களைக் கொண்டது சமூக ஊடகம். எதிர்மறையான விஷயத்தை மற்றவருக்கு அனுப்பு வதற்கு முன், உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்: இது மனதை அமைதியாக்குகிறதா? இல்லை யென்றால் நீக்கிவிடுங்கள். மோசமானவற்றை படிக்காமலேயே நீக்கிவிடுங்கள் அவைகள் உங்களை களங்கப்படுத்த ஏன் அனுமதிக்க வேண்டும்? பலவீனமானவர்கள் பழிவாங்குகிறார்கள். பலமானவர்கள் மறக்கிறார்கள் புத்திசாலிகள் ஒதுக் குகிறார்கள். ஒதுக்குங்கள்! உங்கள் நிம்மதியை குலைக்கும் எந்த விஷயமும் தவறானதுதான். ஆம் அதிக விலை உயர்ந்ததுதான்.

சமூக ஊடகத்தை மக்களுடன் உறவை வளர்க்க பயன்படுத்துங்கள். இது பழைய டைரி முறையை மாற்றியுள்ளது ஆனால் பல குறைகளை உடையதாக இருக்கிறது. இதில் மகிழ்ச்சி, கண்ணீர், வருத்தம், கோபம் எல்லாம் கலந்துள்ளன. நிச்சயமாக இது தவறாக பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் அதிலிருந்தாலும் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். அது உங்கள் சொந்த உறவுகளை பாழ் செய்ய அனுமதிக்காதீர்கள். உங்கள் மொபைல் ஃபோனை ஒதுக்கிவிட்டு நீங்கள் நேசிக்கும் உங்களை மதிக்கும் நபருடன் நேரத்தை செலவிடுங்கள். உங்கள் மீதும் உங்களை சுற்றி யுள்ளவர்கள் மீதும் அன்புடன் இருப்பதைவிட மனதை இலகுவாக்கும் விஷயம் எதுவுமில்லை. உங்களை நீங்கள் நேசிக்காத நாட்களில் உங்களை நேசிப்பவருடன் இருங்கள் என்றார் புத்தர். உங்களை கணிக்காமல் நேசிக்கும் நபருடன் இருங்கள்.

இறுதியாக வாழ்க்கையின் அர்த்தமற்ற வேகத்தை குறைப்பது மனதை இலகுவாக்கும். பல வேலைகளை செய்பவர்கள் எப்போதும் அடுத்தடுத்து வேலை பற்றி சிந்திப்பதால் அமைதியாக இருப்பதில்லை. இவ்வாறு அவசரப்படுவதால் எந்த ஒரு விஷயத்தையும் மனத்தில் இயல்பாக வளர இவர்கள் விடுவதில்லை. பல செய்கைகள் தேவையற்றவை. இது என்னை ரிலெக்ஸ் செய்கிறதா என்ற கேள்வியை கூட கேட்க விடுவதில்லை. இது எனக்கு உதவுகிறதா? குறைந்தவற்றை செய்தாலும் சிறப்பாக செய்யுங்கள் என்றார் எக்கார்ட் டோல். உங்கள் மூலம் இந்த உலகில் ஒரு புத்திசாலித்தனம் வரட்டும்.

வாழ்க்கையின் அடித்தளமே அசைவுதான். அதே நேரம் அந்த அசை விலிருந்து ஓய்வும் தேவையாகும். ஓய்வளிக்கும் பழக்கத்தை துவங்குங்கள்: அமைதியாக அமர்ந்து உங்களுக்குள் ஒரு திருப்தியை உணருங்கள். அன்பின் அரவணைப்பில் அமைதியாக இருங்கள். சுதந்திர தனமாக உணருங்கள். கருணையில் அமைதியாக இருங்கள். உறுதியின் கரங்களில் அமைதியாக உறங்குங்கள். வாழ்க்கை நதி ஓடுகையில் உங்களுக் குள் அமைதியை உணருங்கள்.



கட்டுரை ஆசிரியர்கள்
இருவரும் Fitness for Life
மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine
என்ற ஆங்கில நூல்களின்
எழுத்தாளர்கள்.

# RI தெற்காசியா அலுவலக அறிவிப்பு

### புதிய நிதி மேலாண்மை அமைப்பு

TRF (இந்தியா) உட்பட RIன் 2020ல் புதிய நிதி மேலாண்மை முறையின் கீழ் RF(I) கணக்கிலிருந்து பணத்திலிருந்து திரட்டப்பட்ட தொகை ஏற்றம் அடிப்படையில் கணக்கியல் மாற்றமும் மானியங்கள், அவற்றின் பயன்பாடு மற்றும் வருமானம் ஆகியவற்றை கணக்கிடும் விதத்திலும் மாற்றம் ஏற்படும்.

புதிய அமைப்பின் கீழ், தற்போதுள்ள மானியங்களை செயல் படுத்தும் அனைத்து கிளப்களும் கொடுக்கப்பட்ட தேதிகளுக்குள் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்:

1. மானியம் தொடங்கியதிலிருந்து மார்ச் 31, 2020 வரைக்கான மானிய கணக்கின் வங்கி, சான்றளிக்கப்பட்ட/அச்சிடப்பட்ட பதிப்பு, ஏப்ரல் 20,2020ற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
2. மானிய வங்கி கணக்கு பல மானியங்களுக்கு பயன்படுத்தப் பட்டால், 2020 ஏப்ரல் 20க்குள் மேற்கண்ட வங்கி அறிக்கைகளுடன் மானிய வாரியாக ரீகன்சிலியேஷன்.
3. ஆன்லைன் அறிக்கை www.rotary.org வழியாக ஆன்லைனில் மே 31, 2020க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
4. சான்றளிக்கப்பட்ட பயன்பாட்டு சான்றிதழ், மானியம் வாரியாக ரசீதுகள் மற்றும் கொடுப்பனவு அறிக்கை மற்றும் 2020 மே 31க்குள் இடைக்கால அறிக்கை.

தகவல் roy.john@rotary.orgல் ராய் ஜானுக்கு அனுப்பப்படலாம் அல்லது 011-42250146ஐ அணுகலாம்.

### RF(I)க்கு எவ்வாறு பங்களிப்பது?

இந்தியாவில் நன்கொடையாளர் களிடமிருந்து பங்களிப்புகளை TRF சார்பாக RF(I) பெறுகிறது. காசோலை/வங்கி வரைவு/NEFT/RTGS அல்லது நேரடியாக ரோட்டரி வலைத்தளம் மூலம் பங்களிப்பு செய்யலாம். RF(I)க்கான அனைத்து பங்களிப்புகளும் வருமான வரிச் சட்டம், 1961 இன் 80G பிரிவின் கீழ் 50 சதவீத விலக்குக்கு தகுதியானவை.

### பங்களிப்புகளை மறு வகைப்படுத்து வதற்கான TRF வழிகாட்டுதல்கள்

எந்தவொரு ரோட்டரி அறக்கட்டளை நிதி, திட்டம் அல்லது திட்டத்திலிருந்து வேறு எந்த நிதி, திட்டம் அல்லது திட்டத்திற்கு முந்தைய ஆண்டு பங்களிப்பை மறு வகைப்படுத்து வதற்கான கோரிக்கைகளை அந்த நிதியாண்டு மூடப்பட்டதைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்ள முடியாது மற்றும் செயலாக்க முடியாத, இதற்கு பொருள் சார்ந்த செயலக நிர்வாகம் விதிவிலக்கு.

பரிசு பெறப்பட்ட ரசீது தேதியிலி ருந்து 90 நாட்களுக்குள் மறு வகைப்படுத்தலுக்கான கோரிக்கை பெறப்பட்டால் நடப்பு ஆண்டு கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயலாக்கப்படும்.

### முக்கிய நன்கொடையாளர் அங்கீகாரங்கள்

மற்றொரு நன்கொடையாளர் அல்லது நன்கொடையாளர்களின் ஆதரவு அல்லது ஒரு மாவட்டம், பிற நிறுவனம் அல்லது கார்ப்பரேட் ஆகியவற்றால் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ "பொருந்திய" பங்களிப்பின் அடிப்படையில் ஒரு நபருக்கு முக்கிய நன்கொடையாளர் அந்தஸ்தை வழங்க முடியாது. குடும்பத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனம் அல்லது குடும்ப அறக் கட்டளை அளித்த பங்களிப்பின் போது, அறக்கட்டளையின் உண்மையான உரிமையாளர் அல்லது அறங்காவலருக்கு வழங்கப்பட வேண்டும் என்று எழுத்துப்பூர்வமாக வழங்கலாம். ஒரு துணைவரின் பங்களிப்பை மட்டுமே ஒரு நபரின் முக்கிய நன்கொடையாளர் அங்கீகாரத்துடன் இணைக்க முடியும். நேரியல் சந்ததியினர் அல்லது மூதாதையர்களிடமிருந்து (தாத்தா, பாட்டி/பெற்றோர்/உடன்பிறப்புகள்/குழந்தைகள்) பங்களிப்பை இணைப்பது முக்கிய நன்கொடையாளர் அங்கீகாரத்திற்காக கணக்கிடப்படுவதில்லை.

வங்கி/டிமாண்டு டிராஃப்டுகளில் முன்னுரிமையாளரின் பெயரை சேர்க்க வேண்டும் அல்லது நன்கொடையாளர் பெயரை உறுதிப்படுத்தும் அட்டைக் குறிப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

### மார்க் ஆஃப் எக்ஸலன்ஸ்

ரோட்டரி கிளப்புகள் இப்போது கிளப்பின் பெயர் பக்கத்தில் தோன்றும் பட்சத்தில் தங்கள் சமூக ஊடக சேனல்களில் அடையாளமாக மார்க் ஆஃப் எக்ஸலன்ஸை பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றன. இது சமூக ஊடக சேனல்களில் கிளப்புகளுக்கு அதிக சீரான தன்மையைக் கொடுப்ப தோடு பயன்படுத்த எளிதானது.■

### RY 2019–20 AKS members from S Asia as on Feb 2020

| Zone | District | Donor Name | Recognition Level |
|---|---|---|---|
| 5 | 2982 | A R *நடேசன், பார்வதி* | Trustees Circle |
| 4 | 3011 | *சுரேஷ் ஜெயின், உஷா* | Chair's Circle |
| 7 | 3131 | *அனில் ஜானகிதாஸ் கோயல், நிருபமா* | Trustees Circle |
| 4 | 3141 | *பல்தேவ் அரோரா* | Trustees Circle |
| 4 | 3141 | *திலிப் கோபிகிசன் பிரமல்* | Trustees Circle |
| 4 | 3141 | *அஜய்* G *பிரமல், ஸ்வாதி* | Trustees Circle |
| 4 | 3141 | *நிரவ் ஷா, தேவினா* | Trustees Circle |
| 4 | 3141 | T N *சுப்ரமணியன், வித்யா* | Trustees Circle |

# On the racks




## Girl, Woman, Other

Author : **Bernardine Evaristo**
Publisher : **Penguin**
Pages : **457; ₹550**

This Winner of the *Man Booker Prize 2019*, this book follows the lives and struggles of 12 characters mostly women, who are black and British. They share their personal journeys through the last hundred years of the country. They're each looking for something — a shared past, an unexpected future, a place to call home, somewhere to fit in, a lover, a missed mother, a lost father, even just a touch of hope — so that they can tell the stories of their families, friends and lovers, across the country and through the years. Bernardine Evaristo brings to life generations of women and the people they have loved and unloved — the complexities of race, sex, gender, politics, friendship, love, fear and regret.




## Bahawalpur The Kingdom that Vanished

Author : **Anabel Loyd**
Publisher : **Penguin**
Pages : **280 ₹401**

In the seventy or so years since Independence, not much is written about the princely states which acceded to Pakistan. The name of the once great State of Bahawalpur is not well-remembered, unlike its peers over the border in Rajasthan.

This book is based on conversations with Salahuddin Abbasi, grandson of the last ruler of Bahawalpur who was born a year before Partition. Starting with the history of his state and his family, his memories throw light on the Bahawalpur princes from old records, letters, and the accounts of British travellers and civil servants. They also encompass a first-hand experience of the political life of Pakistan and Abbasi's relationships with its leaders.

The nation has had a troubled history and from the microcosm of Bahawalpur, this account helps to join the dots of a more coherent view of Pakistan and its future.




## Djinn Patrol on the Purple Line

Author : **Deepa Anappara**
Publisher : **Penguin**
Pages : **368; ₹384**

Nine-year-old Jai lives in a slum on the outskirts of an unnamed Indian city with his parents and older sister. In many ways he is an unremarkable boy: he watches reality cop shows on TV, attends the overcrowded government school, and tries to stay out of trouble. But when one of his classmates goes missing, Jai — taking inspiration from the TV programmes — turns amateur detective and vows to uncover the mystery of the disappearance. With the help of his two best friends — sensible Pari and diligent Faiz — they form a comical trio and set off on the city metro's purple line to investigate.

Journalist and author Deepa Anappara draws our attention to the horrors and tragedy of the terrifyingly enormous numbers of children who go missing in India. Through Jai's voice, she creates an endearing narrative that takes us through the dark underbelly of modern India.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S



**RC பாபநாசம்** — RID 2981
காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மைக்கப்பட்ட ஆளில்லா ஆனஸ்டி ஷாப்பில் மக்கள் பொருட்களை எடுத்து பணத்தை ஒரு பணப்பெட்டியில் வைத்து மீதம் ஏதேனும் இருந்தால் தாங்களாகவே எடுத்துக் கொள்ளலாம். இந்த வருடம் DG N மணிமாறன் இந்த கடையை கடந்த 20 ஆண்டுகளாக இச்சங்கம் நடத்துகிறது.

**RC திருச்சிராப்பள்ளி ஃபோர்ட்டு** — RID 3000
DDF மானியத்தின் கீழ் கிளப் ஏற்பாடு செய்துள்ள தையல் பயிற்சி முடித்த 20 ஏழை பெண்களுக்கு DG ஜமீர் பாஷா சான்றிதழ் வழங்கினார்.






**RC கோதாவரி பாலகோல்** — RID 3020
பாலகோல் மண்டலில் உள்ள கொண்டேரு கிராமத்தின் ஜில்லா பரிஷத் உயர்நிலைப் பள்ளியில் டிஜிட்டல் வகுப்பறையை மேம்படுத்த ரூ.1 லட்சம் செலவில் உள்ள கணினி அமைப்பு நன்கொடையாக வழங்கப்பட்டது. மாணவர்களின் தேவைகளுக்காக கிளப் இந்த ஆண்டு தத்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கு ரூ.8 லட்சத்திற்கும் அதிகமாக செலவிட்டுள்ளது.

**RC சோனிபட் மிட் டவுன்** — RID 3012
பட்லா மருத்துவமனையில் நடைபெற்ற பியுச்சர் ப்ரைட் அகாடமியின் குழந்தைகளுக்கான சுகாதார பரிசோதனை முகாமில் பொதுவான வியாதிகளுக்கு சோதிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



# செய்திகள்

**RC ஜல்கான் வெஸ்ட்** — RID 3030

பார்வை குறைபாடுள்ள குழந்தைகள் பாடப்புத்தகங்களைப் படிக்க ஆடியோவும் குரல் பதிவு செய்யும் வசதியையும் கொண்டுள்ள சாப்ட்வேருடன் கூடிய மூன்று கணினிகள் சாலிஸ்கானின் பார்வையற்றோர் பள்ளிக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.





**RC ஆல்வார்** — RID 3053

கிளப்பின் சுமந்தர் திட்டத்தின் கீழ், வயதானவர்கள், ஏழைகளுக்கு குளிர்காலத்தில் அவர்களைப் பாதுகாக்க போர்வைகள் கங்கா மந்திர் அருகிலிலுள்ள அங்கன்வாடியில் வழங்கப்பட்டன.





**RC ரூர்க்கி மிட் டவுன்** — RID 3080

மின்-ரிக்ஷாக்களில் ஒலி பிரதிபலிப்பான்களை இச்சங்கம் ஒட்டி போக்குவரத்து விழிப்புணர்வை உருவாக்கியது. முதல் இரண்டு கட்டங்களில், மின் வாகனங்களில் 100 பிரதிபலிப்பான்கள் ஒட்டப்பட்டன.




**RC சிர்ஹிந்த்** — RID 3090

கிளப் தலைவர் அஸ்வானி சிங், செயலாளர் ராஜேஷ் சோப்ரா மற்றும் Rtn கோபால் பிம்ப்ரா ஆகியோர் முன்னிலையில், DG ராஜீவ் கார்க்கின் தலைமையில் LED ஸ்மார்ட் டிவி அரசு பள்ளியான பதூர்ச்சி குர்துக்கு வழங்கப்பட்டது.

**RC தாத்ரா நகர் ஹவேலி** — RID 3060

கிளப் தலைவர் R K நாயர் துவக்கி வைக்க உறுப்பினர்கள் 17 இடங்களில் 33 ஏக்கர் பரப்பளவில் 10,000க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டனர்.

**RC ஜால்னா சென்ட்ரல்** — RID 3132

சங்கத்தினர் பார்வை குறையுற்றோர்களுக்கு காகிதப்பைகள் செய்ய கற்றுத்தந்தனர். DG சுஹாஸ் வைத்யா இந்த திட்டத்தை துவக்கி வைத்தார். பைகளில் ரோட்டரி வீல் மற்றும் சங்கத்தின் பெயரை அச்சிடப்பட்டுள்ளது.



**RC மும்பை எலிகன்ட்** — RID 3141

புதிதாகப் பிறந்த குறைந்த எடையுள்ள குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உடல் வெப்பநிலையைப் பராமரிக்க தாய்மார்கள் குழந்தைகளை மார்பில் கட்டிக்கொள்ள உதவுவதற்காக இருநூறு கங்காரு பைகளை ஜுஹுவின் கூப்பர் மருத்துவமனையில் உள்ள பிறந்த குழந்தை தீவிர சிகிச்சை பிரிவுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.



**RC பிச்சோலிம்** — RID 3170

340க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடையும் விதமாக பிச்சோலிம் ஆரம்ப ரோட்டரி பள்ளியில் நான்கு கழிப்பறை தொகுதிகள் மற்றும் ஹேண்ட்வாஷ் நிலையங்களை நிர்மாணிப்பதன் மூலம் கிளப் சுகாதார வசதியை மேம்படுத்தியுள்ளது.



**RC மங்களூர்** — RID 3181

போலாலியில் உள்ள ராமகிருஷ்ணா தபோவன வளாகத்தில் உள்ள ஷரதா பயிற்சி மையத்திற்கு ஒரு தையல் இயந்திரத்தை நன்கொடையாக கிளப் வழங்கியது.



**RC கோவைபுதூர்** — RID 3201

பிச்சநூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் புதுப்பிக்கப்பட்ட மூன்று வகுப்பறைகளை DG மாதவ் சந்திரன் திறந்து வைத்தார். குலத்துபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பாதுகாப்பான குடிநீர் பிரிவு அமைக்கப்பட்டது.



# செய்திகள்

**RC நாகர்கோயில் ஜெம்ஸ்** — RID 3212

போலியோ பாதிப்புக்குள்ளான சுகந்திக்கு ரூ.94,000 செலவில் ஒரு முச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. DGND இதயம் முத்து வாகனத்தை பயனாளியிடம் ஒப்படைத்தார்.



**RC வேலூர் காஸ்மோஸ்** — RID 3231

நகரத்தில் உள்ள அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனையில் குப்பைத்தொட்டிகள் மற்றும் அலமாரிகள் OPDக்கு வழங்கப்பட்டன. ஷென்பாக்கத்தின் அன்னை தெரசா கான்வென்ட்டிற்கு முதியோர்களுக்கு கம்பளி வழங்கப் பட்டன.





**RC சென்னை நோலம்பூர்** — RID 3232

சென்னை கார்ப்பரேஷனுடன் ஒருங்கிணைந்து டெங்கு விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டது. சுத்தத்தை கைபிடிக்க அங்குள்ளவர்கள் உறுதி எடுத்துக் கொண்டனர்.



**RC ஜாம்ஷெட்பூர் இஸ்ட்** — RID 3250

காசநோய் நோயாளிகளுக்கு உதவும் வழிகளை விளக்க ரோட்டரியர்கள் நாராயன்பூர் கிராமத்திற்கு வருகை தந்தனர். கடந்த ஐந்து ஆண்டுகளாக காசநோய் விழிப்புணர்வு அமர்வுகளை கிளப் நடத்துகிறது.



**RC புவனேஸ்வர் தோஷாலி** — RID 3262

சட்டமன்ற உறுப்பினர் அனந்த நாராயண் ஜீனா முன்னிலையில் ஜரபாதா பகுதியில் கிளப் உறுப்பினர்கள் 200 மரங்களை நட்டனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

வடிவமைப்பு: L குணசேகரன்

# தியாகிகள் குடும்பத்திற்கு ரோட்டரி உதவி

கிரண் ஜெஹ்ரா

இறுதி சவாரிக்கு சில நிமிடங்களுக்கு முன்பு, தனது பைக்கில் உட்கார்ந்து, RC தானே ஏசஸ், RID 3142இன் உறுப்பினர் ஷோமா சக்ரவர்த்தி, தன் சாதனையை எண்ணி வழியும் தனது கண்ணீரை கட்டுப்படுத்த முயன்றார். 19 ஓட்டுனர்களில் ஒரே பெண்மணி, நாடு முழுவதும் 6,120 கி.மீ.-பேரணியை முடித்ததோடு மட்டுமல்லாமல்,'' பல்வேறு கலாச்சாரங்கள், மரபுகள் மற்றும் நாட்டின் 100 கிளப்புகளைச் சேர்ந்த ரோட்டேரியர்களின் அன்பையும்'' பார்த்திருந்தார். தியாக வீரர்களின் குடும்பங்களுக்கு நிதி திரட்டுதல், இந்தியா முழுவதும் உடற்தகுதியை மேம்படுத்துதல் மற்றும் இந்தியாவில் ரோட்டரியின் நூற்றாண்டு ஆண்டைக் கொண்டாடுவது ஆகிய காரணங்களுக்காக ரோட்டரி பைக் சவாரி கொண்டாடப்படுகிறது.

23 உறுப்பினர்கள் உள்ள இரண்டே மாதங்களான கிளப் RC தானே ஏசஸ், பெரிதாக சாதிக்க விரும்புவதாக கிளப் பிரிசிடெண்ட் மிஹிர் படேல் கூறினார். இந்த பைக் சவாரி வெற்றிபெற நாங்கள் கடுமையாக உழைத்தாலும் ரூ.33 லட்சத்திற்கு மேல் திரட்டுவோம் என்று எங்களுக்குத் தெரியாது,'' என்றார். இந்த முயற்சிக்காக பல்வேறு பைக்கிங் சமூகங்கள், உடற்பயிற்சி ஆர்வலர்கள், இந்திய ராணுவம் மற்றும் பொது மக்களுடன் கிளப் தொடர்பு கொண்டது. நிகழ்ச்சியின் துவக்கத்தில் கிளப் 50 CRPF வீரர்களை பாராட்டியது.

*பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுடன் பைக் ஓட்டுநர்கள்.*








PRID அசோக் மகாஜன், கேலண்டரி விருது பெற்ற கேப்டன் பினேஷ் நாயர் ஆகியோர் இந்த நிகழ்ச்சியை நடத்தும் உறுப்பினர்களை வாழ்த்தினர். ஓட்டுனர்கள் மத்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங்கை சந்திக்க, அவர் கிளப்பின் முயற்சிகளைப் பாராட்டினார்.

DG மோகன் சந்தாவர்க்கர் பைக் சாவாரியின் பாதையில் வரும் DGக்களுடன் தொடர்பு கொள்ள கிளப் உதவியதுடன், ஓட்டுனர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடமும் ஏற்பாடு செய்யப்பட்டது. பல கிளப்கள் நிகழ்ச்சியை நடத்த வைத்து செலவை குறைத்ததாக திட்டத் தலைவர் சஞ்சீவ் ஜெயின் கூறினார். தானே மற்றும் உல்ஹாஸ்நகரில் உள்ள இடங்களிலும் விளம்பர பலகைகளும், சுவரொட்டிகளும் வைக்கப்பட்டிருந்தாலும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மற்ற பள்ளிகள் கல்லூரிகளுடன் இந்த நிகழ்வு குறித்து ரோட்டரேக்டர்கள் பேசியதாக ஜெயின் கூறினார்.

PRIP கல்யாண் பானர்ஜி பைக் ஓட்டுனர்களை பாராட்டினார். அவரது மாவட்டம், RID 3060, வல்சாத் முதல் வதோதரா வரை ஓட்டுனர்களுக்கு அன்பான வரவேற்பு வழங்கியது. ரோட்டரி கிளப்புகள் மற்றும் உள்ளூர் நன்கொடையாளர்களிடமிருந்து பயணத்தின் போது ரூ.500,000 சேகரிக்கப்பட்டது, RC பெங்களூர் இந்திரா நகர், RID 3190, ரூ.150,000 கொடுத்தது.

தவிர, ஓட்டுனர்கள் மற்ற 80 கிளப்புகளுடன் தங்கள் கிளப் கொடிகளை பரிமாறிக் கொண்டனர். சமுதாய முயற்சி கள் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான ஆதித்யா பிர்லா மையத்தின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா மற்றும் ப்ளூ கிராஸ் லேபராட்டரி தலைவர் நிச்சல் இஸ்ரானி ஆகியோர் நன்கொடை அளித்தனர்.

கொல்லப்பட்ட ஒரு சிப்பாயின் குடும்பத்தின் கடினமான வாழ்க்கையைப் பற்றி ரோட்டராக்ட் கிளப் ஆஃப் பில்லாபோங் உயர்நிலைப்பள்ளி ஒரு நாடகத்தை நிகழ்த்தியதைத் தொடர்ந்து ஓட்டுனர்களை பாராட்டும் விழா நிகழ்ந்தது.'' தியாகிகளின் குடும்பங்களுக்கு சேகரிக்கப்பட்ட பணத்தை ஒப்படைக்க ஜூன் வரை பாரத் கே வீருக்கான நிதியை நாங்கள் சேகரிப்பதால் பங்களிக்குமாறு அனைத்து ரோட்டரி கிளப்புகளையும் நான் மனதார கேட்டுக்கொள்கிறேன், என்றார் படேல். ■

*இந்த பைக் சவாரி வெற்றி பெற நாங்கள் கடுமையாக உழைத்தாலும் ரூ.33 லட்சத்திற்கு மேல் திரட்டுவோம் என்று எங்களுக்குத் தெரியாது.*

# மூணாரின் மனதை மயக்கும் அமைதி

LBW

TCA சீனிவாச ராகவன்

சில மாதங்களுக்கு முன்பு, கேரளாவின் மூனாருக்குச் சென்றோம். ஏக்கர் கணக்கான தேயிலை தோட்டத்திற்கிடையில் வாழும் தோட்டக்காரர்கள் சுத்தமான காற்றை சுவாசித்து ஆரோக்கியமான வாழ்க்கையை அனுபவிக்கின்றனர்.

தோட்டத்தின் சின்னமான ஹை ரேஞ்ச் கிளப்பில் தங்கினோம். விளக்குகள் இல்லாத அந்த மலைப்பாதைகளில் பெரும் ஆபத்தில் மோட்டார் சைக்கிள்களில் வந்த தோட்டக்காரர்களின் சந்திப்பு இடமாக இது பயன்படுத்தப்படுகிறது. பொழுதுபோக்கிற்கு வழியில்லாததால் இம்மாதிரி ஆபத்தான பயணம் செய்வது சரியென்றே தோன்றுகிறது.

மலைப்பாதையில் உள்ள கிளப்பில் 18 துளைகள் கொண்ட கோல்ஃப் மைதானத்துடன் நடுவில் பெவிலியனுடன் கூடிய முழுமையான கிரிக்கெட் மைதானம் உள்ளது. நீலகிரியின் வெலிங்கடன் ஜிம்கானாவில் கோல்ஃப் மைதானம் மட்டுமே உண்டு. கிரிக்கெட் மைதானம் கிடையாது.

ஒரு காலத்தில் மைய புள்ளியாக இருந்த பார் இப்போது மூடப்பட்டிருக்கிறது. இங்குள்ள பார்மென்களுக்கு புன்னகைப்பதைவிட வேறு வேலை எதுவுமில்லை.

வியக்கத்தக்க நவீன சமையலறையில் பணிபுரியும் இங்குள்ள சமையல் வித்தகரின் சமையல் அற்புதமாக இருந்தது குறிப்பாக அவர்கள் சிக்கனுடன் வழங்கிய சாஸ் அனைவரையும் கவர செய்யும் வழிமுறையை அவரிடம் கேட்டுக் கொண்டாலும் அவர் போல் செய்வது கடினம்.

நியூசிலாந்தைப் போல அழகாக இருக்கும் மூணாறின் அடர்ந்த காடுகளுடனான இயற்கை காட்சிகள் பிரமிக்க வைக்கின்றன. தேயிலை தோட்டத்தின் ஒழுக்கம் வியக்க வைப்பதோடு நகரில் மனித நடமாட்டமே இல்லையெனலாம். நாங்கள் ஐந்து நாட்களுக்கு காலை 10.30 மணி முதல் மாலை 6 மணி வரை சுற்றி வந்தோம். இது போல் மற்றொன்றிருக்கவே முடியாது என்னும் அளவிற்கு உள்ள மற்றொரு கோல்ஃப் கோர்ஸ் பசுமையுடன் ஏரிக்கு அருகில் கண்களுக்கு ரம்மியமாக இருக்கிறது. குண்டலே கிளப் என்றழைக்கப்படும் இது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கிடையாது.

இங்குள்ள தேவிகுளம் ஏரி ஹனுமான் சீதாவை சுமந்து சென்ற போது கீழே சிந்திய சீதையின் கண்ணீர் துளி ஒரு ஏரியானதாக புராணம் கூறுகிறது. எமரால்டு பச்சை நிற நீர் அருகிலிருக்கும் விஷயங்களை பிரதிபலிக்கும் அளவிற்கு பளிங்கு போலிருக்கிறது. அந்த இடத்தில் பறவைகளின் இன்னிசையை தவிர வேறு சப்தமேயில்லை. 1944இல் மீன் பிடிப்பவர்களுக்காக ஒரு லாக் ஹட் கட்டப்பட்டுள்ளது. இங்கு வருபவர்களின் வருகையை பதிவு செய்ய ஒரு லாக் புக் உள்ளது.

மசூரியும் சிம்லாவையும் போல இதுபோன்ற இடங்களை பாதுகாக்க சாதாரண மனிதர்களின் அனுமதியை தவிர்ப்பது தவிற வேறு வழியில்லை. இல்லையெனில், சில ஆண்டுகளுக்கு முன்பு மூணாரில் நிகழ்ந்ததை போல, ஒரு முழு மலை இடிந்து விழும் அபாயம் ஏற்படும். மலைச் சாலைகளில் வழக்கமாக, ஒரு சந்துக்கு 20 அடி அகலமுள்ள இரண்டு பாதைகளை மட்டுமே கட்ட வேண்டும். ஆனால் ஒருவர் தலா 25 அடி அகலத்தில் நான்கு கட்ட முடிவு செய்ததார்.

பலன் மலை சரிவு ஏற்பட்டது.■

*இங்குள்ள தேவிகுளம் ஏரி ஹனுமான் சீதாவை சுமந்து சென்ற போது கீழே சிந்திய சீதையின் கண்ணீர் துளி ஒரு ஏரியானதாக புராணம் கூறுகிறது.*

# ரோட்டரி செய்தித் துளிகள்



*ரோட்டரி அறக்கட்டளையின் (இந்தியா) தலைவர் மற்றும் PRID P T பிரபாகர் சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற RFI கூட்டத்தில் கொரியாவிலிருந்து TRF அறங்காவலர் சங்கூ யூனைப் வரவேற்றார் அறங்காவலர் குலாம் வஹன்வதியும் உடன் இருந்தார்.*■

---

*DG திரன் தத்தா, RID 3040, தனது காரின் வெளிப்புறத்தை ரோட்டரியின் ஆறு கவனங்கள் மற்றும் பிற முதன்மை திட்டங்களுடன் அலங்கரித்துள்ளார். அவரைச் சந்தித்த RIPN ஷேகர் மேத்தா இந்த வாகனத்தை "ரோட்டரி விளம்பர பலகை" என்று குறிப்பிட்டதை அவர் மகிழ்வுடன் கூறினார்.*

*நான் போக்குவரத்து சந்திப்புகளில் நிறுத்தும்போதெல்லாம் மக்கள் என்னிடம் TEACH, LN-4 போன்று காரில் வரைந்த அம்சங்களையும் பற்றி கேட்கிறார்கள். ரோட்டரி அதன் சேவைகள் பற்றி அவர்களுக்கு விளக்குவேன், என்கிறார் தத்தா.*■




---



*மக்களுக்கு வீடுகள் கட்டுவதில் ரோட்டரியின் பங்களிப்புக் காக கேரள முதல்வர் பினராயி விஜயன், PDG A V பதி, RID 3201ஐ பாராட்டினார்.*

*கேரளாவில் வெள்ளத்திற்கு பின் PRID C பாஸ்கர் பாதிக்கப்பட்ட வர்களுக்கு வீடுகள் கட்ட சுகாதார நிறுவனமான ஆஸ்டர் குழுமத்துடன் இணைந்து "ப்ராஜெக்ட் ஹோப்" ஒன்றைத் தொடங்கினார். RID 3201, அப்போதைய DG A V பதியின் கீழ், இப்பகுதியில் 305 வீடுகளை கட்டியிருந்தது.*■

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35



Rotary

# An appeal to Indian Rotarians

## Please send your contribution to PM Cares Fund

Make your online contribution at *https://bit.ly/2UDBFDy* or visit *www.rotaryindia.org*

Cheques can be made favouring Rotary India Humanity Foundation and sent to:
Skyline House, 2nd Floor, 145, Sarat Bose Road, Kolkata 700 026, West Bengal.

Bank details

| | | |
|---|---|---|
| A/C Name | : | Rotary India Humanity Foundation |
| Bank | : | State Bank of India |
| Branch | : | Hazra Road, Kolkata. |
| A/C No. | : | 31317807754 |
| IFS Code | : | SBIN0001649 |

The money sent by you will be forwarded to the **PM Cares Fund** in its entirety.

After making bank transfer, provide your details at *www.rotaryindia.org* under Fight against COVID-19 section or mail the following details to *resource.mobilization@rihf.org*:

- Transaction details: Amount, Date, NEFT, IMPS, RTGS number.
- Donor details: Name, address, contact number and email id. PAN number, if amount donated is ₹20,000 or more.
- District number and Club name.
- If you have contributed/or wish to contribute directly to the **PM Cares Fund**, in your payer details, apart from your company's name, do mention your Rotary club and district. Then visit the *www.rotaryindia.org* website and upload details of your contribution — a picture of the cheque given or online transfer details.

Dear Fellow Rotarians,

The COVID-19 pandemic has devastated India. The lockdown was necessary but has caused immense hardship to the poor and marginalised sections of our society, particularly the daily wage earner. The government is doing all it can but its coffers are stretched.

The senior leadership of India has discussed this pandemic and suggests that we Rotarians make a contribution of up to ₹25 crore to the **PM Cares Fund**. We urge each and every Rotarian to make a handsome contribution to help the government provide relief to the poor, create new healthcare facilities to deal with the infected, and above all, safeguard our healthcare workers, municipality/corporation and personnel with adequate protective gear. Together we can fight coronavirus. And together we will.

We definitely can do this if we stay, act and work together as a nation during this trying time.

Apart from this, at our club levels, we urge Rotarians to provide whatever help and relief we can to those in need — by providing them groceries, cooked food, and other required supplies. Many of you are already doing great work; I appeal to you to do even more.

Our country needs us at these trying times.

*Shekhar Mehta*
*Rajendra Saboo*
*Panduranga Setty*
*Yash Pal Das*
*C Basker*
*Kamal Sanghvi*
*Kalyan Banerjee*
*Sushil Gupta*
*P T Prabhakar*
*Ravi Vadlamani*
*Bharat Pandya*
*Gulam Vahanvaty*
*Ashok Mahajan*
*Manoj Desai*
*A S Venkatesh*